# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 298 புரட்டாதி 04ஆம் நாள் வியாழக்கிழமை 20 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## உந்துருளி டிப்பர் மோதிய விபத்தில் இளைஞன் சாவு

யாழ்ப்பாணம், செப் 20
மீசாலை ஏ-9 முதன்மைச் சாலையில் நேற்று இரவு டிப்பர் வாகனமும் உந்துருளியும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் சம்பவ >> 24

# பட்டப்பகலில் சாவகச்சேரியில் ரூ. 18 லட்சம் நேற்று கொள்ளை

## தனியொரு நபர் கத்திமுனையில் கைவரிசை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 20
சாவகச்சேரி ஏ- 9 முதன்மைச் சாலையில் அமைந்துள்ள தனியார் நிதி நிறுவனத்தின் காசாளரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி பட்டப்பகலில் 18 லட்சத்து 91 ஆயிரத்து 140 ரூபா பணத்தை தனி ஒரு நபர் கொள்ளையடித்துச் சென்றார் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். காலை 8.30 மணியளவில் இந்தப் பர பரப்புச் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸார் உலங்குவானூர்தி ஊடாகத் தேடுதலை நடத்தியபோதும் நேற்று மாலை வரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. >> 25

நள்ளிரவில் பயங்கரம்

## ஒரே வீட்டின் மீது இரு தடவைகள் வாள்வெட்டுக் கும்பல் தாக்குதல்

### பெற்றோல் குண்டு வீச்சு; 5பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 20
கைதடி ஏ-9 முதன்மைச் சாலையில் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்கு நேர் எதிரே அமைந்துள்ள ஒழுங்கையிலுள்ள வீடொன்றின் மீது நேற்று நள்ளிரவு இரண்டு தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முகங்களை மூடிக்கட்டியவாறு வாள்களுடன் வந்த கும்பல், வீட்டிலிருந்தவர்களை வெட்டியது. உடமைகளை அடித்து நொருக்கியது. >> 25

## நள்ளிரவில் வீட்டின் மீது திடீர் தாக்குதல்

### மட்டுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 20
மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்துக்கு அருகிலுள்ள வீட்டின் மீது நேற்று அதிகாலை 12.10 மணியளவில் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டின் முன்பக்க யன்னல் கண்ணாடிகள், மின் குமிழ்கள், கதிரைகள் என்பன அடித்து நொருக்கப்பட்டுள்ளன. கதிரைகள் தீ வைத்து எரியூட்டப்பட்டும் உள்ளன. >> 25

## பேருந்துக் கட்டணம் 4 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, செப். 20
பேருந்துக் கட்டணங்கள் 4 சதவீதத்தினால் அதிகரிக்கப்படுவதாக போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார். >> 25

## தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் சட்டமா அதிபருடன் பேசியே முடிவு

### தலைமை அமைச்சர் ரணில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 20
தமிழ் அரசியல் கைதிகளை குறுகியகால மறுவாழ்வு வழங்கி விடுவிப்பது தொடர்பில்சட்டமாஅதிபருடன்பேசியே முடிவு செய்ய முடியும். என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த போராட்டம் >> 25

## யாழ். பல்கலையில் ஆவாக் குழுவாம்

### மகிந்த அணி கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 20
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நினைவுத் தூபி திறப்பு விழாவின் போது >> 25

## சுருக்குவலைக்கு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி நிறுத்தம்

### மீன்பிடி அமைச்சர் உறுதியளிப்பு

முல்லைத்தீவு, செப். 20
முல்லைத்தீவு மாவட்டத்தில் சுருக்குவலைக்கு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதி உடனடியாக நிறுத்தப்படும். மாவட்ட கடற்தொழில் திணைக்களத்தில் பணியாற்றும் சர்ச்சைக்குரிய 3 >> 25



## குருதிக் கண்ணீர் வடிக்கும் சாட்டி சிந்தாத்திரை மாதா

யாழ்ப்பாணம், செப். 20
சாட்டி புனித சிந்தாத்திரை அன்னையின் சொரூபத்தில் இருந்து குருதிக் கண்ணீர் வடிவது நேற்று அவதானிக்கப்பட்டுள்ளதாகப் பக்தர்கள் >> 25

## திலீபனின் இறுதிநாள் நினைவேந்தலை யாழ். மாநகர சபையே முன்னெடுக்கும்

### முதல்நாளில் ஏற்பட்ட குழப்பங்களையடுத்து மேயர் ஆர்னோல்ட் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 20
தியாகதீபம் திலீபனின் இறுதிநாள் நினைவேந்தல் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முழுமையான ஏற்பாட்டிலேயே இடம்பெறும். அன்றைய தினம் நினைவுத் தூபியை அண்மித்துள்ள பகுதியில் வேறு எந்த நிகழ்வுகளுக்கும் அனுமதி வழங்கப்படாது. என்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் இ.ஆர்னோல்ட் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் >> 25




## காணாமல்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு



மன்னார், செப். 20
தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போனதாகத் தேடப்பட்டு வந்த மீனவர் மூன்று தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடலில் அவரது சடலம் மிதந்த நிலையில் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

தலைமன்னார் பியர் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இ.சிறிகாந் (வயது-30) கடந்த ஞாயிற்றுக் கிழமைவழமைபோன்று மீன்பிடிக்குச் சென்றுள்ளார். வெளிக்கள இயந்திரப் படகில் தனித்தே மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

தலைமன்னார் கடற்கரையிலிருந்து வட கடல் பக்கமாக சுமார் பத்து கடல் கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் வலைகளை போட்டுக் கொண்டிருந்த சமயமே இவர் காணாமல் போனதாக நம்பப்படுகின்றது. அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்ட வேறு மீனவர்கள், கடலில் அநாதரவாக வலையும் படகும் இருப்பதைக் கண்டறிந்தனர். இதன்போதே சிறிகாந் காணாமல்போனமை தெரியவந்தது.

தலைமன்னார் பொலிஸாருக்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து தலைமன்னார் பொலிஸார் திங்கட்கிழமை, காணாமல்போனவர் கொண்டு சென்ற படகையும் வலைகளையும் மீட்டு கரை சேர்த்தனர்.

காணாமல் போன மீனவரைத் தேடி தலைமன்னார் கடற்படையினரும் கிராம மக்களும் சுமார் முப்பது படகுகளில் கூட்டாக தேடுதலை நடத்தினர். இந்த நிலையில் நேற்றுக் காலை தலைமன்னார் கடற்பரப்பில் சடலம் மிதந்துள்ளது. சடலத்தை மீட்டு கரைக்கு கொண்டு வந்துள்ளனர். (5,60)

*ட்ரம்பின் செயற்பாட்டாலேயே*

## டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

*அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு*

அமெரிக்க வங்கிகளின் வட்டிவீதத்தை அந்த நாட்டு அரச தலைவர் ட்ரம்ப் அதிகரித்திருக்கின்றார். குறிப்பாக 0.2 இலிருந்து 1 வீதமாக வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. உலகில் பல நாடுகளிலும் டொலரின் பெறுமதி அதிகரிக்கின்றது.

ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைகின்ற நிலையில் இன்றைய தினம் (நேற்று) அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை ரூ. 167.41 சதமாக உயர்வடைந்தது. கொள்வனவு விலை ரூ.163. 83 சதமாக உயர்வடைந்துள்ளது.

இலங்கையில் இதுவே மிகக்கூடிய அளவான டொலர் விற்பனை விலையாக கருதப்படுகின்றது.

இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேரனாரட்னவிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)

## 5 ரூபாவால் பாண் விலை குறையலாம்

யாழ்ப்பாணம், செப் 20
அடுத்து வரும் சில தினங்களுக்குள் பாணின் விலையை 5 ரூபாவால் குறைக்க தீர்மானித்துள்ளதாக அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி உரிமையாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினை தொடர்பில் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுடன் நேற்று இடம் பெற்ற பேச்சை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் 5 ரூபாவால் பாணின் விலை அதிகரிக்கப்பட்டது. கோதுமை மாவின் விலையேற்றத்தை அடுத்து பாணின் விலை அதிகரிக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட கோதுமை மாவின் விலையை குறித்த நிறுவனங்களுடன் பேச்சு மேற்கொண்டு முன்னர் இருந்த விலைக்கே குறைத்து தருவதவதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் பாணின் விலையையும் மீண்டும் குறைக்குமாறு அமைச்சர் வேண்டிக்கொண்டதனை அடுத்து அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. சில நாட்களுக்குள் பாணின் விலை குறையும் - என்றார். (உ-7-5)

## போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது




யாழ்ப்பாணம், செப்.20
யாழ்ப்பாணத்தில் இரு வேறு பிரதேசங்களில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச் சாட்டில் நால்வர் நேற்று இரவு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இனுவில் பிரதேசத்தில் மாவா பாக்கை உடைமையில் வைத்திருந்த மூவர் நேற்று மாலை மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து 35 கிராம் மாவா பாக்கு மீட்கப்பட்டது. இவர்கள் சாவல்கட்டு மற்றும் இனுவில் பிரதேசத்தை சேர்ந்த 20 தொடக்கம் 25 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

புன்னாலை கட்டுவன் வீமன் காமன் சந்தைப் பகுதியில் கஞ்சா வைத்திருந்த நபர் காங்கேசன்துறை சிறப்பு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டார். சந்தைக்கு அண்மையில் நின்றிருந்த நபரை பொலிஸார் சோதனை செய்தனர் . இதன் போது சந்தேக நபரின் உடைமையில் இருந்து 80 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சதேக நபர் மேலதிக நடவடிக்கைகளுக்காக காங்கேசன் துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (7-26)

## மத்தியஸ்தசபை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 20
வல்லிபுர ஆழ்வார் தேர்த்திரு விழாவை முன்னிட்டு கரவெட்டி பிரதேச மத்தியஸ்த சபை எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற மாட்டாது என்று அதன் தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்தார். அன்றைய தினப் பிணக்குகள் யாவும் எதிர்வரும் 22ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு தண்டம்



சாவகச்சேரி, செப். 20
அனுமதிப் பத்திரமின்றி மணல்ஏற்றிவந்தவாகனச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து சாவகச்சேரிநீதிமன்றம்தீர்ப்பிட்டது.

தனங்களப்பு பகுதியில் கடந்த மாதம் 24ஆம் திகதி அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த சாரதிக்குஎதிராகசாவகச்சேரி பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம்விசாரணைக்குஎடுக்கப்பட்டது.

சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, வழக்கை விசாரித்த நீதவான் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் கட்டளையிட்டார். (ம-9,159)

## அனுமதியின்றி கடலட்டை பிடித்தவர்கள் மறியலில்

யாழ்ப்பாணம், செப்.20
வடமராட்சி கிழக்கில் அனுமதியின்றி கடல்டை பிடித்தனர் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு சந்தேகநபர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

வடமராட்சி கிழக்கு கடல் பரப்பில் கடல் அட்டை பிடித்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 8 பேரை உள்ளூர் மீனவர்கள் நேற்று முன்தினம் தடுத்து வைத்திருத்தனர். அதன் பின்னர் பொலிஸாருக்கும் பிரதேச வாசிகளுக்கும் இடையே நீண்ட முறுகல் நிலையின் பின்னர் சந்தேக நபர்களை பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

சந்தேக நபர்கள்பருத்தித்துறை பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன் போது 6 சந்தேக நபர்கள் அனுமதி பெற்று கடல் அட்டை பிடித்துள்ளனர் என்றும் அவர்களில் இருவர் அனுமதி பெறாமல் கடல் அட்டை பிடித்தனர் என்று தெரியவந்துள்ளது. ஆகவே இரு சந்தேக நபர்களும் நேற்று நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (7-26)

## காக்கைதீவில் தாம் விட்ட நாய்களை மாநகர சபையே பிடித்துச் செல்லட்டும்

*வலி.தென்மேற்குப் பிரதேச சபை தீர்மானம்*

யாழ்ப்பாணம், செப்.20
நல்லூர் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் நலன் கருதி யாழ்ப்பாண மாநகர சபையினால் பிடிக்கப்பட்டு காக்கைதீவுப் பகுதியில் விடப்பட்ட கட்டாக்காலி நாய்கள் மீண்டும் அங்கிருந்து பிடித்துச் செல்லப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளது வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை. இது தொடர்பான தீர்மானம் நேற்று இடம்பெற்ற பிரதேச சபை அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வு தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சபை உறுப்பினர் திருமதி செந்தினி தருமசீலன் ஒரு தீர்பிமான வரைவை முன்வைத்தார். நல்லூர் ஆலயச் சூழலில் திரிந்த முப்பதுக்கும் மேற்பட்ட நாய்கள் கட்டாக்காலி நாய்கள் யாழ். மாநகர சபையினரால் பிடிக்கப்பட்டு காக்கைதீவுப் பகுதியில் விடப்பட்டன.

அந்த நாய்கள் அருகிலுள்ள குடிமனைகளுக்குள் புகுந்து அங்குள்ள நாய்களையும் கால்நடைகளையும் கண்டிக்கின்றன என்கிற குற்றச்சாட்டு எழுந்துள்ளதாக உறுப்பினர் தனது உரையில் தெரிவித்தார். உணவுத் தேவைக்காகக் கழிவுகளை வீதியில் இழுத்துக் கொட்டுவதால் சுகாதாரப் பிரச்சினையும் ஏற்படுகின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வீதியால் செல்பவர்களையும் இந்த நாய்கள் துரத்திச் செல்கின்றன . ஆகவே மாநகர சபையினரால் கொண்டு வந்து விடப்பட்ட கட்டாக்காலி நாய்களை மீண்டும் அவர்களே பிடித்துச் செல்ல வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்த தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (உ-7)

## ஓ.எம்.பி. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த விஜயதாச தலைமையில் அமைச்சரவை உபகுழு

கொழும்பு, செப். 20
காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தினால் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தலைமையில் 10பேர் கொண்ட அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவை நியமிப்பதற்கும், உப குழுவினால் வழங்கப்படும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வசதிகளை மேற்கொள்ளவும், அனுமதி வழங்கக் கோரி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் சமர்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச தலைவரினால் சமர்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளதாவது, காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தால் 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் மூலம் பாதிப்பை ஈடுசெய்யக்கூடிய சட்டரீதியிலான பொறுப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை, இவ்வாறான சம்பவம் மீண்டும் இடம் பெறாத வகையில் பார்த்துக் கொள்வதற்கான சட்ட ரீதியிலான மறுசீரமைப்பு மேற்கொள்வது தொடர்பில் தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்துள்ளது.

இதே போன்று பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிதி உதவி வேலைத் திட்டம் கடன் உதவி வேலைத் திட்டம், வீடமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டம், கல்வி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத் திட்டம், தொழிற்பயிற்சி, வாழ்க்கை நிலையை மேம்படுத்துதல், தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

இந்தப் பரிந்துரைகளை மதிப்பீடு செய்து பொருத்தமான எதிர்கால நடவடிக்கைகளுக்கான பரிந்துரைப்பதற்காக அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தலைமையில் கீழ் மேலும் 10 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை துணை குழு ஒன்றை நியமிப்பதற்கும் உப குழுவின் ஆலோசகைளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை செய்வதற்கும் அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டது. இந்தப் பத்திரத்துக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கூடாது என்று வலியுறுத்தி வருபவர். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டமை தவறு என்று கருத்துத் தெரிவித்திருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில்

# சிவில் பாதுகாப்புபடையினருக்கும் மக்களுக்கும் இடையில் முறுகல்

கிளிநொச்சி ,செப் .20

**கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் சிவில் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் காணியை மக்கள் அத்துமீறிப்பிடித்ததாகக் கூறி முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.**





குறித்த பகுதியில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினரால் விவசாயம் செய்யப்பட்டு வந்த காணியில் மக்கள் அத்துமீறி கொட்டகைகளை அமைத்ததாக சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் திணைக்களம் தெரிவிக்கின்றது.

நேற்று காலை குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டகைகளை சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊழியர்கள் அகற்றிய வேளையிலேயே மக்களிற்கும். திணைக்கள ஊழியர்களிற்குமிடையில் அமைதியின்மை ஏற்பட்டது. இதன் போது கைகலப்பும் ஏற்பட்டுள்ளது.

சிவில் திணைக்கள ஊழியர்கள் தம்மை தாக்கியதாக பொலிஸ் அதிகாரிக்கு தெரியப்படுத்தினர். அவ்வாறு இருப்பின் பொலிசிடம் வருகைதந்து முறைப்பாட்டினை பதிவு செய்யுமாறு மக்கள் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். அத்தோடு குறித்த காணி இராணுவத்தின் பயன்பாட்டில் காணப்பட்டது .இராணுவம் விடுவித்த பின்னர் காணி அற்ற மக்கள் குறித்த காணியில் தற்காலிக வீடுகளை அமைத்துள்ளனர்.

ஆனால் தமது விவசாய நடவடிக்கைக்கு ஒதுக்கப்பட்ட காணி என தெரிவித்து சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர் நேற்றைய தினம் மக்கள் அமைத்த கொட்டகைகளை பிடிங்கியுள்ளனர். அதனால் அங்கு முறுகல் நிலை எற்பட்டுள்ளது. சுமார் ஒரு மணிநேரம் நீடித்த குறித்த அமைதியின்மையின்போது அப்பகுதியில் பதட்டமான சூழல் காணப்பட்ட நிலையில் பொலிஸார் வர வழைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த கிளிநொச்சி பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன்போது எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன், பொலிஸார் தொடர்ந்தும் அப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும், குறித்த வழங்கின் பின்னர் காணி விடயம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர் எனவும் பொலிஸார் அவ்விடத்தில் குறிப்பிட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இது தொடர்பாக கரைச்சி பிரதேச செயலர் குறிப்பிடும் போது. இந்த காணிகளின் உரிமையாளர்கள் இருக்கின்றனர் மேற்படி காணிகள் படித்த மகளிர் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டவை .சுமார் 217 ஏக்கர் கொண்ட இந்த காணியை சிவில் பாதுகாப்பு திணைக்களம் உரிய முறைப்படி கையளிக்கவில்லை விவசாய செய்கையை விட்டு ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து வெளியேறி இருக்கின்றனர் அந்த காணித்தொகுதிக்குள் அரசுக்கு சொந்தமான காணிகள் இருப்பின் கட்டாயமாக அவற்றை மக்களுக்கு கையளிக்க தான் தயாராக இருப்பதாக தெரிவித்தார் .

(6-214)

## மன்னார் 'சதொச' வளாகத்தில் 136 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிப்பு

மன்னார் ,செப் .20



மன்னார் 'சதொச' வளாகத்தில் தொடர்ச்சியாக பல்வேறு கேள்விகள் சந்தோகங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்று 74 ஆவது தடவையாக அகழ்வு பணிகள் இடம் பெற்று வருகின்றது.

மன்னார் மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவின் மேற்பார்வையில் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ மற்றும் களனிப் பல்கலைகழக பேராசிரியர் ராஜ் சோம தேவ ஆகியோரின் தலைமையில் அகழ்வு பணிகள் இடம் பெற்று வருகின்றது.

அகழ்வு பணிகளை விரைவு படுத்தும் வகையில் தற்போது அகழ்வுப் பணியின்போது மேலதிகமாக உத்தியோகஸ்தர்கள் இணைக்கப்பட்டு அகழ்வுகள் இடம் பெற்று வருகின்றது.

நேற்று இடம் பெற்ற அகழ்வு பணிகள் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு காலை 11 மணியளவில் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ கருத்து தெரிவித்தார்.

மன்னார் 'சதொச' வளாகத்தில் நேற்று புதன்கிழமையுடன் 74 ஆவது தடவையாக அகழ்வு பணிகள் இடம் பெற்றுள்ளது. குறித்த வளாகத்தில் இருந்து இது வரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 136 மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் மீட்கப்பட்ட 130 மனித எலும்புக்கூடுகள் மன்னார் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளது.

அகழ்வுப் பணிகள் இடம் பெறும் தினங்களில் காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரைக்கும். மாலை 3.30 மணி தொடக்கம் 4.30 மணி வரைக்கும் ஊடகவியலாளர்கள் அகழ்வுப் பணி இடம் பெறும் வளாகத்திற்குள் சென்று தமது கடமையை மேற்கொள்ள முடியும். ஒவ்வொரு புதன்கிழமையும் காலை 10.30 மணி முதல் 11 மணி வரையில் வாராந்த பதிவுகள் ஊடகங்களுக்கு கருத்தாக வழங்கப்படும் என சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ மேலும் தெரிவித்தார்.

(56)



## பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு

வவுனியா ,செப் .20

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யக்கோரி மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றிற்கு வவுனியா மாவட்ட பொது அமைப்புகளால் அழைப்புவிடுக்க பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றுக் காலை வவுனியா தொடருந்து நிலைய வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஒன்று கூடிய வவுனியா மாவட்ட பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளால் குறித்தவிடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது. அதன்படி எதிர்வரும் சனிக்கிழமை 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக மாபெரும் கவனவீ ர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்வதாக முடிவெடுக்கபட்டது. அதற்கமைவாக பொது அமைப்புகள் அரசியல்கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கிய 10 பேர் கொண்ட குழு ஒன்றும் உருவாக்கபட்டதுடன், குறித்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாணசபை உறுப்பினர் இந்திர ராஜா, நகரசபை தலைவர் இ. கௌதமன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இறந்தக் கலந்துரையாடலில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளையும் இணைத்து மாபெரும் ஆர்பாட்டம் ஒன்றை மேற்க்கொள்வது தொடர்பாக பலர் தமது கருத்துக்களை முன்வைத்திருந்ததுடன், குறித்தவிடயம் தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை முடக்க வேண்டும் என்றும் பலர்கருத்து கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(110)

## மன்னார் நகரத்துக்கு றிஸாட் என்ன செய்தார் நகர சபையின் 7 ஆவது அமர்வில் சலசலப்பு

மன்னார் ,செப் .20

தான் எந்த நிகழ்வுக்கு வந்துள்ளேன் என்பதைக் கூட அறிந்து கொள்ளாமல் மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவரைப் பற்றியும், தற்போதைய தலைவராகிய என்னைப்பற்றியுமே கதைத்தாரே தவிர மன்னாரிற்கு அமைச்சர் என்னத்தை செய்துள்ளார் என மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் கேள்வி எழுப்பிய நிலையில் சபையில் வாதப்பிரதி வாதங்களும் சலசலப்பும் ஏற்பட்டது.

மன்னார் நகர சபையின் 7 ஆவது அமர்வு நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் நகர சபையின் சபா மண்டபத்தில் இடம் பெற்றது. இதன் போது அமர்வின் தலைமை உரையில்

மன்னாரில் அண்மையில் இடம் பெற்ற ஹஜ் விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் றிஸாட் பதியுதீன் மன்னார் நகர சபை மற்றும் நகர சபையின் தலைவர் தொடர்பாக உரையாற்றியுள்ளார்.

தான் என்ன நிகழ்வுக்கு வந்துள்ளேன் என்பதைக் கூட அறிந்து கொள்ளாமல் மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவரைப் பற்றியும், தற்போதைய தலைவராகிய என்னைப்பற்றியுமே கதைத்தாரே தவிர மன்னாரிற்கு தான் பல அபிவிருத்தி திட்டங்களை கொண்டு வந்த போதும் அதற்கு முன்னாள் நகர சபையின் தலைவர் தடை விதித்திருந்ததாகவும், தற்போதைய நகர சபையின் தலைவரும் அதைத்தான் செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நான் அந்த அமைச்சரிடம் ஒரு விடையத்தை கேட்க விரும்புகின்றேன்.

ஏற்கனவே இருந்த நகர சபை தலைவரின் முற்பட்ட காலத்தில் அமைச்சர் இருந்திருக்கின்றார்.

அந்த அமைச்சர் மன்னார் நகரப்பகுதியிலே தன்னால் செய்து முடித்த வேலைத்திட்டங்கள் என்ன? அதன் பிற்பாடு நகர சபை ஆட்சி அமைத்த காலத்தின் அவர் செய்த வேலைத்திட்டம் என்ன? கடந்த நகர சபையின் ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னர் செயலரிடம் ஒப்படைக்கப்பட்ட நகர சபைக்கு அவர் அந்த காலத்தில் செய்த வேலைத்திட்டங்கள் தான் என்ன?

நாங்கள் தற்போது என்ன அபிவிருத்தி திட்டங்களுக்கு தடையாக இருக்கின்றோம். அமைச்சர் அந்த விடையங்களை தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். நாங்கள் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றோம் என்பதனை எல்லா இடங்களிலும் கதைப்பதை விடுத்து அவர் மன்னார் நகரத்திற்கு என்ன அபிவிருத்தியைக் கொண்டு வந்தார் என்பதனை எங்களுக்கு தெரியப்படுத்தட்டும்.

நாங்கள் நல்ல செயல்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றோம். எதிர் காலத்திலே இன்னும் நல்ல விடையங்களை செய்ய இருக்கின்றோம்.

அந்த விடையங்களை தடுத்து நிறுத்துவதற்காகவே அமைச்சர் குறித்த விடையங்களில் ஈடுபடுகின்றார் என சந்தேப்படுகின்றோம். அண்மையில் மன்னார் நகர சபை பகுதியில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்த போது பல்வேறு இடையூறுகள் எமக்கு வந்தது.

அதற்கு பின்னணியில் கூட இவர் தான் உள்ளாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் வந்தது மக்களுக்கு சேவை செய்யவே. மக்களுக்கு தேவையான அபிவிருத்திகளை செய்ய வேண்டும் என்பதே எமது நோக்கம். எந்த தடைகள் வந்தாலும் அதனை உடைத்தெறிந்து நல்ல முறையில் பயணிப்பதே எமது இலக்கு என அவர் தெரிவித்தார்.

(56)

# போக்குவரத்து நெரிசல்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள்

*யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

*யாழ்ப்பாணம், செப். 20*

யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் போக்குவரத்து நெரிசல்களை குறைக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜயசுந்தர தெரிவித்தார்.


யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து பிரச்சினைகள் மற்றும் விபத்துகளைத்தடுப்பதுதொடர்பாகநேற்று முன்தினம்இடம்பெற்றகலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத்துக்களைப் பகிரும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து நெரிசல்கள், விபத்துக்ளைக்கட்டுப்படுத்தும் நோக்கில் நாம் வீதி ஒழுங்கு தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடினோம். முக்கிய வீதிகளில் உள்ள குறைபாடுகளைஒளிப்படங்களின் ஆதாரத்துடன் உரிய அதிகாரிகளுக்குத்தெரியப்படுத்தியுள்ளோம். குறிப்பாக யாழ்ப்பாண நகரின் முதன்மை வீதிகளில் வீதிக் கோடுகள் உரிய முறையில் வரையப்படவில்லை. அதிலும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னாள்உள்ளபாதசாரிகடவைஆபத்தினைஏற்படுத்தக்கூடியவகையில் அமைந்துள்ளது. மண்டபத்தின் வாசலுக்கு நேரெதிரே காணப்படுகின்றது. இதனால் மண்டபத்தில் இருந்து வீதிக்கு வரும் சிறுவர்கள், பெரியவர்கள் திடீரென வீதியைக் கடப்பதால்அதிகவிபத்துகள்அங்கு இடம்பெறுகின்றன.எனவேஅந்தக் கடவையைஅந்தஇடத்தில்இருந்து சற்றுத்தூரம் தள்ளி மாற்றி அமைக்கவேண்டும். எனவீதிஅபிவிருத்தி அதிகார சபையைக் கோரியுள்ளேன்.

யாழ்ப்பாணநகரில்போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடமாக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின்வீதிகாணப்படுகின்றது. அங்கு மூன்று முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் உள்ளன. முச்சக்கர வண்டிகளை அங்கு நிறுத்தாது, அங்கு சேவையில் ஈடுபடும் சாரதிகளின் தொடர்பு இலக்கங்களுடன் விளம்பரப்பலகையைவைப்பதன்ஊடாக வாகன நெரிசலைக் குறைக்க முடியும். இதை அவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாண நகர்ப்புறத்தில் உள்ள சிலபுடைவைவியாபாரநிலையங்கள் நடைபாதைகளில் புடைவையையும், பொம்மைகளையும் காட்சிப் படுத்துகின்றன. இதனால் நடைபாதையில்பயணிக்கவேண்டியமக்கள்வீதியில்நடக்கின்றனர். இதனால் விபத்து ஏற்படுகின்றது. எனவே அவாறான கடைக்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை இனிவரும் காலங்களில்



கைதடி குட்டிப் பிள்ளையார் கோவிலுக்கு 90 மில்லியன்ரூபாசெலவில்சித்திரத்தேர்அமைக்கப்படவுள்ளது. இதற்கானபவளக்கால்நடும்நிகழ்வுகடந்த சனிக்கிழமை நடைபெற்றது. மட்டுவில் கோகிலா சிற்பாலயத்தின் ஸ்தபதி க.கதிர்ரஞ்சன் தலைமையிலான குழுவினர் சித்திரத் தேரினை வடிவமைத்து வழங்கவுள்ளனர். (ம-9)



நெல்லியடி மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி நற்குணலிங்கம் கலந்துகொண்டார். (ம)

## போதிய வருமானம் இல்லாததால் அபிவிருத்தி செய்வதில் சிரமங்கள்

*பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் அரியகுமார் இவ்வாறு சுட்டிக்காட்டல்*

வடமராட்சி, செப்.19

“போதியவருமானம் இன்மையால்அபிவிருத்திகளைமேற்கொள்வதில் சிரமங்கள்ஏற்பட்டுள்ளன. சபைக்குவருமானத்தைப்பெற்றுக்கொள்ளும் வகையில் வர்த்தகக் கட்டடத் தொகுதி ஒன்றை நிறுவுவதற்கு விரைந்து நடவடிக்கைகள் மேக்கொள்ளப்படும்” என்று பருத்தித்துறைப் பிரதேச சபைத் தவிசாளர் அ.சா.அரியகுமார் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதேசசபையின் இந்த மாதத்துக்கான கூட்டம் நேற்று முன்தினம் சபைமாநாட்டுமண்டபத்தில்நடைபெற்றது. கூட்டத்தில்தலைமையுரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:


பருத்தித்துறைப்பிரதேசசபைக்குபோதியவருமானம்இல்லை. இதனால் வருமானத்தைப்பெருக்கக்கூடியநடவடிக்கைகளில்சபைவிரைந்துஈடுபட வேண்டும். ஆதன வரிகள், முத்திரை வரி, நீதிமன்றக் குற்றப்பணம் என்பவற்றை விரைவாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். சபைக்குவருமானம்ஈட்டக்கூடியவழிவகைகளை, ஆலோசனைகளை உறுப்பினர்கள் வழங்க வேண்டும். பிரதேச சபைக்குத் தேவையான வருமானத்தை வசூலித்து அதை வைத்துத்தான் பிரதேச அபிவிருத்தியைச்செய்யவேண்டும். வருமானம்குறைந்தபிரதேசசபைகளில்எமது பிரதேச சபையும் ஒன்று.

போர்முடிந்தபின்னர்பலஉள்ளூராட்சிச்சபைகள்வருமானத்தின்மட்டில் பழையநிலைக்குத்திரும்பிவிட்டன. ஆனால்எமக்குவருமானம்கிடைக்கவில்லை. இதனால் அபிவிருத்திகளைச் செய்ய முடியாமல் உள்ளது. சபைக்குரிய கடந்த கால ஆதன வரிகள் அறவிடப்படவில்லை. திணைக்களம் கடனுதவி வழங்கத் தயாராக உள்ளது. அந்தத் திட்டங்கள் மூலம் சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். வருமானத்தின் மூலமே அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும் - என்றார். (ம-173)

## ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள்

வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் 2018ஆம் ஆண்டுக்கான தனது நிதிஒதுக்கீட்டின் மூலம் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

மேற்படி பாடசாலைச் சமூகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக அண்மையில் பாடசாலையை நேரில்சென்று பார்வையிட்ட வடக்குமாகாண சபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர்களான ஞானகரன் லக்ஸ்மன், கந்தையா சகாதேவன்மற்றும்சுதர்சன்இரத்தினமாலா ஆகியோர் ஊடாக நேற்றுமுன்தினம் அந்தப்பாடசாலைக்குஉபகரணங்களை வழங்கிவைத்தார். (ம)



## ‘வெற்றிகர’ இருதய அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவ நிபுணருக்கு தென்மராட்சியில் பாராட்டு

சாவகச்சேரி, செப். 19

யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் முதன்முறையாக இருதய அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட மட்டுவிலைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் சி.முகுந்தனுக்கு தென்மராட்சி பிரதேச மக்கள் பாராட்டி மதிப்பளிக்கவுள்ளனர்.

சாவகச்சேரி சிவன் கோவிலடி தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் அடுத்த மாதம் 7ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ நிபுணருக்கு பாராட்டு நடத்துவது தொடர்பாக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த 15ஆம் திகதியன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டோரால் முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும். விழாவை முன்னெடுப்பது தொடர்பாக ச.லலீசன் தலைமையிலான குழுநியமிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9,159)

## புத்தூர் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் 12 குத்து விளக்குகள் ஞாயிறன்று திருட்டு

யாழ்ப்பாணம், செப். 20

ஆவரங்கால் கிழக்கு மணல்பகுதி புத்தூர் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 12 குத்துவிளக்குகள், ஒரு 'சிடிபிளேயர்' என்பன திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. கடந்த இரண்டு தினங்களாக நடத்தப்பட்ட தேடுதலை அடுத்துதிருடப்பட்ட பொருள்கள் நேற்று மீட்கப்பட்டன. ஊர் மக்கள் வழங்கிய தகவல்களையடுத்து சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## இரு ஈருருளிகள் சாவ. நீதிமன்றில் ஒப்படைப்பு

சாவ்கச்சேரி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில்தேடுவார் அற்ற நிலையில்மீட்கப்பட்டஇருஈருருளிகள்பொலிசாரால்சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டன. (ம-9,159)

### ஜனசக்தி முன்பள்ளிக்கு நீர்ப்பம்பி அன்பளிப்பு

கைதடிஉதவும்கரங்கள்அமைப்பால் சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி முன்பள்ளிக்கு நீர் இறைக்கும் இயந்திரமொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசித்துவரும் செ.பவதாஸ் என்பவரின் அனுசரணையிலேயேஇந்தநீர்இறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்துவழங்கப்பட்டது. (ம-159)

## மின்சாரம் தாக்கியதால் குடும்பத்தலைவர் மருத்துவமனையில்

மின்சாரம் தாக்கியதால் மரத்திலிருந்து தூக்கி வீசப்பட்ட குடும்பத்தலைவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் மிருசுவில் விடத்தற்பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த பரமன் ரதீஸ்குமார் (வயது - 35) என்பவர் விடத்தற்பளையில் உள்ள காணியில் தேங்காய் பிடுங்க மரத்தில் ஏறி தேங்காய் பறித்துவிட்டு மின்கம்பியில் தொட்டுக்கொண்டிருந்த தென்னோலையை வெட்டிய வேளையிலேயே மின்சாரம் தாக்கி மரத்திலிருந்து தூக்கி வீசப்பட்டார் என்று தெரியவருகிறது.

பாதிக்கப்பட்ட நபர் கொடிகாமம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம-9.159)



யாழ்ப்பாண மாவட்டத்தில் குரும்பசிட்டிப் பகுதியில் மீளக் குடியமர்ந்த 100 குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி கலந்துகொண்டார். (ம)

### காங்கேசன்துறை தொழிற்சாலை வளாகத்தில்

# 100 ஏக்கர் பரப்பளவு 2019இல் அபிவிருத்தி


யாழ்ப்பாணம், செப். 20

**காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள 330 ஏக்கர் காணியில் 100 ஏக்கர்களை அடுத்த வருடம் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.**

**முன்னொரு காலத்தில் வடபகுதியின் முக்கிய தொழிற்சாலையாக இருந்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை போரின்போது சிதிலமடைந்தது.**

போர் முடிவடைந்து மக்கள் ஓரளவு மீளக் குடியமர்ந்த பின்னர் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் வலுப்பெற்றன. எனினும் சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் காரணமாக தொழிற்சாலையை மீண்டும் இயக்க முடியாத சூழல் உருவானது.

கடந்த மே மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் "சீமெந்துத் தொழிற்சாலை அமைந்திருக்கும் பகுதி தொழில்நுட்ப வலயமாகவும், கைத் தொழில் வலயமாகவும் மாற்றப்படும்" என்று தெரிவித்திருந்தார். இதன் பின்னராக நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகளின் அடிப்படையில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக குறித்த பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு கைத்தொழில் மற்றும் வர்த்த அலுவல்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் வழங்கிய ஆவணங்களுக்கு அமைச்சரவை அண்மையில் அங்கீகாரம் கொடுத்தது. 998 மில்லியன் ரூபா செலவில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள வளாகம் சிறிய கைத் தொழில்கள் வலயமாக மாற்றப்படவுள்ளது.



அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதன்போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள வளாகத்தில் 100 ஏக்கர் பரப்பளவை அடுத்த வருடம் அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக சம்மந்தப்பட்ட அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குமாக தகுதியான முதலீட்டாளர்களை தெரிவுசெய்வதற்காக கைத்தொழில் மற்றும் வர்த்த அலுவல்கள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (ம)

# சுதுமலையில் எதிர்காலத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள்


### நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 20

"சிறுவர் பூங்கா, மகளிருக்கான உட்கட்டுமான வேலைத் திட்டங்கள் என்பன சுதுமலையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும்" என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

சுதுமலை கிராம அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

"எமது நாட்டில் பல அமைச்சுக்கள் எம்முடன் கைகோர்த்துள்ளன. இதனால்தான் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில உள்ளூராட்சி மன்றங்களின் சந்தைகள், வீதிகள், மதகுகள், கால்வாய்கள், சனசமூக நிலையங்கள் எனப் பல உட்கட்டுமான அபிவிருத்திகளை, வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றோம். சிறுவர் பூங்கா, மகளிருக்கான உட்கட்டுமான வேலைத் திட்டங்கள் என்பன சுதுமலையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். இதைவிட கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் (கம்ரெலிய) ஊள்ளூராட்சி சபையூடாக முன்மொழியப்பட்ட சபைத் தேவைகளின் முன்மொழிவுகளை சம்மந்தப்பட்ட அமைச்சுக்களுக்குப் பாரப்படுத்தியுள்ளேன். வீதியை அபிவிருத்தி செய்தல், மின்சாரம் வழங்குதல், கூரைத் தகடு வழங்குதல் போன்ற வேலைத் திட்டங்கள் இதற்கூடாக மேற்கொள்ளப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் வலி தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் சி.ஜெயசேகரன், அரச அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-50)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3085 திகதி:2018.09.19 புதன்கிழமை
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 18 24 41 66 N
போனஸ் இலக்கம்: 43
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 42,642,760/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 378
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.09.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,560,370/-
வெற்றி இலக்கங்கள்: 05 08 18 32
ஆங்கில எழுத்து: I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி: 19.09.2018 வெற்றி வாரம்: 2368 வர்ணம்: பச்சை
மீனம்
வெற்றி இலக்கங்கள்: 15 22 38 47
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 10,832,060/=
2018.09.21ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

DLB CAR PLUS
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 76
சீட்டிழுப்பு திகதி 19.09.2018
வெற்றி இலக்கங்கள்: 01 05 24 P சனி
15
3,475,860/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அரியாலை சனசமூக நிலையம்

**இலவச தையல், கேக், ஐசிங், ஆபரண வடிவமைப்புப் பயிற்சிகள்**

எமது நிலையத்தில் இலவச தையல், கேக், ஐசிங், ஆபரண வடிவமைப்புப் பயிற்சிக்கான புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது பயன்பெறவிரும்புபவர்கள் 22.09.2018 பிற்பகல் 3.00 மணிக்கு நேரில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என கேட்டுக்கொள்கின்றோம்.

இடம் : அரியாலை சனசமூக நிலையம்
தொடர்பு : 077 648 6437/ 077 907 3792

(cs 145384) (13.17) நிர்வாகம்


## கண்ணீர் அஞ்சலி



யா/ சென் மேரீஸ் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் **இராசையா பாலமுரளி** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அமிர்தவள்ளி இராசையா**

நேற்று (19.09.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம், யா / சென் மேரீஸ் வித்தியாலயம்**

## 25ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27.07.1938

உதிர்வு 20.09.1993



**அமரர் விஜயரத்தினம் அப்பாத்துரை**

எல்லாம் வல்ல தரைமண் கலட்டி விநாயகப் பெருமானை பிரார்த்தித்து உங்களை நினைவு கூருகின்றோம்

**யானைக்குட்டி வளவு,**
**தெல்லிப்பழை** (CS 19792)(11,17) **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**தோற்றம் : 12.10.1932** **மறைவு: 21.08.2018**

### திருமதி சிவபாக்கியம் சுவாமிநாதன்

21.08.2018 செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்திய எமது அன்புத் தாயார் திருமதி சிவபாக்கியம் சுவாமிநாதன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.09.2018) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ் விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக் கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டும், தொலைபேசி மற்றும் முகநூல் மூலமாக அஞ்சலி செலுத்தி அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும் எமக்கு சகல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**இல.12/4, அத்தியடி புதுவீதி,**
**யாழ்ப்பாணம்.** **குடும்பத்தினர்.** (CS/19925)(10)

# பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

குடிமக்கள் மரபை மீறி, மக்கள் பிரதிநிதியைச் சபையில் அவமதித்து மக்களுக்கு எதிராகச் செயற்பட்டிருக்கிறார் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை எனத் தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரைத் தலைமையாகக் கொண்டு இயங்கும், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு நேற்று பூநகரியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி பூநகரிப் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது உறுப்பினர் யோன்பின்ரன் மேரிடென்சியா நிதிக்குழு அறிக்கை மீது கருத்து கூறும் போது சபையில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கடும் இடையூறு செய்தனர். இதனால் யோன் பின்ரன் மேரிடென்சியா தொடர்ந்து கருத்துக் கூற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் சபைக்குத் தலைமை தாங்கிய தவிசாளர் ஐயம்பிள்ளை நேரகாலம் குறிப்பிடாமல் சபையை ஒத்திவைப்பதாக அறிவித்து சபையிலிருந்து வெளியேறிச் சென்றார். அவ்வாறு வெளியேறி செல்லும் போது "வாயை மூடிக்கொண்டு வெளியே போ" என்று உறுப்பினரான யோன் பின்ரன் மேரிடென்சியாவை நோக்கி கட்டளையிட்டார்.

இது சபையின் மரபுக்கும் மக்கள் பிரதிநிதி என்ற உரிமைக்கும் எதிரான செயலாகும். அத்துடன், இது மக்கள் பிரதிநிதியாகிய யோன்பின்ரன் மேரிடென்சியின் மதிப்புக்கும், சபை நடவடிக் கைக்கும் முரணானது என்பதோடு, புதிய தேர்தல் முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் உறுப்பினர்களுக்கு சபையில் உரிய பாதுகாப்பு, மதிப்பு , நியாயம் என்பனவற்றை இல்லாதொழிக்கும் தீயமுயற்சியுமாகும். எனத் தெரிவித்து தவிசாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "தவிசாளரே தகைமையை வளர்த்துக்கொள்", "பூநகரியில் நடப்பது காட்டாட்சியா? மக்களாட்சியா?" "பெண்களை மதிக்க அரசியல் அநாகரீகத்தை எதிர்ப்போம்", "மக்கள் உரிமையை காப்போம்", பெண்களை அவமதிக்காதே மக்கள் உரிமையை மீறாதே, பிரதேச சபையா அல்லது கட்சி அலுவலகமா போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இது தொடர்பில் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் அ. ஐயம்பிள்ளையிடம் உதயன் வினவியபோது :

சுயேட்சை குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஞா.ரவிகரன் (கரியாலை, நாகபடுவான்) சபையின் ஒவ்வொரு அமர்விலும் குழப்பத்தை விளைவித்துக் கொண்டே இருக்கிறார், பூநகரிச் சந்தையை மீண்டும் பழைய இடத்தில் இயங்கச்செய்வது தொடர்பாக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் தொடங்கி ஒவ்வொரு அமர்விலும் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருக்கும் இவர் சபைக்கு அடக்கமான வார்த்தைகளைப் பேசுவதில்லை தரக்குறைவான வார்த்தைகளைப் பேசி சபையில் குழப்பத்தை ஏற்படுத்துவார். இவ்வாறே கடந்த 16ஆம் திகதியும் அவரே குழப்பத்தை உண்டு பண்ணினார், சபையில் அமைதியின்மை ஏற்பட்டதால் நான் சபையை ஒத்திவைத்தேன் மீண்டும் 10 நிமிடங்களில் சபை அமர்வு இடம்பெற்றது. அவரும் சபையில் அமர்வதும் எழுந்து செல்வதும் பின் வருவதும் நம்மை ஒளிப்படம் எடுப்பதுமாக செயற்பட்டார். மறுநாள் வயதுக்கு மூத்தவன் என்ற வகையிலும், சபை தலைமை என்ற வகையிலும் எல்லோரையும் அழைத்து பேசினேன். இப்படி ஒவ்வொரு முறையும் குழப்பம் விளைவிக்காது உங்கள் பிரச்சினைகளைசுமுகமாகத்தீர்த்துக்கொள்ளுங்கள் என தெரிவித்தேன் ஆனால் அவர்கள் மேலிடத்துக்கு அறிவித்து உத்தரவு பெற்றபின்னரே கூட்டத்துக்கு வருவதாகச் சொன்னார் . அவருடன் இணைந்தே பெண் உறுப்பினர் யோன்பின்ரன் மேரிடென்சியா தகாத வார்த்தைகளை மிக சத்தமாக சபையில் பேசினார் தரக்குறைவான வார்த்தைகளும், சபையின் அல்லோலகல்லோலமும் தாங்கமுடியாது அவர்களை "வெளியே போ" என நான் பணித்தேன் எனத்தெரிவித்தார் .

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரைத் தலைமை யாகக் கொண்டு இயங்கும், சமூக நீதிக்கானமக்கள்அமைப்பேஇந்தஆர்ப்பாட்டத்தை செய்துள்ளது. சமூகநீதிக்கானமக்கள்அமைப்பே கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சுயேச்சைக் குழுவாக போட்டியிட்டது. இவரது சுயேட்சைக் குழு உறுப்பினர்களே சபையில் குழப்பத்தை விளைவித்து தவிசாளரால் வெளியேற்றப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (214)


**நாகபூஷணி திருமணசேவை**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596**

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு, செல்லப் பிள்ளையார் கோவிலடி பிரதான வீதியில் 6 1/2 பரப்புக் காணி வீடு கட்டுவதற்குரிய காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு 1 1/2 இலட்சம்.

**தொடர்பு - 071 680 0146, 077 700 8413**


## துயர்பகிர்கிறோம்

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் **திருமதி சோ. நவநீதக்கிருஸ்ணன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பொன்னம்மா கனகரத்தினம்**

கடந்த 20.08.2018 இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள், யா/ சென்மேரீஸ் வித்தியாலயம்**



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்ட விவசாயப் பணிப்பாளராக கடமையாற்றும் **திருமதி.ச.கயிலேஸ்வரன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி. யோகம்மா கந்தசாமி**

அவர்கள்

15.09.2018 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெவிரித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்** (IN/7884)(10)

**கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் பிரதேச சபை**
**கொக்குவில் உபஅலுவலகம்**

## ஆதனப் பெயர் மாற்றம்

| | |
|---|---|
| ஆதன உரிமையாளர் பெயர்: | இளையவி கனகு - உ.கோ. K.கனகரத்தினம் |
| வட்டாரம் | : 16. சிலுவை மதவடி ஒழுங்கை. |
| ஆதன இலக்கம் | : 09 |

மேற்படி விவரத்தோடு ஆதனம் காணப்பட்ட போது அதே ஆதனத்தை ஜோண் எல்விஸ் பிறிஸ்ரி பெண் விக்ரோரியா என்பவர் ஆதன பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மானிப்பாய் வீதி. சின்னப்பு மகாலிங்கம் என்பவர். இவ்வாதனம் தனது இடையூறற்ற, எவருக்கும் எதிரான தொடர்ச்சியான பதினைந்து வருடங்களுக்கு மேலான ஆட்சியில் இருந்து வருகிறதென்றும். இவ்வாதனத்தில் செய்யப்பட்ட அபிவிருத்திகள் யாவும் தன்னால் மேற்கொள்ளப்பட்டன என்றும். இவ்வாறு வெளிப்படுத் தல் செய்வதால் ஏற்படும் பிசகு தடைகளை எவருக்கும் நிவர்த்தி செய்து கொடுப்பேன் என்றும். இவ்வாதனத்தின் ஆட்சி. சொந்தம் உடைமை தன்வசம் உள்ளதென்றும் வெளிப்படுத்தி 2001 ஆம் ஆண்டு ஐப்பசி மாம் 14 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு இராமநாதன் ஜெயசிங்கம் முன்பாக 2641 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.


**(காணியின் விவரம்** - வடமாகாணம்: - யாழ். மாவட்டம். யாழ்ப்பாணப் பகுதியில். வண்ணார்பண்ணை கோவிற்பற்று. வண்ணார்பண்ணை மேற்கு இறை. "பள்ளன் காடு" நிலப்பரப்பு 1 குழி 12.9)

மேற்படி 2641 இலக்க வெளிப்படுத்தல் உறுதியை தாயுறுதியாகக்கொண்டு சின்னப்பு மகாலிங்கமும் பெண் எமலின் ஆகிய இவர்கள் தனது மகளான ஜோண் எல்விஸ் பிறிஸ்ரி பெண் விக்ரோரியா ஆகிய இவருக்கு நன்கொடையாக 3580 ஆம் இலக்க 19.07.2003 ஆம் திகதிய பிரசித்த நொத்தரிசு இராமநாதன் ஜெயசிங்கம் முன்பாக நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குழி 8.4 இனை நன்கொடை வழங்கியுள்ளனர்.

மேற்காணும் ஜோண் எல்விஸ் பிறிஸ்ரி பெண் விக்ரோரியா என்பவர் கொக்குவில் உபஅலுவலகத்தில் ஆதன பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே குறித்த ஆதனம் மேற்படி விவரங்களை வெளிப்படுத்தி காணப்படுவதால், இவ் ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகைப் பிரசுரத்திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ. வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும். யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு குறித்த இலக்கமுடைய ஆவணத்தை பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும். இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தா. தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**

(ம.35548) (13.17)



## 4.5 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படும் இராமநாதபுரம் வீதி

கிளிநொச்சி ,செப் .20
கரைச்சிப் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட இராமநாதபுரம் வட்டாரத்தில் இராமநாதபுரம் சந்தை, இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றை அண்மித்த 600 மீற்றர் நீளமான முதன்மை வீதி, தாரிட்டு சீரமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. இந்த வீதியை, வீதி அபிவிருத்தி திணைக்களம் 4.5 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்க நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு.செப் .20
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்க் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதி 100 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்குவதற்காக 15 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் தனது 2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் ,மேற்படி தொகையை ஒதுக்கியுள்ளார். இதன் பிரகாரம் 100 துவிச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுத் துணுக்காய் வலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், சில நாள்களில் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரனால் தெரிவு செய்யப்பட்ட போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைவிட நடப்பாண்டில் துணுக்காய் வலயப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காகப் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இதுவரை வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரனால் 26 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (72)

### மாணவர்களின்

# குடிதண்ணீர்த் தேவையை தீர்த்துவைத்த பொலிஸார்

வவுனியா ,செப் .20
ஓமந்தை, மாணிக்க இலுப்பைக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நீண்டகாலமாக நிலவி வந்த குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நேற்றுக் காலை முதல் ஓமந்தைப் பொலிஸாரால் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்கள் கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்ற பாடசாலையிலுள்ள குழாய்க்கிணற்றில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் குடிதண்ணீர் வற்றிய நிலையில் காணப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்குக் குடிதண்ணீர்ப்பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது.




இந்த விடயம் ஓமந்தைப் பொலிஸாரின் கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது. இதையடுத்து வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோனினால் நேற்றுக் காலை பாடசாலைக்குக் குடிதண்ணீர் வழங்கி மாணவர்களின் நீண்டகாலத் தேவை நிறைவேற்றப்பட்டுள்ளது.
பாடசாலை அதிபர் சிவசோதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா, கனகராயன்குளம் - புளியங்குளம் உதவி பொலிஸ் அதிகாரி டபிள்யூ. கே. பொன்சேகா, ஈஷி மிஷன் பூரண சபையின் முதன்மைக் குரு பி. எம். இராஜசிங்கம், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## 176 மில்லியன் ரூபா செலவில் ஆறு பாலங்கள் திறந்துவைப்பு

வவுனியா ,செப் ,20
ஆயிரம் கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் 176 மில்லியன் ரூபா செலவில் வவுனியாவில் ஆறு பாலங்கள் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு அரசின் கிராமிய மட்டத்திலான ஆயிரம் பாலங்கள் அமைக்கும் திட்டத்தின் ஒரு கட்டமாக, வவுனியா செட்டிக்குளம் பகுதியில் ஆறு பாலங்கள் அமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.
வடமாகாண கிராமியத் திட்ட எந்திரி எஸ். பி.சிவனேசன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், இந்திரராசா ஆகியோரால் பாலங்கள் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேசசபைத் தவிசாளர் அந்தோனி, மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், மதகுருமார்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (110)

## சட்டவிரோத கசிப்புடன் ஒருவர் கைது

வவுனியா ,செப் .20
வவுனியாஓமந்தைப்பாலமோட்டைப்பகுதியில் நீண்டகாலமாகக் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.
அவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் தகவல் ஒன்றின் அடிப்படையில் பாலமோட்டையில் நடவடிக்கை மேற்கொண்ட 'ஓமந்தைப் பொலிஸார் சட்டவிரோத கசிப்பு அரை லீற்றரை தனது உடமையில் வைத்திருந்த குற்றத்துக்காக அந்தப்பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவரையே சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.
ஓமந்தைப் பொலிஸ் நிலய்ப்பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வாவின் வழிநடத்தலில் ஜானக திசாநாயக்கா, நிசாந்தனினால் கைது செய்யப்பட்டுள்ள நபர் நீண்டகாலமாகச் சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.
இதையடுத்து மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை கைப்பற்றப்பட்ட கசிப்புடன் நேற்று நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



நேற்று முன்தினம் நெடுங்கேணி மாமடுச்சந்தி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் தேர்த்திருவிழா இடம் பெற்றது. (222 )



## இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் மூத்தோர் மாண்புறு நிகழ்வு

வவுனியா .செப் .20
வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் மூத்தோர் மாண்புறு நிகழ்வு கல்லூரி அதிபர் அருட்சகோதரி செபமாலை ஜெயநாயகி தலைமையில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.
முதியோர் சங்கங்களின் பிரதிநிதிகள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் சிறப்புரை நிகழ்த்தினார். (222)

# காணிப்பிரச்சினையால் தாக்கப்பட்ட பெண்

## மன்னார் குடிமக்கள் குழுவில் முறைப்பாடு

மன்னார்.செப். 20
மன்னார் தாழ்வுபாடு கிராமத்தில் காணிப்பிரச்சினை காரணமாக ஏற்பட்ட மோதலில், ஐந்து பேரால் தாக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என மன்னார் குடிமக்கள் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .
கடந்த 5ஆம் திகதி வீட்டில் தனிமையில் இருந்த பெண் மீது ஐந்து பேர் கொண்ட குழு கத்தி, கட்டை போன்ற ஆயுதங்களால் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பி சென்றுள்ளனர். தாக்கப்பட்ட பெண்ணின் முகப் பகுதி சேதப்படுத்தப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.
இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பெண்ணின் உறவினரிடம் கேட்டபோது தாக்குதலுக்கு இலக்கானவர் எனது மனைவியின் தாயார். இந்தத் தாக்குதல் சம்பவத்தால் அவரது பற்கள், தோள்பட்டைகள் உடைந்து, இடது கண் பார்வையையும் இழந்துள்ளார். தாக்குதல் நடைபெற்ற அன்று மதியம் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்த போது அவர்கள் தாக்கப்பட்டவர் முறைப்பாடு செய்தால் மட்டுமே முறைப்பாடு எடுக்கப்படும் என்று கூறிவிட்டனர். பின் எமது தொடர்ச்சியான அழுத்தத்தினால் முதல் தடவை மூன்று பேரையும், பின் இருவரையுமாகப் பொலிஸ் நிலையம் அழைத்து வாக்கு மூலம் பெற்று பிணையில் விடுவித்தனர். அவர்களுடைய கொலை வெறித் தாக்குதலால் உடல் அவயங்கள் பாதிக்கப்பட்டுப் பார்வையின்றி சிரமப்படும் பெண்ணுக்கு எந்த நீதியும் கிடைக்க வில்லை என்றும் இதன்காரணமாகவே மன்னார் குடிமக்கள் குழுவில் முறையிட்டுள்ள தாக அவர் தெரிவித்தார்.
இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு அவர்களுக்கிடையில் முன்பிருந்த காணிப்பிரச்சினையே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (213)




## மன்னாரில் வீடு இரவு தீ பற்றியது

மன்னார், செப். 20

தலைமன்னார் பியர் கேம்பலஹவுஸ் பிரதேசத்தில் சில நாள்களுக்கு முன்னர் இரவு நேரம் வீடொன்று தீ பிடித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வீடு முற்றாக எரிந்துள்ளது என்றும் அதனால் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள் உடமை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தீ எவ்வாறு ஏற்பட்டது என்று இதுவரை தெரியவரவில்லை. சம்பவ இடத்தில் மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் சென்று நிலமையை அவதானித்தனர்.

(4,56)

### மாவட்டச் செயலரின் உறுதிமொழியையடுத்து

# தனியார் பேருந்து உரிமையாளர்களின் போராட்டம் நேற்று மதியத்துடன் நிறுத்தம்

வவுனியா, செப். 20

வவுனியாவில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் நடத்திய பணிப்புறக்கணிப்புக் கைவிடப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டச் செயலரின் வாக்குறுதிக்கு அமைய போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் தெரிவித்தார்.

வவவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இணைந்த நேர அட்டவனை மற்றும் மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளை உட்செல்ல அனுமதிக்கக் கூடாது என்கின்ற கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் வெளிமாவட்டங்களுக்குச் சேவையில் ஈடுபடும் வவுனியா மாவட்ட தனியார் பேருந்துகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தன.

இந்தநிலையில் நேற்று மதியம் வவுனியா மாவட்டச் செயலர் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துக் கலந்துரையாடினார்.

இணைந்த நேர அட்டவனையை இரண்டு வாரங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இது தொடர்பாக முதலமைச்சரின் செயலாளருடன் தான் கலந்துரையாடியதாகவும் இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவோ அல்லது உட் செல்லவோ அனுமதிக்கப்படாது எனவும் தமக்கு தெரிவித்ததன் அடிப்படையில் இந்தப் போராட்டத்தை இன்று (நேற்று) மதியம் கைவிட்டுள்ளோம் என்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.இராஜேஸ்வரன் தெரிவித்தார்.



கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரும் முதலமைச்சருமான சி. வி. விக்னேஸ்வரன் தலைமையில் இ. போ. ச உயர் அதிகாரிகளுக்கும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்க பிரதிநிகள் மற்றும் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அதில் எடுக்கப்பட்ட இணைந்த நேரட்டவணையை இதுவரையில் நடைமுறைப்படுத்தாமைக்கும், மாகாணங்களுக்கிடையிலான அரச பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்துக்குள் வருவதை தடைசெய்ய வலியுறுத்தியும்; அரச பேருந்துகளின் அத்துமீறிய சேவைக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே குறித்த பணிப்புறக்கணிப்பு நடத்தப்பட்டது.

அதனால் வவுனியாவிலிருந்து வெளி மாகாணங்கள், மாவட்டங்களுக்கிடையில் பணிகளில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் வவுனியா மைய பேருந்து நிலையத்தில் தரித்து நின்றன.

இணைந்த நேர அட்டவனையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும், வெளி மாகாணங்களுக்கு செல்லும் பேருந்துகளை உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்ற பதாதைகள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் பேருந்துகளில் ஒட்டப்பட்டிருந்தன.

இந்தக் குழப்பத்தால் புதியபேருந்து நிலையத்துக்கு முன்பாகப் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இதுதவிர, வவுனியா மாவட்ட பேருந்து தரப்பினரின் கோரிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் பேருந்துகள் அனைத்தும் நேற்று நள்ளிரவு தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தன என்றும் இந்தக் கோரிக்கையை அடுத்து அவர்களது பணிப்புறக்கணிப்பும் கைவிடப்பட்டது என்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரி. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் மாவட்டச் செயலர் ஹனீபா மற்றும் மேலதிக மாவட்டச் செயலர் திரேஸ்குமார், தனியார் பேருந்து சங்கத் தலைவர், போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நேற்றுக் கலந்துரையாடினர்.

அதில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்று சத்தியலிங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் எட்டப்பட்ட முடிவுகளாக,

1. கடந்த ஜீன் 25 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைவாக இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்துச் சங்கம், நகரசபை, பொலிஸார், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன இணைந்து குழுவொன்றை அமைத்துக் கலந்துரையாடி இறுதித் தீர்மானமொன்றை எடுத்தல். எடுக்கப்படும் தீர்மானத்தை மாகாண போக்குவரத்து அமைச்சின் தலைமையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பரிந்துரைத்தல்.

2. அதுவரையில் தூர இடங்களிலிருந்து பயணிக்கும் தனியார், இ.போ.ச பேருந்துகள் மைய பேருந்து நிலையத்துக்குள் சென்று பயணிகளை ஏற்றுவதைத் தவிர்த்தல்.

3. பேருந்து நிலையத்துக்கு முன்பாக வீதியருகில் அமைக்கப்பட்டுள்ள பேருந்துத் தரிப்பிடங்களில் பயணிகளை ஏற்றுதலும் இறக்குதலும்.

4. இவற்றைக் கண்காணிக்க 24 மணிநேரமும் பொலிஸாரைப் பணியில் அமர்த்துதல் என்பனவே தீர்மானங்கள்.


வவுனியா மாவட்டச் செயலாளர் ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மாகாணசபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், கலந்துகொண்டார். என்று செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சாரதியொருவருக்கும் தனியார் பேருந்து சாரதியொருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்துத் தனியார் பேருந்து சாரதி பொலிஸாரால் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தூர இடங்களிலிருந்து வவுனியா ஊடாகப் பயணிக்கும் பேருந்துக்கள் வவுனியா மைய பேருந்து நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றுவதிலேயே இந்த முரண்நிலை தோன்றியது.

எனினும் அரச பேருந்துகள் வழமை போன்று பணியில் ஈடுபட்டன. (4,110)







# வேலணை வடக்கு
# இலந்தை வனப்பதி
# ஸ்ரீ சித்தி விநாயகர்
# ஆலய
# மஹோற்சவ
# தேர்த்திருவிழா - 2018

விக்கினம் தீர்க்கும் விநாயகனே
வேலணை இலந்தைவன நாயகனே
நாடிடுவோர் குறை தீர்ப்பவனே - இன்
நன்நலம் போற்றிடும் புண்ணியனே

ஔவைக்கு அருளிய ஐங்கரனே
அடியவர் பிறவிப்பிணி அறுப்பவனே
உனையே சரணடைந்து போற்றுகிறோம்
- எம்மை
உய்யங்கொண்டு அருள்வாயே....!

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம்
கடந்த 12.09.2018 புதன்கிழமை கொடியேற்றத்துடன்
ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறுகின்றன.
இந்த உற்சவத்தில் நாளை (21.09.2018) வெள்ளிக்கிழமை
**முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும்**
**நாளைமறுதினம் (22.09.2018) சனிக்கிழமை**
**காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும்** இடம்பெறவுள்ளன
என்பதை அடியார்களுக்குஅறியத் தருவதுடன் உற்சவம்
நிறைவடைந்த பின்னர் அன்னதான நிகழ்வும் இடம்பெற
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்.**

(cs.19913) (13.17)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 21.08.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்



அமரர் **தம்பிஐயா கருணாமூர்த்தி**

**(உரிமையாளர் கல்யாணி கிறீம் ஹவுஸ்)**

**தோற்றம்**
**04.02.1948**

**மறைவு**
**21.08.2018**

**திதி: ஏகாதசி**

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள்
நேற்று முன்தினம் (18.09.2018) செவ்வாய்க்கிழமை
காலை 8.00 மணியளவில்
கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன,
இன்று (20.09.2018) வியாழக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில்
நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**இல.405, கோயில் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

## ஆசிரியர் ஒத்துமாறல்

கொழும்பிற்கு அண்மையில் களுத்துறை கல்வி வலயத்தில் கற்பிக்கும் ஆரம்ப கல்வி ஆசிரியர் ஒருவர் வடமாகாண பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகின்றார். **தொடர்பு - 076 283 3397**

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குழி பரியோவான் கல்லூரிக்கும் சுண்டுக்குழி மகளிர் கல்லூரிக்கும் இடையில் பழைய பூங்கா வீதியில் 4 அறையும் குசினியும், மேல்மாடியில் சிறிய கல்யாண மண்டப மாதிரியும் வாகன தரிப்பும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், களஞ்சியத்-துக்கும் ஏற்ற மாதிரி வரவேற்கத் தக்கது

**076 602 3324 - Albert** (CS/9590) (11,17)

## தவறிவிட்டது

சுகந்தி விமலநாதன் என்பவருடைய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், A.T.M அட்டை அடங்கிய கைப்பை கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

**077 615 4078**

# 1st time in Jaffna

JETEX 2018

SEPTEMBER 23 24 25

**Jaffna International Education & Job Fair**

யாழ் நகரில்
உயர் கல்வி மற்றும் தொழில்
சார்பான கண்காட்சி
முற்பகல் 10 மணிமுதல் இரவு 8 மணிவரை




**Organizing by:- CJ Promoters**

AFTER A/L?



More deatils
**077 254 6511 / 071 133 0431** Prasannaraj

**Place**
**Kokkuvil Celva Palace**
(Fully Air condtion)

மேலதிக தவல்களுக்கு:
**Prasannaraj - 077 254 6511**

ஊடக அனுசரணை:- உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ் Uthayan - National Tamil Daily


## மரண அறிவித்தல்

### திருமதி கனகலட்சுமி இலங்கநாதன்
(பிள்ளையம்மா)



பிறப்பு 09.09.1946 இறப்பு 18.09.2018

புங்குடுதீவு - 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலட்சுமி இலங்கநாதன் 18.09.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இலங்கநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரராஜன் மற்றும் கிருபாதேவி, காலஞ்சென்றவர்களான சுதாகரன், பாஸ்கரன் மற்றும் அன்பரசி (புங்குடுதீவு சமுர்த்தி உத்தியோகத்தர்), காலஞ்சென்ற கலையரசி மற்றும் லூதர்சன் (மருதானை ராசன்) ஆகியோரின் பாசமிகு தாயும், வீரசிங்கம், ஜெயமோகன், இராஜேஸ்வரன், வினோஜா ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான கண்ணம்மா, நாகம்மா, யோகம்மா மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், சுப்பிரமணியம், திருச்செல்வம், நாகராசா மற்றும் மல்லிகேஸ்வரி, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் வள்ளியம்மை சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், கிருசாந், லக்சாந், பிரதீபன், கிருசாந்தினி, டஸ்வினி, லதுஷனா, தஸ்மிகா, புகழ்வண்ணன் ஆகியோரின் பேர்த்தியும் தர்ணிகன், சிந்துஜன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2018) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகன்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புங்குடுதீவு,**
**7 ஆம் வட்டாரம்.**

தகவல்
**குடும்பத்தினர்.**

(cs.19920) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னத்தம்பி செல்லத்துரை
(ஐயர்கடை மாமா)

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில்
உம் நினைவுகள் எம்முடன்
என்றென்றும் வாழும் அப்பா.....

பிறப்பு 30.04.1946 இறப்பு 02.09.2017

**குடும்பத்தினர்**
இல.60, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com

## நினைவலைகள்

**10 ஆம் ஆண்டு** **9 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம்**



தோற்றம் 09.06.1947
மறைவு 11.10.2008



தோற்றம் 16.05.1954
மறைவு 10.04.2009

**அமரர் நடராசா அற்புதானந்தராசா**
திதி: ஏகாதசி

**அமரர் சோதிராணி சதானந்தராஜ்**
திதி: துதியை

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எம் மனங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் நினைவுகள் ஆறிடவில்லை எம்துயரம்
அனுதினமும் வாடுகின்றோம் தேற்றுவார் யாருமில்லை
தேடுகின்றோம் என்றென்றும் உங்களை காலங்கள் பல சென்றாலும்
உங்கள் அருமை நினைவுகள் நீங்கிடாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கற்பகப்பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஞானம் லியோன்
(உதவி தபால் அதிபர்)

பன்னிரு மாதங்கள், பகலிரவாய் விழுந்தாலும்
தென்றலும் தெவிட்டாது " தங்கம்" என தான் கூறும்
மண்மீது மங்கலமாய் மும்மொழியும் மலர்ந்திங்கு
வண்ணமுற வாழ்ந்து விண்ணுலகு புகுந்தனையோ?

இன்று (20.09.2018) வியாழக்கிழமை யாழ்ப்பாணம்,
நவாலி பேதுருவானவர் தேவாலயத்தில் பிற்பகல் 5 மணியளவில்
இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நவாலி கிழக்கு, பிரசாந் வீதி,
மானிப்பாய்.

என்றும் நினைவுடன்
**குடும்பத்தினர்.**

(CS/19789)(11,17)

*அமெரிக்கத் தடைக்குப் பயந்து*

# ஈரானிடம் எண்ணெய் வாங்குவதை நிறுத்தியது இலங்கை அரசு

கொழும்பு, செப். 20

**ஈரானுக்குஎதிராக அமெரிக்காவிதித்துள்ளபுதியதடைகளை அடுத்து, ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை இலங்கை நிறுத்தியுள்ளது. அபுதாபியில் இருந்து வெளியாகும் 'தி நேசன்' நாளிதழுக்கு இலங்கைப் பெற்றோலிய வளங்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அளித்த செவ்வியிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈரானுக்குஎதிராகஅமெரிக்காபுதியதடைகளை அறிவித்தவுடன், நாங்கள், ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை நிறுத்தி விட்டோம்.
நாங்கள் ஈரானிடம் நேரடியாக எண்ணெய்வாங்கவில்லை. சிங்கப்பூர், டுபாய், புஜாரா ஊடாகவே பெற்று வந்தோம்.
அடுத்த சில மாதங்களில், அரசுகளுக்கு இடையிலான உடன்பாடுகளைச் செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம்.
ஈரானிடம்எண்ணெய்கொள்வனவுசெய்யப்படுவது நிறுத்தப்பட்டுள்ள நிலையில், மாற்று வழிகளை அடையாளம் கண்டுள்ளோம்.
ஏற்கனவே, அவற்றைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளோம். ஆனால் ஒரு பிரச்சினை. இந்த மசகு எண்ணெய் விலை அதிகமானது. எனவே மலிவான மசகு எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கிறோம்." என்றார்.
எனினும், தற்போதுஎங்கிருந்துமசகுஎண்ணெயை இலங்கை பெற்றுக் கொள்கிறது என்ற தகவலை அவர் வெளியிட மறுத்து விட்டார். ஈரானிடம் இருந்து நாளாந்தம், 50 ஆயிரம் பீப்பாய், மசகு எண்ணெயை இலங்கை கொள்வனவு செய்து வந்தது.

## பாதீடு முன்மொழிவுகள் நவம்பர் 5 இல் ஆரம்பம்

கொழும்பு, செப்.20
2019ஆம்ஆண்டுக்கானபாதீடு (வரவு - செலவுத் திட்டம்) முன்மொழிவுகள், எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த போதிலும், திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், அலரி மாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தில், இந்தத் தீர்மானத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. எதிர்க்கட்சிகள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, இந்தத் தினத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
இதற்கமைவாக, நிதி அமைச்சர் மங்கள சமரவீரவால், நாடாளுமன்றத்தில்எதிர்வரும்நவம்பர் மாதம் 5ஆம் திகதி 2 மணிக்குப் பாதீடு முன்மொழியப்படவுள்ளது.
நவம்பர் மாதம் 7ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதிவரை பாதீடுக்கான விவாதம் இடம்பெறவுள்ளதுடன், 14ஆம்திகதி, பாதீடுக்கான இரண்டாம் வாசிப்பு இடம்பெறும். டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி, இறுதி வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.


## காதல் ஜோடியை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, செப்.20
பேருந்தில் பயணித்த காதல் ஜோடியை இலக்குவைத்துத் துப்பாக்கிச்சூடுஒன்றுநடத்தப்பட்டது.
இந்தச் சம்பவம் திருகோணமலை, மூதூர் புளியடி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.
மூதூரில்இருந்துதிருகோணமலைநோக்கி பயணித்த தனியார் பேருந்தில் இந்தக் காதலர்கள் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்றுள்ளனர். இதன்போது அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களை இலக்கு வைத்து வெளியில்இருந்துதுப்பாக்கிச்சூடுமேற்கொண்டுள்ளனர். இதில்பேருந்தின்கண்ணாடிஉடைந்துள்ளது. பெண்ணுக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தத் துப்பாக்கிச் சூடு தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## காணாமல் போன துப்பாக்கியால் கிளம்பியுள்ள சர்ச்சை

கொழும்பு, செப். 20
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் இருந்த 'ஸ்னைப்பர்'ரகத்துப்பாக்கிஒன்றுகாணாமல் போயுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கனகஹேரத்கேள்விஎழுப்பியுள்ளார். நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.
இவ்வாறுகாணாமல்போனதாகக்கூறப்படும் செய்தி உண்மையா? அவ்வாறு காணாமல் போனமை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றதா? இந்தத் துப்பாக்கியை யார் திருடினார்? எனச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டாரவிடம் அவர் கேள்வி எழுப்பினார்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் மத்தும பண்டார, சம்பவம் தொடர்பில் எழுத்து மூலம் முறைப்பாடு தரப்படுமாயின் அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படும் - என்றார்
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிமீது அரசதலைவர்கொலைச்சதிக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்தத் துப்பாக்கி தொடர்பில் கேள்வி எழுப்பப்படுவது சர்ச்சைக்குரிய ஒன்று.

### கேலிச்சித்திரம்




*அரச தலைவர் மீதான*


## கொலை முயற்சியின் சூத்திரதாரி மகேந்திரனா?

கொழும்பு, செப்.20
பிரதிப்பொலிஸ்மாஅதிபர்நாலகசில்வாமுன்னெடுத்ததாகக் கூறப்படும் அரச தலைவர் கொலைச் சதி முயற்சியின்பின்னால், முன்னாள்மத்தியவங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் இருப்பதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக உண்மையைத் தேடும் ஆய்வாளர்கள்அமைப்பின்சட்டத்தரணிபிரேமநாத் சீ. தொலவத்த தெரிவித்தார்.
உண்மையைத்தேடும்ஆய்வாளர்கள்அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அரசதலைவருக்கு அடுத்ததாகத் தலைமைப் பதவிக்கு வர இருப்பவர்தலைமை அமைச்சர். தலைமை அமைச்சரை தலைவராகக்கொண்டுவர வேண்டியதேவை அர்ஜுன் மகேந்திரனுக்கு இருப்பதாகக் கருதுவதற்குப் போதியளவு வாய்ப்பு உள்ளது - என்றார்.

# கல்முனை மாநகர சபை அமர்வில் களேபரம்

*அமர்வை முடிவுக்குக் கொண்டு வந்தார் மேயர்*

அம்பாறை, செப்.20
கல்முனை மாநகர சபையின் அமர்வுபெரும்வாதப்பிரதிவாதங்களுடன் இடம்பெற்றதுடன் உறுப்பினர்களின் களேபரத்தால் இடைநடுவில் சபை அமர்வை மேயர் முடிவுக்கு கொண்டு வந்தார்.
கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு மாநகர மேயர் ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று முன்தினம் சபாமண்டபத்தில் நடைபெற்றது.
அமர்வு ஆரம்பித்தது முதலே பல சந்தர்ப்பங்களில்மேயர்மற்றும்சில உறுப்பினர்களிடையேவாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.



சாய்ந்தமருதுக்குத்தனிஉள்ளூராட்சி மன்றம்வேண்டுமென்றகோரிக்கையை முன்வைத்து மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் அடிக்கடி மேயருடன் ஆளும் தரப்பானமுஸ்லிம்காங்கிரஸ்உறுப்பினர்களுடனும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டு வந்தனர்.
இதன்போது தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்களும் ஏனைய சில கட்சி உறுப்பினர்களும்இணைந்துசுயேட்சைக்குழுஉறுப்பினர்களின் வாதங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தும் வந்தனர்.
இவ்வாறுசபைஅமர்வுஅமளிதுமளியுடன் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில்சாய்ந்தமருது சுயேட்சைக்குழு உறுப்பினர் எம்.ஐ.அப்துல்அஸீஸ், சபையின் மாதாந்தபாதீடு (வரவு-செலவு) அறிக்கை சபைஉறுப்பினர்களுக்குத்தரப்படவேண்டுமென்ற கோரிக்கை ஒன்றை மேயரிடம் முன்வைத்தார். இதற்குப் பதிலளித்த மேயர்றகீப், சபைஉறுப்பினர்களாலேயே தெரிவு செய்யப்பட்ட நிதிக்குழுவினருக்கு இந்த மாதாந்த பாதீடு அறிக்கை தர முடியுமெனவும் சபை உறுப்பினர்களுக்கு வழங்கமுடியாதெனவும் தெரிவித்தார்.
இதன்போது சாய்ந்தமருது சுயேட்சைக் குழு, தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக்கட்சிமற்றும்சிலஉறுப்பினர்களும் கொதித்தெழுந்தனர்.
மேயர் றகீப் தனது வாதத்தில் விடாப்பிடியாக இருந்ததால் இந்த உறுப்பினர்கள் தத்தமது நாற்காலிகளிலிருந்து எழுந்து நின்று மேயருடன் கணக்கறிக்கை தந்தே ஆக வேண்டுமென வாதிட்டனர். இந்த நிலையில் வாதப் பிரதிவாதம் முற்றிய நிலையில்இந்த உறுப்பினர்கள் தத்தமது நாற்காலிகளில் ஏறி நின்று எதிர்க்கருத்துக்களைத் தெரிவிக்கத் தொடங்கினர்.
எந்தக் காரணம் கொண்டும் மாதாந்தப் பாதீடு அறிக்கை சபைக்குத் தர முடியாது என்ற வாதத்துடனேயே மேயர் இருந்ததால் சபையில் பெரும் அமளிதுமளியும் களேபரமும் ஏற்பட்டது.
நிலமையைக்கட்டுப்படுத்தமுடியாதுசபை அமர்வை முடிவுறுத்துவதாக மேயர் றகீப் அறிவித்துவிட்டு அமர்விலிருந்து வெளியேறிச் சென்றார். இடைநடுவில் சபை அமர்வு முடிவுறுத்தப்பட்ட தால் முஸ்லிம் காங்கிரஸின்நிறுவுநர்தலைவர்மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் 18ஆவது வருட நினைவுதொடர்பானதனிநபர்தீர்மானம் கூடசபையில்இடம்பெறவில்லை. (30)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## போர்க்குற்ற விசாரணை நடப்பது அவசியம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த 2 வருட காலம் அவகாசம் வழங்கி 2017ஆம் ஆண்டு நிவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானம் எதிர்வரும் மார்ச் மாதம் காலாவதியாகின்றது. கொழும்புக்கு மீண்டும் வழங்கப்பட்ட இரண்டாவது கால அவகாசமும் முடிவுக்கு வரும் அந்தத் தருணத்தில் அரசியல் கைதிகள் மற்றும் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் தான் புதிய யோசனை ஒன்றை ஐ.நாவிடம் முன்வைப்பார் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஐ.நா. தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்கு கொழும்புக்கு ஏற்கனவே 4 வருட கால அவகாசம் வழங்கப்பட்டுவிட்ட போதும் அதில் பலவற்றைக் கொழும்பு இன்னமும் நிறைவேற்றவில்லை. இலங்கைப் படையினர் மீதான மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது ஒழித்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்தி வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவருதல் போன்ற பலவற்றில் கொழும்பு ஒரு கிஞ்சித்தும் முன்னேற்றம் காட்டாத நிலையே கடந்த நான்கு வருடங்களிலும் காணப்பட்டிருக்கிறது.

தீர்மானத்தில் கூறப்பட்ட ஒரு சில விடயங்கள், உதாரணத்திற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கான அலுவலகம் அமைக்கப்பட்டமை போன்ற சில விடயங்கள் மட்டுமே கொழும்பு அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை தொடர்பில் ஐ.நா. தீர்மானம் கூறும் பரிந்துரையை அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்து விட்டார். அத்தகைய ஒரு நீதிமன்றம் அமைக்கப்படாது பதிலாக உள்ளூரில் நேர்மையான நீதியான விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அவர் சொன்னதைப் போன்றே கலப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவில்லை. அதேநேரம் அவர் சொன்னதைப் போன்று போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உள்ளூர் நீதி விசாரணை ஒன்றும் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கும் மேலாக, ஏற்கனவே நீதிமன்றங்களில் நடந்துவரும் படையினருக்கு எதிரான குற்ற விசாரணைகளுக்கு ஆவணங்களை வழங்கி ஒத்துழைக்க வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருக்கிறார் அரச தலைவர்.


இத்தகையதொரு நிலையிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் புதிய யோசனை ஒன்றை முன்வைக்கப்போவதாக அவர் தெரிவித்திருக்கிறார். இது சில ஊகங்களை உருவாக்கியுள்ளது. அரசியல் கைதிகளுக்கும் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி இருக்கும் படையினருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது குறித்து ஐ.நாவுக்கு அறிவிப்பதே அரச தலைவரின் நோக்கம் என்கின்றன அந்த எதிர்வுகூறல்கள். அதனடிப்படையில் முக்கிய தமிழ் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் அரச தலைவரின் அத்தகையதொரு நகர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

அரசியல் கைதிகள் மற்றும் படையினரை ஒரே தராசில் வைத்து நோக்கமுடியாது என்று தெளிவுபடுத்தியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன். தமிழ்க் கைதிகள் சிலரின் குற்றங்கள் அவர்களின் அரசியல் உரிமையுடன் தொடர்புபட்டவை, படைத்தரப்பு இழைத்தவை பன்னாட்டு மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்று தெரிவித்திருக்கிறார் அவர்.

அது உண்மையும்கூட. அதற்கும் மேலாக, தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளில் சிலர் மீது ஏற்கனவே குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அவர்களில் சிலருக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தண்டனையில் கணிசமானதை அவர்கள் விளக்கமறியல் கைதிகளா இருந்தே கழித்திருக்கிறார்கள். விசாரணை முற்றுப் பெறாதவர்களும் தண்டனைக் காலத்திற்கு நிகராகச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 4 தொடக்கம் 20 வருடங்கள் வரையில் சிறைவாசத்தை அனுபவித்திருக்கிறார்கள். ஆனால், ஒரேயொரு படையினர்கூட அவ்வாறு விளக்கமறியல் கைதியாகக்கூட வைக்கப்படவில்லை. எனவே தண்டனை அனுபவித்தவர்களையும் விசாரணைக்கே முகங்கொடுக்காதவர்களையும் ஒரே தராசில் நிறுத்திவிட முடியாது.

மேலும், போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தண்டனை என்பதற்கும் அப்பால் நடந்த உண்மை என்ன என்பதும் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியவரவேண்டும். நேர்மையான நீதியான விசாரணை ஒன்றின் ஊடாகவே அது தெரியவரமுடியும். அத்தகைய விசாரணை ஒன்று இலங்கையின் நிர்வாக நடைமுறைகளுக்கு நடக்க முடியாது என்பதால் பன்னாட்டுப் பங்களிப்புடனேயே அது நடக்கவும் வேண்டும். அவ்வாறான ஒரு நீதி விசாரணைக்குப் பின்னரே, குற்றவாளிகள் யார் என்பது தெளிவான பின்னரே வேறு எந்தவொரு விடயம் தொடர்பிலும் பேசப்படவேண்டும். அதற்கு முன்னதாக அரசியல் கைதிகள் விவகாரத்தையும் போர்க் குற்றவாளிகள் விவகாரத்தையும் சமதையாக நோக்கி நகரும் எண்ணம் அரச தலைவருக்கு இருந்தால் அதனை அவர் கைவிட வேண்டும்.

# உயிரை மாய்ப்பதற்கு ஒருவருக்கும் உரிமையில்லை!



அன்புராசா அடிகள்

இலங்கையில் 2013, 2014, 2015 ஆகிய ஆண்டுகளில் 9ஆயிரத்து 657பேர் தவறானமுடிவெடுத்துத்தமது உயிரை மாய்த்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. 2013ஆம் ஆண்டில் 752பெண்களும் 2ஆயிரத்து703ஆண்களும், 2014ஆம் ஆண்டில், 660பெண்களும் 2ஆயிரத்து484ஆண்களும், 2015ஆம் ஆண்டில் 669பெண்களும் 2ஆயிரத்து389ஆண்களும் என மூன்று ஆண்டுகளிலும் எல்லாமாக 9ஆயிரத்து 657பேர் தவறான முடிவெடுத்துச் சாவடைந்துள்ளனர். சட்டம் ஒழுங்கு அமைச்சு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் இரத்தினபுரிப் பொலிஸ் பிரிவிலும் 2015ஆம் ஆண்டில் கண்டிப் பொலிஸ் பிரிவிலும் அதிகமான உயிர் மாய்ப்புச் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிகின்றது. மேலும் வவுனியாவில் இந்த ஆண்டின் தொடக்க மாதங்களிலே உயிர்மாய்க்கின்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராயும் கூட்டமொன்றில் வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் கருத்துரை வழங்கியுள்ளார். 2017ஆம் ஆண்டில் வவுனியாவில் மட்டும் 429பேர் உயிரை மாய்த்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்த அவர், இந்த நிலை தொடருமானால் வினைத்திறனில்லாத சமூகமாக எமது சமூகம் விரைவில் மாறிவிடும் என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளார்.

### உலகளாவிய ரீதியில்!

கனடாவின் மனநல ஆணையத்துடன் இணைந்து உலக சுகாதார நிறுவனம் 2016ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வில் உலகளாவிய ரீதியில் ஆண்டுக்கு எட்டு இலட்சம் பேர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்வதாகத் தெரிவித்துள்ளது.

ஏழை, செல்வந்தர் என்ற வேறுபாடு இல்லாமல் இது இடம்பெறுவதாகவும், இவர்களில் இருபது வீதமானவர்கள் மது அருந்தும் பழக்கம் கொண்டவர்கள் என்றும் குறிப்பிடும் அந்த ஆய்வு, 15 தொடக்கம் 29 வயதுக்கு இடைப்பட்ட நடுத்தர வயதினரே இவ்வாறாகத் தவறான முடிவெடுத்து உயிரை மாய்ப்பவர்களில் பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள் என்று மேலும் சுட்டிக்காட்டுகின்றது. உயிரை இழந்துபோவது பற்றிய விழிப்புணர்வோ, தடுப்பதற்கான வழிமுறைகளோ இல்லை என்பதையும் இது கோடிட்டுக் காட்டுகிறது. இதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசுகளும், மக்கள் சமூகங்களும், கல்வி, மனநல ஆலோசனை போன்றவற்றின் ஊடாக முன்னெடுக்கவேண்டும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளது. இவற்றின் மூலம் அநியாயமான உயிர் இழப்புக்களைப் பெருமளவில் தடுக்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், உலக சுகாதார நிறுவனத்தின் அண்மைக்காலத் தகவல்களின்படி தவறான முடிவை எடுத்து உயிரை மாய்த்துக் கொள்பவர்களின் எண்ணிக்கையில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### தனிநபர், சமூகம் சார்ந்த காரணங்கள்

தவறான முடிவை எடுத்து உயிரை மாய்ப்பதற்கான காரணிகளைத் தனிநபர் சார்ந்தவையாகவும் சமூகம் சார்ந்தவையாகவும் வகைப்படுத்திப் பார்க்கலாம். 'பரீட்சையில் சித்தியடையாமை, காதலில் தோல்வியடைதல், பொருளாதார நெருக்கீடு, தாய், தந்தையர் கழிந்துகொண்டமை, வாங்கிய கடனைக் கட்டமுடிக்காமை, கொடுத்த கடனை மீளப்பெறமுடியாது ஏமாற்றப்பட்டு விரக்தியடைதல்' போன்ற காரணங்களை முன்வைத்துச் செய்துகொள்கின்ற உயிர் மாய்ப்புக்கள் தனிநபர் சார்ந்தவையாகும். கடன் தொல்லைகள், குடும்பத் தகராறுகள், பாலியல் முறைகேடுகள், ஏமாற்றப்பட்டமை போன்ற காரணங்களால் மேற்கொள்ளப்படும் உயிர்மாய்ப்புக்கள் சமூகம் சார்ந்த காரணங்களால் நடந்தேறுபவையாகும். இவற்றை இவ்வாறு பிரித்துப்பார்த்தாலும் இவை ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவையே.

### பாவச் செயல்!

எந்தக் காரணங்களை முன்வைத்து ஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்டாலும் அது கோழைத்தனமான, முட்டாள்தனமான, பாவச் செயலாகும். மேலும், 'சினிமாப் படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் காண்பிக்கப்படும் உயிர்மாய்ப்புக் காட்சிகளும் சமூகத்தில் இத்தகைய தவறான சம்பவங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருக்கின்றன.

அவ்வாறான காட்சிகள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். ஒரு நபருக்குத் தன்னால் பிரச்சினைகளைக் கையாள முடியாத சந்தர்ப்பம் ஏற்படும் போது அவர் இலகுவாக இவ்வாறான முடிவுகளை எடுப்பதற்குத் தூண்டப்படுகிறார்...' என வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் மேற்சொன்ன கருத்துப்பகிர்வில் குறிப்பிட்ட விடயத்தைக் கூர்ந்து நோக்கவேண்டி இருக்கின்றது.

> ஓர் உயிரின் பெறுமதி அவ்வுயிரை இழப்போருக்குத் தெரியாததுதான்! ஓர் இனிப்பைக் கூடப் பணம் கொடுக்காமல் வாங்கமுடியாது! அப்படியிருக்க, உயிரை இழப்பவர் எதுவுமே கொடுக்காமல் எந்த முயற்சியும் செய்யாமல் வெறும் கொடையாகக் கிடைத்த இந்த உயிரை எப்படி அநியாயமாக இழக்க முடியும்? இவ்வாறு பார்க்கும்போது தன் உயிரின்மேல் எந்த அதிகாரமும் இல்லாத மனிதன் தன்னுயிரை அநியாயமாக இழப்பதற்கும் உரிமை அற்றவன் என்பது உறுதியாகின்றது.



**எந்தப் பிரச்சினைக்கும் உயிர்மாய்த்தல் முடிவாகாது!**

பிரச்சினைகள்நீடிப்பதால்நெருக்கீடுகள் உருவாகின்றன. இந்த நெருக்கீடுகள் மன உளைச்சலை - மனச் சோர்வைப் பொதுவாக எல்லாருக்குமே ஏற்படுத்துகின்றன. ஆனால் சிலருக்கே உயிரை மாய்த்துக் கொள்ளும் எண்ணம் வருகின்றது. இதற்கு அடிப்படையான காரணம் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு உயிரை மாய்ப்பது தான் தீர்வு என மிகத் தவறான முடிவை எடுப்பது தான்!

உயிரைமாய்ப்பதற்குஎண்ணுபவர்கள் "இதுஓர்உயிருக்குத்தான்முடிவேதவிர பிரச்சினைக்குஅல்ல!" என்பதைத்தெளிவாகப் புரிந்து கொள்வார்களே ஆனால் இவ்வாறான தவறான முடிவுகளை எடுக்கமாட்டார்கள்.

தவறானமுடிவைஎடுத்துஉயிரைமாய்ப்பது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வாகாது என்பதை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறானசெயல்இருப்பவர்களுக்கு இன்னுமின்னும்நெருக்கீடுகளைஉருவாக்குமேதவிர தீர்வைத் தராது என்பதைத் தனிநபர்களுக்கு ஊட்டவேண்டும். தவறான முடிவைஎடுத்துஉயிரைமாய்ப்பதால்எதையும்சாதித்துவிடமுடியாது. அல்லதுஅதனால் எதுவும்நடக்கப்போவதும்இல்லை. எனவே, அந்த எண்ணத்தையே மனிதர்கள் தமது எண்ணங்களில் இருந்து முற்றாக அகற்றிவிட - அழித்துவிட வேண்டும்.


**உயிர் பெறுமதி மிக்கது**

ஓர் உயிரின் பெறுமதி அவ்வுயிரை இழப்போருக்குத்தெரியாததுதான்!ஓர்இனிப்பைக் கூடப்பணம்கொடுக்காமல்வாங்கமுடியாது! அப்படியிருக்க, உயிரைஇழப்பவர்எதுவுமே கொடுக்காமல்எந்த முயற்சியும்செய்யாமல் வெறும்கொடையாகக்கிடைத்த இந்த உயிரை எப்படி அநியாயமாக இழக்க முடியும்? இவ்வாறு பார்க்கும்போது தன் உயிரின் மேல்எந்தஅதிகாரமும்இல்லாத மனிதன்தன்னுயிரைஅநியாயமாக இழப்பதற்கும் உரிமை அற்றவன் என்பது உறுதியாகின்றது.

வாழ்க்கையின்நோக்கு, இலக்கு இல்லாததே இவ்வாறான தான்தோன்றித் தனமான முடிவுகளை எடுப்பதற்கு இன்னொரு காரணமாகும். 'வாழ், வாழ விடு, வாழ வழி வகு' என்பார் அமரர்அருள்திருபற்றிக்ஞானப் பிரகாசம்அடிகளார். இத்தகைய பற்றுறுதிஒருவரிடத்தில்இருக்குமென்றால் எத்தகைய நெருக்கடியான சூழலிலும் ஒருவர் வாழக்கூடிய வல்லமையைப் பெறுவார்.

**'கிழவனும் கடலும்!'**

தனதுநாவலுக்காகநோபல்பரிசு பெற்றவர்ஏனெஸ்ட்ஹெமிங்வே. 'கிழவனும் கடலும்' என்றொரு நாவலைப் படைத்திருக்கின்றார். இலட்சிய வேட்கைக்கும், தன்னம்பிக்கைக்கும், விடா முயற்சிக்கும் முன்னுதாரணமான நாவல் தான் கிழவனும் கடலும்! கிழவன் ஒருவர் மீன்பிடிக்கச் செல்கின்றார். வலை விரித்த போது ஒரு பெரிய விலாங்கு மீன் ஒன்று சிக்கிக்கொள்கின்றது. அதைக்கரைக்குக்கொண்டுவருவதற்காக அந்த முதியவர் சில நாள்களாகப்போராடிஅந்தவலையைக்கரைக்குக் கொண்டுவருகின்றார். கரையொதுங்கிய வலையைப்பார்த்தபோதுஏற்கனவே, அந்த மீனை ஏனைய மீன்கள் தின்றுவிட்ட நிலையில் அதன் பெரிய எலும்புகள்தான் வலையோடுகிடப்பது தெரிகின்றது!



இருப்பினும் அந்தக் கிழவன் பெருமகிழ்ச்சி அடைகின்றார். காரணம்அந்தக்கிழவனுக்கு அந்த மீனால் பணம் கிடைக்கவில்லையே தவிர தன் முயற்சியில் பெருவெற்றி பெற்றுவிட்டார். இலாபம்கிடைக்கவில்லையேதவிர தன் போராட்டத்தில் வெற்றி பெறுகின்றார். நாவலாசிரியரான ஹெமிங்வேரூபவ் கடலுக்குள் இருந்த அக்கிழவனுக்காக அந்நாவலை எழுதவில்லை. கரைமேல் வாழும் நமக்காகத்தான் அதை எழுதியிருக்கின்றார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். 'திராட்சைப் பழம் நசுக்கப்படாமல் திராட்சை இரசம்உருவாகாது. மலர்கள்அரைக்கப்படாமல் வாசனைத் திரவியங்கள் கிடையாது. ஆகவே, உன்வாழ்க்கையில்அழுத்தங்கள் உள்ளனஎன்றால்பயப்படாதே. அவைஉன்னிடமுள்ள முதல்தரமானவற்றை வெளிக்கொண்டுவரும்' என்பார் அப்துல் கலாம்.

**கொலைகள் பாவமானவை**

கொலைகளில்ஒருவரின்உயிரைஇன்னொருவர்பறிப்பது(கொலை), ஒருவர்தன்னைத் தானேகொலைசெய்வது(தற்கொலை)தீராத - மாறாத நோயால் அவதிப்படும்போது ஒருவர் தனது உயிரைபோக்குவதற்காக மருத்துவ ரீதியாக உதவிபுரிவது (கருணைக் கொலை)கருக்கொலை, சிசுக்கொலைஎனப் பல வகைகளுண்டு. இந்தக் கொலைகள் அத்தனையும் தீமையானவை. பாவமானவை என்பதை மனித நேயம் கொண்ட யாவரும்அறிவர்!கருணைக்கொலைக்கும் கருக்கொலைக்கும் ஆங்காங்கே சில நாடுகளில் சட்டரீதியான ஆதரவு இருப்பினும் இவைபடைத்தவன்பார்வையில்அருவருப்புக்குரியவை. இவற்றில் கொலை, கருணைக்கொலை, கருக்கொலை, சிசுக்கொலைபோன்றனஒருவர்அடுத்தவருக்குச்செய்யும்தீமையாக - பாவமாகக் கருதப்படுகின்றது. ஆனால், தனது உயிரைத் தானே போக்கிக் கொள்வதோ, ஒருவர் தனக்கே செய்யும்தீமையும்பாவமும் ஆகும்.

**வாழ்வதற்குமாற்றுவழிகள்உண்டு!**

காதலில் தோல்வி என்று சொல்லி உயிரைமாய்ப்பதற்குத்துணிபவர்கள் வாழ்க்கையைக் காதலிக்க ஏன் எண்ணுவதில்லை? பிரச்சினையைத் தீர்க்க வழியில்லை என உயிரை மாய்ப்பதற்கு நினைப்பவர்கள் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்குதங்களுக்குத் தெரிந்திராதபலமாற்றுவழிகள்உண்டுஎன்பதைக் கண்டுபிடிக்கவேண்டும்.

தங்களுடைய பிரச்சினைகளையும்தீர்க்காமல் தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குச் சோகத்தையும்தொடர் துன்பத்தையும் ஏற்படுத்துவதாகவே அனைத்து உயிர் மாய்ப்புச் சம்பவங்களும் மாறிவிடுகின்றன. ஆக, தற்கொலைச் செயலானது ஒரு தொல்லையைத் தீர்க்கப்போய் பல தொல்லைகளை உருவாக்குவதாகவேஇற்றைவரைஇருந்து வருகின்றது.

பொதுவாக, இயலாமையுடன்கூடியநபர்கள் தவறான முடிவுகளை எடுப்பது மிகமிகக் குறைவு. சாதிக்கவேண்டும், வாழ்ந்துகாட்டவேண்டும்என்றதுடிப்போடுதான் அத்தகையகவர்கள்வாழ்ந்துகொண்டுஇருக்கின்றார்கள். இயலாமையுடன்கூடிய நபர்களைப் பார்த்து இவர்களை 'வலதுகுறைந்தவர்கள்' எனக் கருதும் 'வலதுகுறையாதவர்கள்' ஆகிய நாம் அவர்களிடமிருந்து வாழ்க்கையைக்கற்றுக்கொள்ளவேண்டும், வாழ்வதற்கான வழிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கண்ணைத் திறந்து கொஞ்சம் கருத்தோடுசிந்திப்போமா?

**சாகச் சில வழிகளே, வாழப் பல வழிகள்!**

துறவி ஒருவரிடம் சென்ற ஒருவன் தான் உயிர்வாழ்வதைவிடச்சாவதே மேல்எனத் தனது விரக்தி நிலையை வெளிப்படுத்தி நின்றான். துறவியோ, 'அப்படியானால் உயிரை மாய்ப்பதற்கான வழிகளைக் கூறு பார்க்கலாம்?' என்றபோது அவன் ஒருசில வழிகளைக் குறிப்பிட்டான். அத்துறவியோ, 'உயிரைமாய்ப்பதற்குஇப்படிச்சிலவழிகளே உண்டென்றால், உயிர்வாழ்வதற்கு எத்தனை வழிகள் உண்டு என்பதை ஏன் இன்னும் நீ எண்ணிப் பார்க்கவில்லை?' என வாழ்வுபற்றி அவனைச் சிந்திக்கத் தூண்டினார்.

முதலில், எந்தக் காரணத்தை முன்னிட்டும் தவறா முடிவை எடுத்து உயிரை மாய்த்துக் கொள்ளக்கூடாது. அப்படிச்செய்யமுற்படுவது பெரும் தீமையான பாவச் செயல் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். யாருடைய உயிரைப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை தன்னுடைய உயிரை மாய்ப்பதற்கும் அவரவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இதை அனைவரும் மனங்கொள்ள வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# பிரதேச சபைகளும் இறைச்சிக்கடைகளும்

இந்த ஆண்டு நடந்து முடிந்த பிரதேச சபைத் தேர்தலுக்குப் பின் இறைச்சிக் கடை விவகாரம் தலைவிரித்தாடுகிறது. சைவ உணவு சாப்பிடுவோரின் தொகையை விட அசைவ உணவு சாப்பிடுவோரின் தொகையே இங்கு அதிகமாகும். நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர்கள் அசைவ உணவு சாப்பிடுபவர்களாக இருக்கிறார்கள். இறைச்சிக்கடைகளுக்குத் தடை போடும்போது, இறைச்சி சாப்பிடுவோர் மாற்று வழியை நாட வேண்டிய கட்டாயம் ஏற்படும். மட்டுமல்ல கால்நடை வளர்ப்போரும் மாற்று வழியை நாட வேண்டிய நிலைதான் ஏற்படும்.

கன்று ஈனத் தகுதியற்ற பசுவை அது சாகும் வரை பாதுகாப்பது என்பது சாதாரண விடயமல்ல. அத்துடன் காளைகளைக் கட்டி வளர்ப்பதும் இதேநிலைதான். இன்று எல்லாமே இயந்திரமயம். இந்த நிலையில் காளைகளை ஏன் கட்டி வளர்க்கப் போகிறார்கள். இங்கு கள்ளத்தனமாய் மாடு வெட்டுவதும் மாடுகளைக் கட்டாக்காலியாக விடுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும். இந்த மாட்டிறைச்சிக் கடைகளுக்கான தடையால், பாதிப்பைச் சந்திக்கப் போகின்றவர்கள் சிறு விவசாயிகளும் கால்நடைவளர்ப்போருமே.

அதுமட்டுமல்ல இன்று பால் உற்பத்தி செய்வோர் அதைச் சந்தைப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எமது பகுதியில் பலர் மாலை நேரப் பால் கறப்பதே இல்லை. கிளிநொச்சிப் பகுதியில் பால் கொள்வனவு செய்தோர் கடந்த இரண்டு மாதங்களாக உற்பத்தியாளர்களுக்குப் பணம் வழங்கவில்லை. நிலமை இவ்வாறு இருக்க, இது குறித்துப் பேசி வருகின்ற ஒரு சிறு பகுதியினரின் பொறுப்பற்ற செயலுக்குப் பிரதேச சபைகள் துணைபோகுமானால் அது பெரும்பாலோனோரின் எதிர்ப்பைச் சந்திப்பதோடு, சட்டத்துக்குப் புறம்பான செயல்களையும் செய்யத் தூண்டும். சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கும் இது வரப்பிரசாதமாகும். சிந்திப்பார்களா பிரதேச சபையினர்.

ப.யேசுபாதம், வட்டக்கச்சி



# ஏமனில் 50இலட்சம் குழந்தைகள் பாதிப்பு

## தொண்டு நிறுவனம் எச்சரிக்கை

சனா.செப்.20

ஏமனில் கிட்டத்தட்ட 50இலட்சம் வரையான குழந்தைகள் வறட்சி மற்றும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக 'சேவ் த சில்றன்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் எச்சரித்துள்ளது. ஏமனில் இடம் பெற்று வரும் மோதல்களால் அந்த நாட்டில் அதிகரித்து வரும் உணவுப் பொருள்களின் விலை மற்றும் ஏமன் நாட்டு நாணயத்தின் வீழ்ச்சி ஆகியவற்றால் பல குடும்பங்கள் உணவுத் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. தற்போது 52இலட்சம் குழந்தைகள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

**ஏமன் போர்**

2015ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அதிகரித்த மோதலால் ஏமன் பெரிதும் சீர்குலைந்துள்ளது. அதிகப் பகுதிகளைத் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். கடும் மோதல் ஏற்பட்ட சூழலில், ஏமன் அதிபர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார். ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா மற்றும் 7அரபு நாடுகள் ஏமன் அரசை மீண்டும் நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றன. இதனால் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே போர் நடைபெற்று வருகிறது.

இதனால், உணவுப் பொருள்களின் விலை 68 சதவீதம் கூடுதலாக உள்ளது. ஏமனின் நாணயத்தின் மதிப்பு 180 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் 'சேவ் த சில்றன்' தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகப் போர்:

## டிரம்ப்பின் முடிவுக்குச் சீனா பதிலடி அலிபாபா நிறுவன உரியைமாளர் ஆதங்கம்

பீஜிங்.செப்.20



அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 20பில்லியன் மதிப்பிலான பொருள்கள் மீது விதித்த வரிக்குப் பதிலடியாக, சுமார் 60பில்லியன் டொலர்கள் மதிப்பிலான அமெரிக்க இறக்குமதிப் பொருள்களுக்குச் சீனா வரி விதித்துள்ளது.

டிரம்ப்க்கு அரசியல் ஆதரவு அதிகமுள்ள மாகாணங்களில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை எரிவாயு உள்ளிட்ட பொருள்கள் சீனாவின் இந்த வரி விதிப்புப் பட்டியலில் அதிகளவில் அடங்குகின்றன. இது அமெரிக்காவில் நடக்கும் இடைத் தேர்தல்களில் தாக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சீனாவின் இத்தகைய நகர்வு உள்ளூர் அரசியலில் தாக்கம் செலுத்தும். அதற்குச் சீனா முயல்கின்றது என்று ட்ரம்ப் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இதன் பிரதிபலிப்பாக அமெரிக்காவுடன் 20 ஆண்டுகள் வரையான வரத்தகப் போருக்குச் சீனா தயாராகி வருவதால், இந்த மோதல் தீருவதற்கு இப்போதைக்கு வாய்ப்பில்லை என இணைய வர்த்தக நிறுவனமான அலிபாபாவின் நிறுவன உரிமையாளர் ஜாக் மா கூறியுள்ளார். இரண்டு நாடுகளின் வரி விதிப்பால் சீனாவின் இணையத் தொழில்நுட்பத் தயாரிப்புகளுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் முன்னணி இணைய நிறுவனமான அலிபாபாவுக்கு இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பங்குச்சந்தையில் அலிபாபாவின் பங்குகள் 3.5 சதவீதம் சரிந்தன. அலிபாபா நிறுவனத்தின் பங்குகள் சரிந்தது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதையடுத்தே அலிபாபா நிறுவன உரிமையாளரின் கருத்து வெளியாகியுள்ளது.

# தேசியக் கொடி ஏற்றியபோது மின்சாரம் தாக்கிச் சாவு

இஸ்லாம்பாத்.செப்.20

பாகிஸ்தானில் தேசியக் கொடி ஏற்றியபோது மின்கம்பி, கொடிக்கம்பத்தில் உரசியதால் அதில் மின்சாரம் பாய்ந்து ஆசிரியரும், மாணவர்கள் 3பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் கைபர் பக்துங்வா மாகாணத்தின் ககான் பள்ளத்தாக்கு பகுதியில் கிவாய் என்று ஒரு கிராமம் உள்ளது. அந்தக் கிராமத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தின்போது, ஆசிரியர் சபீர் அகமது என்பவரும், 3 மாணவர்களும் சேர்ந்து கொடிக்கம்பத்தில் தேசியக் கொடியை ஏற்றினர்.

அப்போது கொடிக்கம்பத்துக்கு மேலே இருந்த மின்கம்பி, கொடிக்கம்பத்தில் உரசியதால் மின்சாரம் பாய்ந்து ஆசிரியரும், மாணவர்கள் 3பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

# மியான்மார் மீது பன்னாட்டு விசாரணை

## ஐ.நாவின் அறிக்கையில் பரிந்துரை

நியூயோர்க்.செப்.20

மியான்மரில் ரோஹிஞ்சா முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்டது தொடர்பாக அந்த நாட்டு இராணுவ உயரதிகாரிகளிடம் பன்னாட்டுத்தரத்திலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.





நைபியடோ, செப்.20

மியான்மரின் ரைக்கூன் மாகாணத்தில் சிறுபான்மையினராக உள்ள ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிராக அங்குள்ள பௌத்த பெரும்பான்மையினரால் கடந்த ஆண்டு மிகப்பெரிய வன்முறைகள் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன், மியான்மர் இராணுவத்தினரும் தொடர் குறித்த முஸ்லிம்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டனர். இதில், இலட்சக்கணக்கான ரோஹிங்கிய முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். 7 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக பங்களாதேஷிலும் இந்தியாவிலும் தஞ்சமடைந்தனர்.

பன்னாட்டு அளவில் மிகுந்த அதிர்ச்சியையும், சர்ச்சையையும் ஏற்படுத்திய இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஐ.நா. புலனாய்வுக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். கிட்டத்தட்ட ஒரு வருடகாலம் வரையிலும் நடத்தப்பட்ட இந்த விசாரணையின் இறுதி அறிக்கையை ஐ.நா. தற்போது வெளியிட்டுள்ளது. 449பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில், மியான்மரில் இலட்சக்கணக்கான ரோஹிஞ்சா முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதில் அந்த நாட்டு இராணுவத்தின் பங்கு கணிசமாக உள்ளது.

இது ஒரு இனச் சுத்திகரிப்பு என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. எனவே, இந்தப் படுகொலை தொடர்பாக அந்த நாட்டு இராணுவத் தலைமைத் தளபதி

> “கடந்த ஆண்டில் மியன்மார் அரசானது பௌத்த பெரும்பான்மையுடன் இணைந்து சிறுபான்மையினரான ரொஹிங்கிய முஸ்லிம்களை இனவழிப்புச் செய்ததைப்போலவே இலங்கை இராணுவமும் சிறுபான்மைத் தமிழர்களை 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது பல வழிகளில் கொன்று குவித்தது.”

மின் ஆங் லெய்ங் உள்ளிட்ட இராணுவ உயரதிகாரிகளிடம் பன்னாட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் மியன்மாரின் அரசியலில் அதிக வகிபங்கையுடைய மியான்மர் இராணுவம் அரசியலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் ஐ.நா. அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. கடந்த ஆண்டில் மியன்மார் அரசானது பௌத்த பெரும்பான்மையுடன் இணைந்து சிறுபான்மையினரான ரொஹிங்கிய முஸ்லிம்களை இனவழிப்புச் செய்ததைப்போலவே இலங்கை இராணுவமும் சிறுபான்மைத் தமிழர்களை 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின் போது பல வழிகளில் கொன்று குவித்தது. ஆனால், அதிரடியாக மியன்மார் மீது ஐ.நா நியாயபூர்வ விசாரணைக்குப் பரிந்துரை செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**மியன்மார் இராணுவம்**


மியான்மரின் ஆட்சியில் இராணுவத்தின் ஆதிக்கம் அதிக அளவில் உள்ளது. அரசைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு அங்கு இராணுவத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. மியான்மர் நாடாளுமன்றத்தின் மூன்றில் ஒரு பகுதி வகிபாகம் இராணுத்திடமே உள்ளது. அதேபோல், உள்துறை மற்றும் பாதுகாப்புத் துறை ஆகிய அமைச்சகங்களும் இராணுவத்தின் வசம் இருக்கின்றன.

# சொகுசுக் கார்களை ஏலம் விட்டார் இம்ரான் கான் ஷெரீப் பயன்படுத்திய எருமைகளையும் விற்பதற்குத் திட்டம்

இஸ்லாமபாத்.செப்.20


பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றதில் இருந்து சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டு வரும் இம்ரான் கான், தலைமை அமைச்சர் அலுவலகத்தில் இருந்த 70வரையான சொகுசுக் மகிழுந்துகளை ஏலத்தில் விற்றுள்ளனர்.

பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சராகப் பதவியேற்ற தெஹ்ரீக்இ இன்சாப் (பிடிஐ) கட்சியின் தலைவர் இம்ரான் கான் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது, "பாகிஸ்தானில் தலைமை அமைச்சருக்கு வழங்கப்படும் மிகப் பெரிய பங்களாவில் தங்க மாட்டேன். அரசு செலவுகளைக் குறைப்பேன். எளிமையாக இருப்பேன்" என்று தெரிவித்திருந்தார். அதன்படி, அங்குள்ள 120 ஆடம்பர வாகனங்களை ஏலத்தில் விட முடிவெடுக்கப்பட்டது. முதல்கட்டமாக 70 கார்கள் ஏலத்தில் விடப்பட்டன. வழக்கமான விலையைக் காட்டிலும் அவை அதிகமான விலைக்கு விற்றுத் தீர்ந்தன. இந்த ஏலம் மூலம் அரசுக்குச் சுமார் ரூ.350 கோடி கிடைத்திருக்கிறது.



அடுத்தபடியாகக் குண்டுதுளைக்காத வாகனங்களை ஏலத்துக்கு விடப்பட இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் தலைமை அமைச்சர் இல்லத்தில் இருக்கும் 8எருமைகளை ஏலத்தில் விடுவதற்கும் இம்ரான் கான் திட்டமிட்டுள்ளார். இந்த எருமைகளை முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரீப், உணவுத் தேவைகளுக்காக வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது பாகிஸ்தானின் கடன் தொகை கிட்டத்தட்ட ரூ.90 இலட்சம் கோடியைத் தொட்டுள்ளது. இது கடந்த நிதி ஆண்டின் பொருளாதாரத்தில் 87 சதவீதம் ஆகும்.

# அணு ஆயுதச் சோதனைக் கூடங்களை அழிப்பதற்குத் தயார் – வடகொரியா



பியோங்யாங்.செப்.20
வடகொரியாவில் உள்ள அணு ஆயுத ஏவுகணைச் சோதனைக் கூடங்களை வெளிநாட்டு நிபுணர்களின் முன்னிலையில் நிரந்தரமாக அழித்துவிடுவதற்கு அந்த நாடு சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தென்கொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும், தென்கொரிய அதிபர் மூன் ஜே உன்னும் வடகொரியாவின் தலைநகர் பியோங்கியாங்கில் சந்தித்துப் பேசியிருந்தனர். பின்னர் இருவரும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்தனர். இந்தச் சந்திப்புக் குறித்துத் தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் கூறும்போது, "வடகொரியா அதன் முக்கிய அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளை நிரந்தரமாக அழிப்பதற்கு ஏற்றுக் கொண்டுள்ளது. அணு ஆயுதங்கள் மற்றும் அணுசக்திகள் இல்லாத அமைதியான நிலமாகக் கொரிய தீபகற்பம் மாறுவதற்கு வடகொரியா சம்மதம் தெரிவித்துள்ளது. வடகொரியா அதன் முக்கிய அணு ஆயுத ஏவுகணை சோதனைகளை வெளிநாட்டு நிபுணர்களின் முன்னிலையில் நிரந்தரமாக அழிப்பதாக ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், அமெரிக்காவின் பரஸ்பர நடவடிக்கையைப் பொறுத்து மீதமுள்ள அணு ஆயுதச் சோதனைகளையும் அழிப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது" என்றார். கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22ஏவுகணைச் சோதனைகளை நடத்தியிருந்து. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப்பட்டன. வடகொரியா தனது 70ஆவது ஆண்டு விழாவைக் கடந்த வாரம் கொண்டாடியது. மாறாக, அதில் அந்த நாட்டின் இராணுவ வலிமையைப் பறைசாற்றும் சக்தி வாய்ந்த படை, அணிவகுப்புக்கள் இடம் பெற்றிருந்தன. இதற்கு முன்னர் வடகொரியா நடத்தியிருந்த அணிவகுப்புகளில் உலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுதங்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால், இறுதியாக நடந்த அணிவகுப்பில் அணு ஆயுதங்கள் இல்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.



# ரஷ்ய விமானத்தைத் தவறுதலாக சுட்டு வீழ்த்தியது சிரியா

இட்லிப்.செப்.20
சிரியாவில் அரசு படைகளுக்கு ஆதரவாகப் போரிட்டு வரும் ரஷ்ய விமானத்தை எதிரி என எண்ணித் தவறுதலாக உள்நாட்டுப் படையினர் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர். நேற்றைய செய்தியில் குறிப்பிட்ட சிரிய வான்பரப்பில் 14இராணுவச் சிப்பாய்களுடன் மாயமாகிப்போன போர் விமானமே இவ்வாறு சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறது.

சிரியாவின் அதிபர் பஷார் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்கள் 2014ஆம் ஆண்டு முதல் சண்டையிட்டு வருகிறார்கள்.

ஆறு ஆண்டுகளாக நடக்கும் சிரியப்போரில்கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும், பஷார் அல் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யாவும் போரிட்டு வருகின்றன. ஆசாத்துக்குத் தேவையான அனைத்து ஆயுத உதவிகளையும் ரஷ்யாவின் அதிபர் புடின் செய்து வருகிறார். கிளர்ச்சியாளர்களின் வசமிருந்த பெரும்பாலான பகுதிகளைச் சிரிய அரச படைகள் கைப்பற்றியுள்ளன. மீதமுள்ள பகுதிகளைக் கைப்பற்றுகின்ற முனைப்பில் இறுதிக் கட்டப் போர் இட்லிப் மாகாணத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்த நிலையில் சிரியாவில் தாக்குதல் நடத்தி வந்த ரஷ்யப் போர் விமானம், நேற்று முன்தினம் விமானப்படைத் தளத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது திடீரென மாயமானது.

மத்திய தரைக்கடல் பகுதியில் பறந்து கொண்டிருந்தபோது, அதன்தொடர்புதுண்டிக்கப்பட்டது. இந்த பகுதியில் சிரியா அரச படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல் படைகள் இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் எனக் கருதப்பட்டது. இதனால், ரஷ்யாவும், இஸ்ரேலும் மோதிக் கொள்ளும் சூழல் ஏற்பட்டது.


ஆனால், ரஷ்ய விமானத்தைத் தவறுதலாகச் சிரியா இராணுவம் சுட்டு வீழ்த்தியிருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

அந்தப் பகுதியில் இஸ்ரேல் விமானம் தாக்குதல் நடத்தி வந்த நிலையில், ரஷ்ய விமானத்தை இஸ்ரேல் விமானம் எனத் தவறுதலாக நினைத்துச் சிரியப் படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர். இதை ரஷ்யாவும் உறுதி செய்துள்ளது.

சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் இருந்த இராணுவச் சிப்பாய்களின் உடல்களைத் தேடும் பணி நடந்து வருகிறது.



# ஸ்ட்ரோபெரிக்குள் ஊசியை மறைத்தால் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை ஆஸி. தலைமை அமைச்சர் ஆவேசம்



சிட்னி.செப்.20
ஸ்ட்ரோபெரி பழத்துக்குள் மெல்லிய ஊசியை மறைத்து வைப்பது தீவிரவாதச் செயல். இந்தச் செயலைச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனையாக 15ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்க வகை செய்யப்படும் என்று ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் ஸ்காட் மோரிஸன் எச்சரித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சந்தைகளில் விற்பனையாகின்ற ஸ்ட்ரோபெரி பழங்களில் சிலர் மெல்லிய ஊசியை நுழைத்து மறைத்துவிடுவதாக ஊடகங்களில் தகவல்கள் பரவின. ஸ்ட்ரோபெரிப் பழங்களைச் சந்தைகளில் வாங்கிச் சென்று சாப்பிட்ட 3க்கும் மேற்பட்டவர்களுக்குத் தொண்டையிலும், வயிற்றிலும் ஊசி சிக்கிப் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

மேலும், பலர் ஸ்ட்ரோபெரிப் பழங்களைச் சாப்பிடும் போது, அதில் ஊசி இருப்பதைக் கண்டுபிடித்தனர். இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்கள் சமூகவலைத்தளங்களில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்திருந்தனர்.

சவுத்வேல்ஸ், குயின்ஸ்லாந்து, விக்டோரியா மாநிலங்களில் உள்ள சந்தைகளில் விற்பனையான ஸ்ட்ரோபெரி பழங்களிலேயே ஊசி இருந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

இதையடுத்து, ஸ்ட்ராபெரி பழம் சாப்பிடும்போது, மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து அஸ்திரேலியாவில் இருந்து ஸ்ட்ரோபெரிப் பழங்களை இறக்குமதி செய்துதைத் தற்காலிகமாகத் தடைவிதித்தது நியூசிலாந்து. இப்படியாக, ஸ்ட்ரோபெரிப் பழங்களில் ஊசி வைக்கும் விவகாரம் தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து அவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்று ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

# படகு மீது போர்க்கப்பல் தாக்குதல்; ஏமனில் 17மீனவர்கள் சாவு!



சனா.செப்.20
ஏமனில் மீனவர்கள் சென்ற படகின் மீது போர்க்கப்பல் ஒன்று குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் 17 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அல்கௌகா துறைமுகப் பகுதியில் சவூதிக் கூட்டுப்படைகளின் போர்க்கப்பல் நடத்திய தாக்குதலில் 17 உள்ளூர் மீனவர்கள் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. கடற்கரை நகரமான அல்கௌகா அருகே கடலில் 18 மீனவர்களுடன் படகு சென்றது. அதன் மீது போர்க் கப்பல் திடீரெனத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஒருவர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளார்.

இது தொடர்பாகச் சவூதி கூட்டுப்படைகளின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "அல்கௌகா துறைமுகத்தில் நாங்கள் தாக்குதல் நடத்தியதாக வெளியாகும் தகவல்கள் அடிப்படை ஆதாரமற்றவை" என்று மறுத்திருக்கிறார்.

**ஏமன் போர்**

ஏமன் தலைநகரான சனா உள்ளிட்ட சில பகுதிகளைக் கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள் ஹவுத்திக் கிளர்ச்சியாளர்கள். அவர்களுக்கு எதிராகச் செயற்படுகின்ற ஏமானின் அதிபர், சவூதி அரசின் உதவியை நாடினார்.


இதையடுத்து, கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சவூதி தலைமையிலான கூட்டுப்படைகள் ஹவுத்திக் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகள்மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலடியாக ஹவுத்திப் போராளிகள் சவூதி அரேபியா நாட்டு எல்லைப்பகுதியில் உள்ள நகரங்களின்மீது ஏவுகணைகளை வீசி அவ்வப்போது தாக்குதல்களை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# ஈழத்தின் அகிம்சைப் பயிர் தரித்த தியாக நெய்தல் பயணம்



விதுரன்

பசித் தீயின் தகிப்பு விடுதலையின்றி அகிம்சையின் கரங்களை இறுகப் பற்றியபடியே நீள் பயணம் கொண்டது. ஆறாவது நாளின் விழிகை அங்கலாய்ப்போடு அந்தரித்தது. இயற்கையின் இருள் புலரும் முன்பே உரிமையின் பருக்கை உண்ணப் புறப்பட்ட பிள்ளையவன் திலீபன் அதிகாலைப் பொழுதிலேயே தாயக விடுதலையை எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்திருந்தான். நீராகாரம் கூட இல்லாத தியாகப் பயணம் அவனிடத்தில் அதிக சோர்வைத் தந்திருந்தது. ஆனாலும் வீரமும் இலட்சிய வேள்வியும் வதனத்தில் பொதிந்திருந்தது. ஈழப் பயிராக செந்தளிப்பாய் கொழித்திருந்தது.



### ஆறாவது நாள்

புனிதப் பயணத்தின் ஐந்தாம் நாள் இருள் கவிதல் என்பது திலீபனின் தியாக ஒளியால் பிரகாசித் துக்கொண்டிருந்தது. ஆறாவது நாள் ஆரம்பமும் அவனது உருக்கமும் ஏதோ ஒன்றைச் சுட்டி நின்றது. ஆறாவது நாள் காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோவிலில் திலீபன் பெயரில் நூற்றுக் கணக்கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்தவண்ணமிருந்தன. பிற்பகல் மூன்று மணியிலிருந்து யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து அதிகளவான மக்கள் பேருந்துகளில் வந்து நல்லூர் ஆலயச் சூழலில் ஒன்றுதிரண்டனர். எங்கு பார்த்தாலும் மக்கள் அலை கரைபுரண்டது.
தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்தாள். அவள் அழுத காட்சி நெஞ்சை உருக்கின. துரோகிகள் வீசிய வெடிகுண்டு மூலம் தன் மகன் ஒரு காலை இழந்து போனது பற்றி அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் மகத்தானவை. "ஒரு கால் போனால் என்ன..? இன்னும் ஒரு கால் இருக்கு. இரண்டு கையிருக்கு. அவன் கடைசி வரையும் போராடுவான்." என்ற உத்வேகம் இன்னமும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

### மனிதநேயமற்ற காந்தி தேசம்

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றி கண்டார் என்றால், அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத் தளம் இந்திய மண்ணிலே அமைவுபெற்றிருந்தது. காந்தியின் போராட்டத் தளத்திலே மனிதநேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார்கள். ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது. ஆனால் எமது மண்ணில் அப்படியா?
எத்தனை சந்தர்ப்பங்களில் எமது தலைவர்கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப்பார்கள்? எத்தனை இனக்கலவரங்களில் எம் இனத்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டுத் தார்ப் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும்? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்? அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்? இல்லையே!



### விடுதலை வேண்டும்

அகிம்சை! அகிம்சை! அகிம்சை! இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தன. திலீபன் என்ற தாயகத்துப் பிள்ளையவன் தியாக தீபமாய் சுடர் கொண்டு பற்றிய வாசகமும் அதுவே. இந்தக் தாரக மந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லையே. அவர்களாகத்தான் தந்தார்கள். மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன. தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணி திரண்டு வீரமாய் வீறுகொண்டு எழுந்ததற்கு காரணம் யார்? சிங்களப் பேரினவாதம்தான்.

### அகிம்சையின் விளைவு

ஆம், முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை 'செல்வா' தலைமையில் முயன்றும் முடியாத நிலையில் தானே தமிழினத்தை அழிவிலிருந்து காப்பாற்ற வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம் என்று பொருள் உரைத்திருந்தது.
உண்மையில் நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் எம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன். அவனுக்கு அது புரியாதது. அவன் தெரிந்து கொண்டதெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான். ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தான் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும்.
நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948 ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமைகள் தீரவில்லை. இன்னமும் முடிந்தபாடில்லை. எப்பொழுது முடியும்? தங்கத் தமிழர் தம் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்?



## பார்த்தீபன் கனவு

நல்லூர் முன்றலில் எழுந்ததோர் வேள்வித் தீ
கருகிப்போனதோர் உன்னத தியாகம்!
பசியை வென்ற எங்கள் பாலகனுக்கு அன்று
பாரதம் செய்ததோர் மகா பாதகம்!

ஆறுநாள் விரதத்துக்கே வரமருளும் வேலவன் கூட
அவன் கண்மூடும்வரை கண்திறக்கவில்லை!
நல்லூர்க் கந்தனும் கருணையற்றவனானான்!
இந்திய வல்லூறுகள் செய்த பொல்லாத சதி
தியாக தீபமொன்றை அணைத்தது விதி
சிந்திய கண்ணீரில் மூழ்கியதே நல்லூரான் வீதி!

அகிம்சையே அறமென்ற இந்திய தேசம்
ஈழத்தில் செய்த முதல் நாசம்!
பார்த்தீபனின் பட்டினிப்போரால்
வெளுத்துப்போனது பாரதத்தின் அகிம்சை வேஷம்!

பஞ்ச் வேண்டுதலோடு பட்டினி கிடந்து போராடி
பார்த்தீபன் மடிந்த போதுதான் மகாத்மாவுக்கும் புரிந்திருக்கும்
கோட்சேயின் துப்பாக்கிக் குண்டில் தான் சாகவில்லையென்று!
வீணர்கள் பார்த்து ரசிக்க வீணாகிப் போனதவன் தியாகம்!

தியாக சீலன் திலீபன்!
ஈழத்தாய் எல்லோருக்கும் பிள்ளையானவன்
இளையவர் அனைவருக்கும் அண்ணனானவன்
மகா யாகத்தின் புனிதம் வென்றவன்
தியாகத்தின் சிகரம் தொட்டவன்
ஈழமண்ணுக்கு இலட்சியத் திலகமிட்டவன்!

அவன் வயிற்றில் பற்றிய தீதான்,
இன்னும் எரிகிறது எங்கள் நெஞ்சிலே!
அவன் தாங்கிய விடுதலைத் தாகம்தான்,
இன்றும் தணியாத தாகமாய் எம்மிலே!

மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!
சுதந்திர தமிழீழம் மலரட்டும்!
இது அன்று அவன் உதிர்த்த நிதர்சன வார்த்தைகள்!

திலீபனின் தியாகம் ஜெயிக்கட்டும்!
பார்த்தீபன் கனவு பலிக்கட்டும்!
இதுதான் நம் மனதில் என்றும்,
அழியாமல் விதைக்க வேண்டிய இலட்சிய வார்த்தைகள்!

தியாகச் செம்மல் திலீபனின்
பசியையும் தாகத்தையும் எமதாக்குவோம்!
பேருலகே எதிர்த்தாலும்
பார்த்தீபன் கனவு ஒருநாள் பலிக்கும் அவனது
உன்னத தியாகம் நிச்சயம் ஜெயிக்கும்!

ஒருவன்



# வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வரனை துதிப்போம்

இராசையா ஸ்ரீதரன்



ஈழத்துத் திருப்பதி என்று போற்றப்படுகின்ற, வரலாற்றுச் சிறப்பு மிக்க வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாளுக்கு இன்று இரதோற்சவம். காத்தற் கடவுளான மகா விஷ்ணு மூர்த்தியானவர் வண்ணமயமாக வண்ணையில் எழுந்தருளி, ஸ்ரீ வேங்கடேஸ்வரானாக அருட்காட்சி தரும் கோலம் ஆனந்தமயமானதாய் அமைந்து விளங்கும்.

அழகிய, வானளாவிய, உயர்ந்த, கம்பீரமான இராஜகோபுரத்துடன் காட்சியளிக்கின்ற எம்பெருமானுடைய இந்த அருள்மயமான ஆலயம்; நாவலர் வீதிக்கும் மணிக்கூட்டுக் கோபுர வீதிக்கும் அணித்தாக அமைந்துள்ளது. அருட் சக்திகளான ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராய் ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாள் அழகே ஓருருவெடுத்தாற் போன்று, சர்வாலங்கார பூஜிதராகத் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருகின்ற திவ்யமான அருட்காட்சி நற்பேறுடையது. இத்தகு சிறப்புடைய ஆனந்தக் கோலாகலக் காட்சியை மனமாரக் கண்குளிரக் காண்பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியங்களைச் செய்திருக்க வேண்டும்.


பண்டாரவளை மார்க்கண்டேய பத்மசாலிச் செட்டிமார் ஆதின மகா சபையினரால் சிறந்த முறையிலே பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்ற இந்த ஆலயத்தில், ஒவ்வோர் ஆண்டும் திருவோண நட்சத்திர நாளைத் தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு, பத்துத் தினங்கள் வருடாந்த மகோற்சவப் பெருவிழா வெகு சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

பக்திமயமான இன்றைய இந்தத் திருநாளில் ஆலய வீதிகள் புனிதம் கொள்ளும். எம்பெருமான் திருவீதி உலா வருகின்றபோது வீதியெங்கும் வாழை, மாவிலை, தோரணங்கள் மங்கலகரமாய் அசைந்தாடி அடியவர்களுக்கு மாயவனின் அருள்ச் சிறப்பை எடுத்துரைக்கும். வெளி வீதியின் சுற்றுப் பிரகாரத்தில் பூரண நிறை கும்பம், குத்து விளக்குகளின் பட்டொளி வீச்சு என்பவை அடியவர்களின் திருத்தொண்டாய் எம் பெருமானை வரவேற்று வழிபாடியற்றும் அழகு பக்தி பூர்வமானதாக அமைந்திருக்கும்.

ஒவ்வோர் ஆண்டும் எம்பெருமான் தேரிலே ஆரோகணித்து அருள் பாலிக்கும் அழகைக் காண யாழ், குடா நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் கூட்டம் அலைமோதும் பாங்கும், பஜனைக் குழுவினர் மாயவன் புகழ் பாடிக் களிக்கும் தன்மையும் அருள் மயமான காட்சியாக நிலைபெற்றிருக்கும்.

ஆக, இன்றைய தினம் எம்பெருமானை மனம், வாக்கு, மெய்யால் வழிபாடு இயற்றி, நாட்டில் சாந்தியும் சமாதானமும், நிம்மதியான வாழ்வும் செழித்தோங்க வரம் வேண்டுவோம்.

■■■



# திருவருட் சிறப்புடைய நாயகன் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளை காண வாருங்கள்!

காரை.எம்.பி. அருளானந்தன்

### ஈழத்துத் திருப்பதி

செந்தமிழும் சைவநெறியும் சார்புறத் தழைத்தோங்கும் ஈழமணித்திருநாட்டின்கண் வைஷ்ணவத் தலங்கள் பல உள்ளன. இவற்றுள் ஈழத்துத் திருப்பதி என அழைக்கப்படும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமள் ஆலயம், யாழ்ப்பாணத் திருநகரிலே வண்ணையெம்பதியிலே அமைந்துள்ள முதன்மையான திருத்தலமாக விளங்குகின்றது.

நவக்கிரக வழிபாட்டுக்குப் பிரசித்தி பெற்று விளங்கும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம், முதன்மை வாயிலிலே ஏழு மாடங்களைக் கொண்டமைந்த இராஜகோபுரத்தையும், அதன் இரு புறத்தே மணிக் கோபுரங்களையும் கொண்டுள்ளது. இந்த அழகிய, உயர்ந்த இராஜகோபுரத்தில் இடம்பெற்றுள்ள கதை விக்கிரகங்கள், திருமாலின் தச அவதாரச் சிறப்பையும், ஸ்ரீ இராமாயன ஸ்ரீமத் பாகவத் புராணங்களின் சில பகுதிகளையும் நினைவூட்டுகின்றன.

கர்ப்பக் கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி, வேண்டுவார் வேண்டும் வரங்கள் அனைத்தையும் தருகின்ற நாராயணப் பெருமானாக எழுந்தருளியுள்ளார்.

### மாயவன் அழகு

இங்கு, 'நாராயணன்' என்ற நாமகரணம் எவ்வாறு தோற்றம் கொண்டது என்பது பற்றிச் சிந்திக்கின்ற போது, 'நரா' என்றால் புருசனிடத்திலிருந்து தோன்றிய பூதங்கள் முதலான பிரபஞ்சப் பொருள்கள் என்றும் 'அயனன்' என்றால் அமர்ந்திருப்பான் என்றும் பொருள்படும்.

திருமால் சதுர்புஜம் அல்லது நான்கு திருக்கரங்களை உடையவனாயிருக்கின்றான். மனிதனது ஆற்றலுக்கு அறிகுறி இரண்டு கைகள். அவைகளில் ஒருகை இல்லாவிட்டாலும் அவன் பல காரியங்களுக்கு உதவமுடியாதவனாகின்றான். இரு கைகளையுடையவன் எதையும் செய்யவல்லவனாகிறான். ஆயினும் மானிட ஆற்றல் அளவைக்கு உட்பட்டது. தெய்வத்தின் ஆற்றல் அளப்பரியது என்பதை நான்கு கைகளும் எடுத்தியம்பி நிற்கின்றன.

பெருமான் ஒரு கையில் சங்கை ஏந்தியிருக்கின்றார். அந்தச் சங்கை நாதமுற ஊதுமிடத்து உண்டாகும் ஒலி ஓங்காரம். இங்கு 'ஓம்' என்னும் ஓசைக்கு நாதப் பிரம்மம் என்று பொருள். இது ஒரு மொழியிலும், ஒரு சமயத்திலும் கட்டுப்படாதது. இயற்கை முழுவதும் இயங்குவதால் உண்டாகும் சப்தமே ஓங்காரம். அது பிரணவம் என்று குறித்துரைக்கப்படும். தன்கையில் சங்கை வைத்திருப்பவன் மூலமே பிரணவப் பொருள் என்பதை அரங்க நாதன் அடியவர்களுக்கு அறிவுறுத்துகிறான்.

### பரிபூரணன்

அரங்கநாதன் அரங்கத்தில் சயனித்திருக்கின்றான் என்றபோதிலும் அவன் ஒரு நாளும் அரங்கத்தைச் சார்ந்திருப்பவனல்ல. அரங்கம் அவனைச் சார்ந்திருக்கிறது. பார்வைக்கு கண்வளர்ப்பவன் போன்று திருக்காட்சி தருகின்றான்.

உண்மையில் மாயவன் பேரறிவாளனாகவே திகழ்கின்றான். பரிபூரணப் பொருளாக அவனுடைய சந்நிதியிலே உலகம் யாவும் தோன்றுதலும், நிலை பெறுதலும், நீங்குதலும் என முடிவில்லாத விளையாட்டாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றான்.

### திருத் தொண்டாற்றுங்கள்!

உடலை அவனுக்கு உகந்த பெரிய கோயிலாக்கி, அவனுக்கே பணிவிடை செய்து அவனுக்கென்று வாழ்ந்திருந்தால் எமது முகம் பாற்கடல் போன்று பொலிவுபெறும். இத்தகு பெருமைகளைக் கொண்ட நாராயணன் யாழ் வண்ணையம் பதியிலே எழுந்தருளி நித்தியமும் அருள் பாலித்திருக்கின்றான். கர்ப்பக் கிரகத்திலே எழுந்தருளியுள்ள ஸ்ரீ வேங்கடேஸ்வர முர்த்தியைச் சூழப் பரிவார மூர்த்திகளாக ஆழ்வார்கள், ஸ்ரீமகாலட்சுமி, நந்தகோபாலர், ஸ்ரீராமர், ஆண்டாள், ஆஞ்சனேயர், நவக்கிரகத் தெய்வங்கள் அழகிய திருக்கோயில்களில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றனர். இத்தகு திருவருட் சிறப்புக்களை உடைய நாயகன் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவியர் சகிதம் இன்று தேரில் ஆரோகணித்து அருள்கூறும் காட்சியைக் காண மாயவன் அடியவர்கள் ஆசார சீலர்களாக ஆலயம் வாருங்கள். அவன் அருள்ப் பேற்றினைக் கண்டு வாழ்வில் சகல சம்பத்துக்களையும் பெற்று நிறைவான வாழ்வைப் பெற, பக்திமார்க்கம் தனில் திருத் தொண்டாற்றுங்கள்.



■■■



# யாழ்ப்பாணம் - வண்ணை
# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்- 20.09.2018

## வண்ணை வேங்கடேசனுக்கு இரதோற்சவம்

"ஈழத்து திருப்பதி" எனப் போற்றி சிறப்பிக்கும் ஆலயம் வண்ணை வேங்கடேசவரதராஜப்பெருமாள் கோயில் புரட்டாதி மாத திருவோண நட்சத்திரதை தீர்த்தமாக கொண்டு பத்து தினங்கள் வருடாந்த மஹோற்சவகாலம் நடைபெறுகிறது.

108 திவ்விய சேஸ்திரங்களில் திருப்பதி வேங்கடேசப் பெருமாள். காஞ்சி வரதாராஜப் பெருமாள். ஸ்ரீரங்க இரங்கநாதப்பொருமாள் ஆகிய மூன்று ஆலயங்களும் பிரசித்த மானவை அனேக ஆழ்வார்களால் மங்கள சாசனம் பாடப்பட்ட தலங்கள் இத்தலங்கள் வழிபட்ட மூர்த்திகளையும் ஒரே சமயத்தில் வழிபடக் கூடிய தலம் எமது வண்ணை ஸ்ரீவேங்கடேஸ்வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம் இவ் ஆலயத்தின் கருவறையில் வரங்களை வாரி வழங்கும் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராக வரதராஜரும் பாவங்களைப் போக்கும் வேங்கடேசப் பெருமாளும் தெற்கை நோக்கி இரங்கநாதப்பெருமாள் அழ்ந்த சயனத்தில் அருள் புரிகின்றனர்.

சரணாகதி தத்துவத்தை விளக்கும் வைஷ்ணவ வழிபாட்டில் பெருமானுள்ள பாத தரினமும் சடாலி ஆசி வழங்குதலும் மிகவும் சிற்பானதொன்று மக்களின் குறை தீர்க்கும் வண்ணை வேங்கடேசப் பெருமானின் இன்றைய இரதோற்சவம் பக்தர்களின் பாவங்களை சுட்டெரித்து அகங்காரங்களை அழித்து தேதேறி வந்து அருள் புரிய ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமானின் பாதம் பணிந்து ஆசிகூறி நிற்கின்றோம்.

கோவிந்த நாம் சங்கீர்தனம்

**பிரதம குரு பிரம்ஸ்ரீ இ. இராமணிதரக்குருக்கள்**

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில்.**

## ஆதின மகா சபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

எம்மை எல்லாம் காக்கும் கடவுளாக விளங்கும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் இன்று தேரிலே ஆரோகனிக்கின்றார் துன்பங்களை துடைத்துதொழித்து இன்பங்களை அருள தேரேறி வரும் தேவாதி தேவனான ஸ்ரீ வேங்கடேசர் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரராக காட்சிதரும் அழகை இன்று நேரிலே காணலாம்.

எல்லாம் வல்ல பெருமாள் வழிபடும் அடியவர்களின் வினை தீர்த்து ஆனந்தமயமான பேரின்ப பெரு வாழ்வு நல்க வேண்டும் என்று அவரது பொற்பாதக்கமலங்களை பணிந்து போற்றி வாழ்த்திகின்றோம்.

வண்ணை வேங்கடேசன் திருவருள் பாலிக்க வேண்டும்.

கோவிந்த நாம் சங்கீர்த்தனம்

ஆதின மாகாசபை

தலைவர் இரா. பாலமுரளி

# வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வரலாறும் யாழ். புராதன சைவாலயங்களும் அவைகளின் வைபவ வரலாறும்

**1560** ஆம் ஆண்டு பிற்காலப்பகுதியில் சேர. சோழ பாண்டிய மன்னர்களால் இலங்கைத் தீவுக்கு பரிவாரமும் பாண்டித்திய முள்ள ஆள்களை இந்தியாவி லிருந்து அனுப்பி அதில் சிலர் மன்னார் தம்பப்பானைப் பகுதிக்கும். மட்டக் களப்பு. யாழ்ப்பாணத்திற்கும் சென்றடைந்தனர். பாண்டிய மன்ன ருக்குச் சங்கீதத்தில் மிகவும் ஆர்வமுடையவர் என்றபடியால் யாழ். வாசிக்கக் கூடியவர் ஒருவருக்கு " யாழ்ப்பாடி" என்ற பெயர் அமைவாகச் சூட்டப்பட்டு யாழ்ப்பாணத்தைப் பரிசாகக் கொடுத்து யாழ்ப்பாணத்தை தன் வசமாக வைத்திருக்கும் படி அறிவுறித்தினார். ஆனால் இந்த யாழ்பாடியோ கண் பார்வையை இழந்தவர். இருந்தும் ஒவ்வொரு பகுதிக்கும் சென்றவர்களில் ஒருவரை அந்த இடத்துக்கு மன்னராகத் தெரிந்தெடுத்தார்கள். அதில் எல்லாள மன்னர். காசியப்பமன்னர். சங்கிலியன் என்ற பெயர்களோடு இந்த மூன்று இடங்களையும் அரசாட்சி புரிந்தனர். இவர்களுக்கு ஆடை / நெசவு தொழிலில் பாண்டித்தியம் பெற்ற திறமை சாலிகளை தொழில்புரிய சிலர் தேவையென இந்தியாவில் காரைக்கால் திருமலைராயன் பட்டினம். ஆடுதுறை. வலங்கைமான் திருச்சரை. கும்பகோணம். திருநாகேஸ்வரம். கோவிந்தபுரம். என்னும் பல இடங்களில் இருந்து நல்லார்க்கு மடியார் வழித் தோன்றல் பரம்பரையில் வைணவ குலத்தைச் சேர்ந்த பத்ம சாலிச் செட்டிப்பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து இலங்கைக்கு அதிலும் வடபகுதி யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்தனர். இச்சாகியத்தினர் பரம்பரை இன்னும் பல இடங்களிலும். குறிப்பாக மன்னார்கோயில். காஞ்சிபுரம். சேலம் பகுதி களிலும் வசிக்கின்றனர். இவ்வைணவ குல மணிகளுக்கு ஒரு வைணவ ஆலயம் வணங்குவதற்குத் தேவையென யாழ்ப்பாணத்தில் இப்போ அடியார்க்கு நல்லான்வரம்பு காணியில் அடியார்கள் வணங்கிவரும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தை அப்பொழுது இருந்த பெயர் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயில் என்னும் நாமகரணத்தோடு தற்பொழுது இருக்கும் ஸ்ரீ மகா லெட்சுமி கோயிலுக்குப் பின்புறம் ஒரு பலா மரம் இருந்தது அதற்குக் கீழே வைணவர் ஒருவர் ஒரு சிறு விக்கிரகத்தை இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்து பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். ஏனைய வைணவர்களும் அவ்விக்கிர கத்தை வழிபட்டு காலத்துக்குக் காலம் பல அபிஷேகங்களும். மஹோற்ச வங்களும் நடைபெற்று வந்தன. இன்றும் ஒவ்வொரு மாத ஏகாதசித் தினத் தன்றும் இவ்விக்கிரகத்தை ஆதி நாராயணர் என்று அழைக்கப்பட்டு கோயில் உள் வீதி வலம் வரும் காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சி யாகும்.

மேலும் இக்கோயில் மூலஸ்தானத்தில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தி. ஸ்ரீதேவி பூமிதேவி. சமேதரோடு ஆதி நாராயணரும் இணைந்து ஆதி சேஷன் மீது துயில் கொள்ளும் ஸ்ரீ ரெங்கநாதர் திருவுருவங்களும் அடியார்கள் மனதைப் பரவசப்படுத்தும் தன்மையில் காட்சியளிக்கின்றன. "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்பதற்கொப்ப கோபுரத்தின் எழில் மிகத் தோற்றத்தின் ஏழாவது நிலத்தின் தென்புறம் ஸ்ரீ மகா லெட்சுமி கோயிலும் வடபுறத்தே ஸ்ரீ ஆண்டாள் திருவுருவக் கோயிலும். முதலாம் நிலத் தொடக்கத்திலிருந்து ஏழுமாடம் வரை எழில் மிகு ஸ்ரீ மந் நாரயாணமூர்த்தி யின் தசா வதாரங்களான மச்ச. கூர்ம. வராக. நரசிம்மா. வாமன. பலராம. இராம பரசுராம. கிருஷ்ண. கல்கி ஆகிய அவதார வடிவங்களில் காணப் படுகின்றார். இவற்றோடு வருட பட்சியில் ஸ்ரீ மகா விஷ்ணு தனது தேவிய ருடன் வீற்றிருக்கும் காட்சி பார்ப்போரைப் பரவசம் படுத்தி ஒரு நிலைப்படுத் தும். வருடாவருடம் இரதோற்சவ தினத்தன்று ஸ்ரீ மந்நாராயண மூர்த்தி தனது ஸ்ரீ தேவி. பூமிதேவி யாருடன் எழுந்தருளி இரதமேறி வீதி உலா வரும் பொழுது ஆகாயத்தில் இரதத்தின் மேல் கருட பட்சிகள் வட்டமிட்டுவலம் வரும் காட்சி ஒரு அற்புதக் காட்சியாக நிகழ்கின்றது. அவ்வேளை அடியார்கள் அனைவரும் "ஹரோ ஹரா " என்னும் ஹரிநாம கோஷக்குரல்களை ஒலிக்க கேட்பவர் மனம் பக்திப்பரவசமடையுமல்லவா.

இலங்கையில் பின்பு கி.பி.1665 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் ஆட்சி புரிந்த பொழுது எல்லா இந்து சமயக் கோயில்களையும் பரிபூரணமாக இடித்துத்தரை மட்டமாக்கினர். எனினும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதாஜப் பெருமள் தேவஸ்தானம் மட்டும் இடிக்க முடியவில்லை இருந்தும் பலவகையாலும் முயன்றும் இந்தியா தலையிட்டு அக்காலத்து மன்னர்கள் பலரும் இந்தியாவிலும் வைணவர்களாக இருந்த படியால் இக்கோயிலை இடிக்க முடியவில்லை. சைவசமய அடியார்களைக் கூட வேத்க் கோயில்களில் வணங்கும்படி கட்டளையிட்டனர். நல்லூர்கந்த சுவாமிகோயில் கூட இடிப்பட் டது. ஆயினும் சங்கிலிய மன்னன் காலத்து ஆட்சியில் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் பின்பு முறைப்படி புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்ய முடியாத காரணத்தால் பலரும் வியந்தனர். இதன் காரணமென்ன வென்றால் கோயில் மூலஸ்தானத்தில் ஒரு பால்குடி பாபாவின் சமாதி இருப்பதைக் காண்டு கும்பாபிஷேகம் இன்றுவரை நடைபெற முடியாமல் இருக்கின்றது.

வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் எஞ்சியுள்ள சைவக் கோயில்கள் யாவும் இடிபட்டன. ஆனால் வைணவ கோயில்கள் மட்டும் இடிபடவில்லை. இப்பவும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலுக்கு நேர் எதிரில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட வேதக்கோயில் கம்பீரமான தோற்றத்தோடு காட்சியளிப்பதைக் காணலாம்.

அக்காலத்தில் இஸ்லாமியரும் நல்லூர்க்கந்த சுவாமி கோயிலை தரிசிப்பது வழக்கம். இப்போ இருக்கும் நல்லூர்க்கந்த சுவாமி கோபுரம் வாயிலுக்குப்பக்கத்தில் மணிக்கோபுரத்துக்குக் கீழேயும் ஒரு கோபுரம் வாசலைப் போல் ஒரு வாசல் இருந்தது. அந்த வாசலின் நேர் எதிரில் உள்புறம் பால்குடி பாபாவின் சாமதி இருக்கிறது. இஸ்லாமியர்களை

→ தொடர்ச்சி →

→ தொடர்ச்சி →

அந்த பால்குடி பாபாவின் சமாதியைத் தரிசித்து வணங்கிவர அனுமதித்த நல்லூர்க்கந்தசுவாமி கோயில் நிர்வாகிகள் பின்பு சைவர்களுக்கு வெள்ளிக் கிழமைகளிலும் மஹோற்சவ காலங்களிலும் சுவாமி வீதிவலம் வரும் பொழுது சுவாமிக்குப் பின்னால் சைவப்பக்தர்கள் மெற்மறந்து ஆடிப்பாடி முருக பஜனை களைப் பாடும் பொழுது இஸ்லாமியர் பலரும் அங்கு ஒன்றுசேர்ந்து தாங்கள் வணங்கும் முறைப்படி வணங்கிவருவதும் வழக்கமானதால் இச்செயல் சைவ அடியார்களுக்கு ஒரு பின்னடைவாகவும் அசௌகரியமாகவுமிருந்தமையால் இஸ்லாமியரைத் தங்களுக்கென பள்ளிவாசல்களைக் கட்டி வழிபடும்படி சைவர்கள் பல உதவிகளைச் செய்தும் அன்போடு பணித்தார்கள், எது எவ்வாறா யினும் இஸ்லாமியருக்கு உருத்தின் பிரகாரம் இன்றும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்றலில் கற்பூர வியாபாரம் செய்ய அனுமதியுண்டு.

இவைகள் இவ்வாறு இருக்க வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயிலை நல்லாருக்கடியான் வரம்புக் காணிமூலம் விஸ்தரிக்கப்பட்டு இன்று மூலவிக்கிரகங்கள் இந்தியாவில் இருந்து ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளா கவும். ஸ்ரீ மகாலெட்சுமி. ஸ்ரீ ஆண்டாள் தேவி மூவர் கொண்ட விக்கிரங்கள் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கோடானுகோடி பக்த சிரோன்மணிகளுக்கு வடபால் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானாகக் காட்சி அளித்து அருள் பாலிக்கிறார். ஸ்ரீ மந்நாராயணர் பண்ணவளாச் செட்டிப்பிள்ளைகள் என்றழைக்கப்படும் பத்மசாரிகளால் இக்கோயில் இப்பொழுதும் முறைப்படி பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் இக்கோயிலின் ஆதீன மகாசபை அங்கத்தவர்களாக இருக்கின்றனர். இவ்வாதீன மகாசபையாரே காலத்துக்குக் காலம் பராமரிப்புத்தத்துவக்காரர்களை நியமித்து கோயில் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இவ்வாலயம் வைகாசனமுறைப்படியும் பாஞ்சராத்திர முறைப்படியும் கிரியைகள் நடைபெறுகின்றன. 1884ஆம் ஆண்டிலும் ஒரு கும்பாபிஷேகமும். 1941. 1952. 2003 ஆம் ஆண்டுகளில் சம்புரோக்ஷண அஷ்டபந்தன கும்பாபி ஷேகங்களும் நடைபெற்றிருக்கின்றன.

உலகத்தில் கண்ணுள்ள சர்வ ஜீவராசிகளையும் காத்து இரட்சிக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, ஈழத்தின் வடபால் யாழ். நகரின் மத்தியில் வண்ணையம் பதியிலே எழுந்தருளி வழிபடும் அடியார்களின் இன்னல்களைந்து துன்பம் நீக்கித் துயரது அகற்றி சங்கடம் தீர்க்கும் ஸ்ரீ வேங்கடவனின் பிரமோற்சவம் புரட்டாதித் திருவோண நட்சத்திரத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் பாரததேசத்தில் திருப்பதி என்னும் பிரசித்தி பெற்ற வைஷ்ணவ திருத்தலத்தின் அடியொற்றியதாக விளங்கும் ஈழத்துத் திருப்பதி எனப்போற்றப்படும் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாளின் திரு விழாக்கள் திருவருளால் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி. உறியடி. உற்சவங்களைத் தொடர்ந்து கொடியேற்றம். வெண்ணைத்தாளிச்சேவை. இரதோற்சவம். தீர்த்தோற்சவம் திருவோணதீபம். திருக்கல்யாணம். திருவூஞ்சல். சுமங்கலி தீப பூஜை. இத்திருவிழாக்களை அடுத்து சனீஸ்வர பகவானின் முக்கியம் வாய்ந்த சனிவாரங்கள் புரட்டாதி மாதமாகும்.

ஹரி ஓம் நமோ நாராயணா என்னும் நாமத்தை ஓதி பிறவிப்பிணியை அழித்துக் காக்கவல்ல பெருந்தெய்வமாம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் என்றும் போற்றப்படுகின்றார். மனிதனிடத்தில் எத்தனை கருவி கரணங்கள் இருந்தாலும் மனதை உள்முகமாக ஒடுக்கக் கொண்டு இறைவனி டம் சரணடைதல் வேண்டும் என்பதைக் குறிக்கக் கோபுரத்திலுள்ள பெருவாயில் ஒன்றுதான் பயன்படுகின்றது.


பச்சை மாமலை போல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
ஆயர்தம் கொழுந்தே யென்னும்

இச்சுவை தவிர யான்போய்
யிந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்க மாநகருளா னே

குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுயராயின் வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள் விசும் பருளும்
அரு ளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயண வென்னும் நாமம்

சனீஸ்வர பகவானின் வழிபாடு
புதிர் நிறைந்த மந்தகதிப் பெருங்கோளே
சனி தேவா போற்றி
பூவுலகோர் பாவங்கள் நின்மாட்சி
கருந்தேவா போற்றி





**வைணவ சமய வரலாறு**

சநாதன தர்மம் எனப்படும் இந்து சமயத்தின் பிரிவுகளி லொன்று வைணவம். வைணவத்தின் கடவுளை மகாவிஷ்ணு அல்லது நாராயணன் என்னும் நாமகரணத்தில் வழிபடும் சமய மாகும். வைணவத்தின் தோற்றம் சரித்திர காலத்துக்கு முற்பட்டது. வேதங்களி லும் மகாபாரதம் முக்கிய இதிகாசங்களிலும் விஷ்ணு வழிபாடு கூறப்பட்டுள்ளது. வைணவத்துக்குப் பஞ்சராத்திரம். பாகவதமதம், சாத்வாத மதம் ஏகாந்திய தர்மம் எனப் பல பெயர்கள் உண்டு. பகவத்கீதையிலும் பாகவதபுராணத்திலும் விஷ்ணு புராணத்திலும் வைணவ சமயக் கொள்கைகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

வேதங்களிலும். புராணங்களிலும். வைணவ சமயக் கருத்துக்கள் விளக்கப் பட்டிருப்பினும் வைணவ சமய சாதனை முறைகளும் தத்துவ முடிவுக ளும் மிகச் சிறப்பாகப் பஞ்சராத்திர ஆகமங்களில் விளக்கப்பட்டுள்ளன. வைணவர்கள் ஸ்ரீமந்நாராயணனையே முழுமுதற் கடவுளாக வழி படுகின்றனர்.

ஸ்ரீமந் நாராயணனே வட மதுரை. பிருந்தாவனம். கோகுலம். துவா ரகை ஆகிய இடங்களில் கிருஷ்ணனாகவும் பூரியில் ஜெகந்நாதனாக வும். காஞ்சியில் வரதராஜனாகவும். திருப்பதியில் ஸ்ரீ நிவாசனாகவும். பண்டரிபுரத்தில் விட்டலனாகவும். சிதம்பரத்தில் கோவிந்தராஜனாகவும். ஸ்ரீரங்கத்தில் அரங்கநாதனாகவும். மதுரையில் அழகராகவும். திருவநந்த புரத்தில் பத்மநாபனாகவும் வணங்கப்படுகின்றார்.

சங்க நூல்களிலொன்றாகிய பரிபாடலில் ஆறு பாடல்கள் திருமாலைப் பற்றியன. பத்துப்பாட்டு. சிலப்பதிகாரம். மணிமேகலை முதலிய நூல்களிலும் திருமாலைப் பற்றிய குறிப்பவதாரங்கள் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஸ்ரீமத் நாராயண னைப் பற்றிய பிரேமையுடன் இனிய தமிழில் பாடிப் பரவசப்பட்ட மெய்யடியார்கள். ஆழ்வார்கள். அவர்கள்

1. பொய்கை யாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருப்பானாழ்வார்
5. திருமழிசையாழ்வார்
6. தொண்டரடிப் பொடியாழ்வார்
7. குலசேகர ஆழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. திருமங்கையாழ்வார்
11. நம்மாழ்வார்
12. மதுரகவியாழ்வார்

எனப் பன்னிருவராவர். இம்மெய்யடியார்கள் பல்லவ அரசர் காலத்திலும். சோழ அரசர் காலத்தின் முற்பகுதியிலும் வாழ்ந்தார்களென ஆராய்ச்சியாளர் கூறுவர். கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையிலுள்ள காலமே இவர்கள் வாழ்ந்த காலமெனக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

ஆழ்வார்கள் பாடப்பெற்ற திருப்பாடல்களின் தொகுதி நாலாயிரத் திவியப்பிரபந்தம் என அழைக்கப்படும். ஸ்ரீ மந்நாராயணன் உலகசேமத்தின் பொருட்டும் அடியார் கள் பொருட்டும் ஐந்து விதமான வடிவங்களில் தோன்றுகின்றனரெனக் கூறும். அவை பரத்துவம். வியூகம். விபவம். அந்தர்யாமித்வம். அர்ச்சை என இவ்வடி வங்கள் அழைக்கப்படும். பரத்துவம் எனப்படுவது திருமால் பரமபதத்திலுள்ள நிலை. வியூகம் என்பது படைத்தல். காத்தல். அழித்தலாகிய அருளல் தொழில் களைப்புரியும் பொருட்டு எடுக்கும் நிலையைக் குறிக்கும். இத்தொழில்களைச் செய்யும் பொழுது வாசுதேவன். சங்கர்ஷணன். பிரத்தியுத்மணன். அநுருத்தன் என்ற பெயர்களில் செய்யப்படும் விபவம் என்பது அவதாரங்களாகும். அந்தர் யாமித்வம் என்பது பொருள்கள் யாவற்றிலும் பரவி நிற்கும் நிலையாகும். அர்ச்சை என்பது திருக்கோயில்களில் காணப்படும் திருவடிவங்களைக் குறிக்கும். எது எவ்வாறாயினும் சிவ வழிபாடும் முருக வழிபாடும் எவ்விதம் பண்டைத் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கியனவோ அவ்விதமே திருமால் வழிபாடும் தமிழர்களால் பெருமையோடும் பக்தி சிரத்தையோடும் வளர்க்கப்பட்டு வந்தன. தென்னாட்டில் பண்டைக் காலந்தொட்டு நிலவி வந்த திருமால். மாயோன் வழிபாட்டுடன் வட நாட்டி லிருந்து வந்த பாஞ்சராத்திர மதம். பாகவத மதம். வாசுதேவ வழிபாடு ஆகியனவும் ஒன்று சேர்ந்து இன்று தமிழ் நாட்டில் விளங்கும் வைணவம் உருப்பெற்றது. சிவபி ரானும் திருமாலும் ஒருவரே யென்னும் பெருவுண்மையை ஆழ்வார்களின் பாடல்கள் எடுத்துக் காட்டாக அமைகின்றது. மேலும் ஆழ்வார்களின் உள்ளங்கனிந்தெழுந்த அன்பு நெறியையும். உப நிஷத்துக்கள். பகவத் கீதை. பிரம்மசூத்திரம். பாஞ்சராத்திர ஆகமங்கள் ஆகியனவற்றில் கூறப்பட்ட தத்துவ முடிவுகளை யும் ஒன்று சேர்த்து உத்தமமான பக்திமார்க் கத்தை உலகத்துக்களித்த பெருமை வைணவ ஆசாரிய பெருமக்களுக்குரியதாகும். அவர்களுள் மிகச் சிறந்தோர் நாத முனிவர். யமுனாச்சாரியார். இராமாநுஜர். வேதாந்த தேசிகர். மணவாள மகா முனிவர் என்போராவர். நாத முனிவர் பத்தாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர். வடமொழி. தென்மொழி. இரண்டிலும் சிறந்த பாண்டித்தியம் படைத்தவர். யோகசித்தி வாய்க்கப்பெற்றவர். யாத்திரி கன் ஒருவன் சடகோபர் என அழைக்கப்படும் நம்மாழ்வாரின் பதிகத்திலொன்றாகிய,

ஆராவமுதே யடியேனும்
நினபா லன்பாயே
நிராய லைந்து கரையவுருக்குகின்ற
நெடுமாலே
சீரரா் செந்நெல் கவரி வீசும்
செழுநீர் திருக் குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்
கண்டே னெம் மானே!

என்ற திருப்பாசுரத்தைப் பாடக்கேட்டு அப்பாட்டில் பரவசப்பட்டு. நம்மாழ்வாரும் பிற ஆழ்வார்களும் பாடிய பாடல்களைத் தேடித் தொகுத்து அதற்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்னும் நாமமிட்டு அவற்றை வேதங்களுக்குச் சமமாக வைணவர்கள் ஓதி வரும் வண்ணம் இசையுமமைத்து பணியாற்றினார்.

**ESOFT** *Shaping Lives, Creating Futures.*

பட்டப்படிப்பிற்கான புதிய பிரிவு ESOFT யாழ் வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டது

LONDON METROPOLITAN UNIVERSITY






# DEGREE DIVISION

## GRAND OPENING





SRILANKA'S ONLY PEARSON PLATINUM AWARD WINNER

**PEARSON ANNUAL AWARDS 2018**

**ESOFT** *Shaping Lives, Creating Futures.*

## ESOFT METRO CAMPUS

No. 137, K.K.S Road, Jaffna | Telephone : 021 7 572 572

40 Branches Island-wide | Sri Lanka's Largest Private Sector Higher Education Network | www.esoft.lk

**HOTLINE 077 309 9 308**

# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

# 2019 A/L DAY CLASSESS

**2018 AUGUST பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது**

**திங்கள் தொடக்கம் வெள்ளி**

**COM.MATHS 7.00**

திரு.P.செந்தில்நாதன்
திரு.S.சிவகரன்

**BIOLOGY 7.00-9.30**

வழமையான ஆசிரியருடன்
திரு.T.கெங்காதரன்

**CHEMISTRY 9.30 - 11.30**

திரு.K.சிவத்திரன்

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை நடைபெறுகின்றது.

**PHYSICS 11.30-1.30**

திரு.G.பிரபா
திரு.S.சோதிலிங்கம்

**AGRICULTURE 3.00-4.30**

திரு.M.றோய்
திங்கள் தொடக்கம் வெள்ளி

**CHEMISTRY English Medium 9.30 - 11.30**

திரு.S.V.செல்வரஞ்சன்
(கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர்)



அழகும் அறிவும்
திருவும் குணமும்
நலமும் அருளும்
திருக்கரத்தோனே

பரித்ராணாய ஸாதூநாம் விநாஷாய
ச துஷ்க்ருதாம்
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே
யுகே.



நல்லோரை காக்கவும்,
தீயன செய்வோரை அழிக்கவும்
அறத்தை நிலை நிறுத்தவும்
நான் யுகந்தோறும்
பிறக்கிறேன்

## நல்லூர்க் கந்தன்
### திருமணசேவை



எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு,
உள்நாடு ஆகிய சகல திருமணங்களும்
எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 973 3183 /021 2216071

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

## நந்தலாலா இரும்பகம்
## NANTHALALA HARDWARE

Dealers in all kind of Power tools, Machine, Electronic Scale & Silver Pipe & Fittings

விற்பனை முகவர்:




AUTHORIZED DEALER
RETOP WELDING EXPERT

No.29, Stanley Road, Jaffna. Tel: 021 222 6234

## KANTHA VELAN TRADERS
KVT கந்தவேலன் ரேடர்ஸ்

*Distributors in Paints & Hardware*

No.110 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Stanley Road, Jaffna.
T.P: 021 222 2822, 077 225 0377
Fax: 021 222 4496




## THILLAIYAMPATHYS MOTORS

Dealers in : Agriculture & Electric Water Pumps, KEN Power Tools, Engineering Tools, Generators, Machines & Spare Parts.

# 100, Stanley Road, Jaffna.
Phone : 021 222 5710
Fax : 021 222 4542
Mobile : 0777 666 371
E-mail : tmotorsln@yahoo.com



தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

## Vayuputhra Phone Shop
வாயுபுத்ரா போன் சொப்

No.364, Hospital Road, Jaffna. T.P: 077 36 44 246 / 077 8595 151



அனைத்து
விதமான போன்
விற்பனை மற்றும்
Repairs

சகலவிதமான போன் Repairing and Unlock இங்கு செய்து தரப்படும்

அதிசொகுசு பயணிகள் போக்குவரத்துச் சேவை
வாயுபுத்ரா
புக்கிங் சென்றர்
சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.



ஆசனப் பதிவகம்
யாழ் ⇄ கொழும்பு
(தினமும்)

ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 36 44 246 / 077 8595 151

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்




DMI COMPUTER EDUCATION

DIPLOMA IN ENGLISH
Spoken English

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
Reading Writing Speaking Listening

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m. |

| | |
|---|---|
| சுன்னாகம் | Mon,Wed,Fri 11:30 a.m |
| சண்டிலிப்பாய் | Mon,Wed,Fri 1:30 p.m |
| கிளிநொச்சி | Sat, Sun 10.30 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS
• Unique Test Tips
• Latest course Materials

IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 வீதி, |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை


➤ அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
➤ கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
➤ நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால
அசைக்க முடியாத
நம்பிக்கையை
வென்ற நாம்



## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

01, பிறவுண் வீதி, நாவலர் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6113



# BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

## COMPUTING
- Access (Degree Foundation Programe)
- BTEC HND in Computing
  - Network Engineering
  - Software Engineering
  - Applications Development
- Bsc (Hons) in Computing
- BSc (Hons) in Managment of IT

## MANAGEMENT
- Diploma in Business Management (BMAC)
- BTEC HND in Business Management
- BTEC HND in Marketing
- BTEC HND in HR Management
- BA (Hons) in Business Management

## LANGUAGE & TEACHING
- Diploma in English
- Certificate in English

## LEGAL STUDIES
- LLB (Hons) in Law

## ENGINEERING
- BTEC National Diploma in Engineering
- BTEC HND in Civil Engineering
- HND in Electrical & Electronc Engineering
- BSc / BEng (Hons) in Civil Engineering

## BIOMEDICAL SCIENCE
- Foundation in Science
- BTEC HND in Biomedical Science
- BTEC HND in Biotechnology
- BSc (Hons) in Biomedical Science

## BUILDING STUDIES
- CAD & BS
- BTEC HND in Quantity Surveying
- BSc (Hons) in QS (RICS)

## POSTGRADUATE STUDIES
- Extended Postgraduate Diploma Level 7
- MBA
- MSc in Construction Project Management

Pearson | University of East London | University of Wolverhampton | CIOB | RICS

MADHU 0777 102131

SANCHU 0777 692318

INTAKE NOW ON

UGC Recognized · TVEC Approved

20 YEARS

ISO 9001:2008 CERTIFIED

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna.



021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk

BCAS Ranked "Platinum Partner" No.1 once again

# சாரங்கா
நாணயமாற்று சேவை

MONEY EXCHANGE
All Countries

சாரங்கா
MONEY EXCHANGE






WESTERN UNION
MONEY TRANSFER

சாரங்கா நகைமாடம்
Tel: 021 222 6972
இல: 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

JMJ
# SM SELVA MOTORS
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்



அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களுக்கான
உதிரிப்பாகங்களை உத்தரவாதத்துடன் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

215,217, Stanley Road, Jaffna.
T.P: 021 222 9793

# SUPER SHOES



ஆண், பெண் சிறுவர்களுக்கான
பாதணிகளை இங்கே
பெற்றுக்கொள்ளலாம்.

154, Navalar Road. Jaffna. T.P.: 021 222 6809

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

# V.S.P
சாப்பாட்டு நல்லெண்ணெய்
SPECIAL GINGELLY FOOD OIL

47 வருடமாகியும்
அதே சுவையுடனும்,
தரத்துடனும்
இலங்கை நான்கு
திசைகளிலும்
அன்றுபோல்
இன்றும்
V.S.P வெற்றி
நடைபோடுகின்றது.

தாயின் அன்பைப் போன்று நம்பிக்கையானது



போலிகளை கண்டு ஏமாறாமல்
V.S.P நல்லெண்ணெய் வாங்கும்போது
தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
இல. 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியை பார்த்து வாங்கவும்
தொலைபேசி : 021 222 4135/9165

யாழ். நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட
# ASR WEDDING HALL and HOTEL



புரட்டாதி 17 தொடக்கம் ஐப்பசி 16 வரையான காலப்பகுதியில் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா மற்றும் பிறந்தநாள் வைபவத்திற்கு பதிவினை மேற்கொள்பவர்களுக்கு 15% விசேட கழிவு வழங்கப்படும்.





எமது திருமண மண்டபத்தில்
இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய திருமணங்கள் அவர் அவர்களின் கலாசாரத்திற்கு ஏற்றவிதமாக ஒழுங்கு செய்யப்படும்.




எமது திருமண மண்டபத்தில்
திருமணம் செய்யும் திருமண
தம்பதியருக்கு நவீன வசதிகள்
கொண்ட அலங்கரிக்கப்பட்ட
அறை அன்றைய தினம்
இலவசமாக வழங்கப்படும்.

Sponsored By:
ASR HOTEL
ASR Hotel
021 221 1357 / 022 222 1356 Email:asrhoteljaffna@gmail.com No.542, K.K.S Road, Jaffna.

ASR HOTEL / WHITEPALM RESTAURANT
- ✓ Jaffna Special - Kool, Seafoods, Rice & Curries.
- ✓ Sri Lankan Cuisine - Friedrice, Kottu
- ✓ Indian Cuisine - Naan rotti, Thandoori, Chettinad
- ✓ Chinese Cuisine - Soups, Devils Eats
- ✓ Western Cuisine - Sandwich, French fries, Grilled Meats
- ✓ Hot Drinks - Ceylon Tea, Coffee, Masala Tea
- ✓ Cool Drinks - Coke, Pepsi, Marinda, Ginger
- ✓ Fresh Fruit Juice - Lankan Tropical Fruits Juices

ROOMS AC / NON AC
- ✓ Family Rooms (2 Adult+2 children)
- ✓ Double Room (2 Adult)
- ✓ Twin Room (2 Adult)
- ✓ Single Room (1 Adult)









T.P: 021 222 1355 / 021 373 4116
E-mail: asrhalljaffna@gmail.com
542, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 1356, 021 221 1357
Mobile : 076 326 3188
E-mail: asrhoteljaffna@gmail.com
Facebook: ASRHotel Jaffna.

RVG குழுமம்

## மரண அறிவித்தல்

# திருமதி செல்லம்மா கந்தையா



யாழ். நவற்கிரியைப் பிறப்பிடமாகவும், ராசவீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கந்தையா நேற்று (19.09.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, பாக்கியம், சுப்பிரமணியம், பொன்னம்பலம் மற்றும் ராசமணியர் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், புனிதவதி மற்றும் அருணகிரி (யாழ்ப்பாணம்), சிவஞானம் (கனடா), வினாயகமூர்த்தி (பிரான்ஸ்), வேல்வதி (யாழ்ப்பாணம்), நற்குணம் (ஜேர்மனி), தனலட்சுமி (சுவிஸ்), செல்வராணி (கனடா), புவனேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2018) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூத்வுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**அருணகிரி (மகன் -யாழ்ப்பாணம் 071 305 6314),**
**சிவபாதசுந்தரம் (மருமகன் - யாழ்ப்பாணம் 077 069 1630)**

## பணிநிலை வேண்டுகை

யாழ். நகரில் இயங்கிவரும் எமது மொத்த விற்பனை நிலையத்துக்கு விற்பனை பிரதிநிதிகள் (Sales Representative) தேவை. விரும்புபவர்கள் சுயவிபரக் கோவையை எதிர்வரும் 29.09.2018 இற்கு முன்பாக கீழ் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சுப்ப சூஸ்**

154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/19921)(10)

## மருத்துவ விடயங்களுக்கான தாதியர், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையில் பயிற்சிகளுக்கு பயிலுநர்கள் தெரிவுசெய்தல் - 2018

மேற்படி விடயம் தொடர்பாக 31.08.2018 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான தாதியர், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் கற்கை நெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுதிகதி **28.09.2018** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தொடர்ந்து சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். தனிப்பட்ட வகையில் விண்ணப்பங்களை மேற்கொள்வது தொடர்பில் சிரமங்கள் ஏற்படின் விண்ணபதாரர் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் உரிய ஆலோசனைகளை பெற்று விண்ணப்பிப்பதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. எனவே வடமாகாணத்தில் சுகாதார சேவையை மேம்படுத்தும் பொருட்டு உரிய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்குமாறு அறியத்தரப்படுகின்றது.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**வடமாகாணம்.**

(in.35547) (13.17)

### உந்துருளி...

இடத்திலேயே உயிர் இழந்தார். மீசாலை வடக்கைச் சேர்ந்த ந.நிக்சன்(வரதன், வயது -23) என்ற இளைஞனே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கொடிகாமத்தில் இருந்து சாவக்சேரி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமும் ,சாவகச்சேரியில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த உந்துருளியும் மீசாலையை அண்மித்தபோது நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின எனத் தெரிவிக்கப்பட்டது. இதில் உந்துருளியில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். டிப்பர் வாகனம் இன்னொரு வாகனத்தை முந்துவதற்கு முற்பட்டபோது விபத்து ஏற்பட்டதாகச் சாட்சிகள் தெரிவித்தனர். டிப்பர் சாரதி தப்பித்து விட்டார் எனவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7-9-159)

## மரண அறிவித்தல்

# திருமதி செல்வரத்தினம் இந்திரகுமார்



பிறப்பு 16.04.1946 — இறப்பு 19.09.2018

காரைநகர், சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனகராயன் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் இந்திரகுமார் நேற்று (19.09.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - அன்னலட்சுமி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் மருமகளும் இந்திரகுமாரின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம் (தனம்), பற்குணம் (குணம்), சற்குணம் (குலம்), வசந்தா (வசந்தி - ஓய்வுபெற்ற ஆசிரியை), யோகராசா (யோகர் - பெற்றோல் நிரப்பு நிலைய உரிமையாளர், கனகராயன்குளம்), இலங்கேஸ்வரி (ரதி - ஆசிரியை), ராமமலர் (சுமதி), தனேந்திரன் (நேசன்), தயானந்தன் (பாபு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கவீந்திரன் (கவி), மனோந்திரன் (வவி), கவிதா, கீதா, சுதா, லதா, கயேந்திரன் (கஜன்), அஜந்தா, ஆருணியா (அனோதா), ஆதித்தன் (நிறஞ்சன்), அமுதினி (அவனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமுதினி, கோகிலா, காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் சபாரட்ணம், உதயகுமார், பிரபாகரன், சிவகுமார், தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்துஜன், ரசிகா, மாதவன், மித்திரன், ராகவி, வராகவன், கவீன், இரத்தினகீதன், மயூரகீதன், பிரவீன், சுஜி, மெகதர்சன், குபேதினி, ஆகிஷன், லவனி, பார்வனி, கங்காலினி, யாதங்கன், ஓவியங்கன், கங்கயன், நர்த்தனன், நிகிதா, விகின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிதம்பரராணி (ராசாத்தி), சவுந்தரலட்சுமி, பரிமளகாந்ததேவி, ரஞ்சிதமலர், வசந்தகுமாரி, நகுலநாதன், சிவஞானம் (நளினி), குகநாதன், காலஞ்சென்ற கணேசரட்ணம் மற்றும் ரதினி (ரதி), சுகந்தினி (துசி), மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 18430/15/17)

**சில்லாலை, பண்டத்தரிப்பு.**
**இந்திரகுமார் (கணவர்) 076 163 5832, குலம் (சகோதரன்) 077 154 4226,**
**உதயன் (பெறாமகன்) 077 871 2990, பாபு (சகோதரன்) 076 857 3798**

**தகவல்: குடும்பத்தினர்.**

## பட்டப்பகலில்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: நிதி நிறுவனத்தில் காலை 8.28 மணியளவில் பெண் காசாளர் இருந்துள்ளார். நிதி நிறுவனத்தில் இருந்த மற்றொரு பணியாளர் கழிப்பறைக்குச் சென்றுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில், முகத்தை மறைத்தபடி ஒருவர் திடீரென நிதி நிறுவனத்துக்குள் புகுந்துள்ளார். பெண் காசாளரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியுள்ளார். பின்னர் பணத்தை வைத்துள்ள பெட்டியிலிருந்து கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார். சில நிமிட நேரங்களில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. உடனடியாகவே பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். நிதி நிறுவனத்திலிருந்த மறைகாணி (சிசிரிவி) சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. கொள்ளையன் தலைக்கவசம் அணிந்திருந்தமையினால் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. இதேவேளை நிதி நிறுவனத்துக்குச் சற்றுத் தொலைவில் உள்ள ஒழுங்கையில் மற்றொருவர் உந்துருளியில் நின்றிருந்தார் எனவும், அவர் கொள்ளையனை ஏற்றிச் சென்றார் எனவும் மறைகாணி காணொலிகளின் அடிப்படையில் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

(5,9,159,105,106)

## திலீபனின்...

பட்டுள்ளதாவது: 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி எமக்கெல்லாம் ஒரு மாபெரும் முன்னுதாரணத்தை நிகழ்த்தி, எமது மக்களின் விடுதலைக்காக அகிம்சா ரீதியான போராட்டத்தில் 23ஆம் வயதில் இன்னுயிரை நீத்தார் அண்ணன் திலீபன் (இராசையா பார்த்தீபன்). அன்று முதல் அகிம்சா மூர்த்தியாக எமது மக்கள் 'தியாக தீபம், தியாகி லெப்டினன் கேனல் திலீபன்' என்று மகுடம் சூட்டி இன்றுவரை நினைவு கூர்ந்து வருகின்றார்கள். இந்த நாட்டின் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் எவ்விதமான பேதங்களும் முரண்பாடுகளுமற்று தியாக தீபம் தியாகி திலீபனை மதிப்போடு நோக்குவதும்; அவரது மகோன்னத தியாகத்தை மரியாதையோடு நினைவுகூர்வதும் தொடர்ந்தும் நிகழ்ந்து வருகின்ற ஒரு நிகழ்வாக இருக்கின்றது.

தியாக தீபம் திலீபன் தனது மக்களின் விடுதலைக்காக தனது அகிம்சா ரீதியான போராட்டத்தை நிகழ்த்திய நல்லூர் மண்ணும், அவர் தனது உயிரை தனது மக்களுக்காக ஆகுதியாக்கிய மண்ணும் யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அன்று முதல் இன்றுவரை யாழ்ப்பாணம் மாநகரசபை தியாக தீபம் தியாகி திலீபனை மதிப்புறுத்துவதையும், அவருக்கான நினைவாலயம் அமைப்பதையும், ஆண்டுதோறும் நினைவுகூர்வதையும் தனது பொறுப்பிலேயே நிகழ்த்தி வருகின்றது. தியாக தீபம் திலீபன் தமிழ்பேசும் மக்களுக்கானவர் மாத்திரமல்லர், அவர் அகிம்சா ரீதியாகப் போராடுகின்ற அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்குமுரியவர். அவர் ஒரு கட்சிக்கோ ஓர் இனத்துக்கோ உரியவர் அல்லர். மாறாக விடுதலை வேண்டிய அனைவருக்குமானவர். தேசியத் தலைவர் பிரபாகரன் திலீபனை தனது மகன் என்று விழித்துப் பேசியிருக்கின்றார். தனது போராட்டம் தமிழ்பேசும் மக்களுக்கானது என்று அறுதியிட்டுக் கூறியிருக்கின்றார். இவ்வாறான ஒரு கட்டுக்கோப்பான இயக்கத்தின்வழி வந்த ஒரு தியாகியை நினைவு கூர்வதில் எவ்வித பேதங்களும் இருக்கக் கூடாது.

எல்லாவிதமான முரண்பாடுகளையும் களைந்து தமிழ்பேசும் மக்களாக எதிர்வரும் 26ஆம் திகதி தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முழுமையான ஏற்பாட்டில் இடம்பெறும். அனைவரையும் ஒற்றுமையாக இறுதிநாள் நிகழ்வுகளில் பங்கேற்குமாறு மாநகரசபை சார்பில் நான் அழைப்புவிடுக்கின்றேன்.

இந்த நிகழ்வுக்கு மேலதிகமாக குறித்த நினைவிடத்தைச் சூழ வேறு நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான அனுமதிகள் வழங்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுமாறும், நல்லூர் ஆலய வடக்கு வீதியில் உணவு ஒறுப்பு இடத்தில் அகவணக்க நிகழ்வுகள் இடம்பெற்று அடுத்து, பொதுச்சுடரேற்றல், ஈகச்சுடரேற்றல் மலரஞ்சலி செலுத்துதல் நிகழ்வுகள் அனைத்தும் நினைவுத்தூபிக்கு அருகாமையில் இடம்பெறும்.

எமது போராட்டத்தை நேசிக்கும், எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் அனைத்துத் தமிழ்பேசும் மக்களின் பங்குபற்றுதலோடு சிறப்புற இடம்பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறு மீண்டுமொருதடவை வலியுறுத்த விரும்புகின்றேன் என்றுள்ளது.

இதேவேளை தியாக தீபம் திலீபனின் நினைவுநாள் ஆரம்ப நிகழ்வு நல்லூரில் உள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும், ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கும் இடையே கருத்து மோதல்கள் இடம்பெற்றிருந்தன. இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் மேற்படி அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

(5,8,105)

## நள்ளிரவில்...

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளர் தெரிவித்ததாவது: இரவு 12.10 மணியளவில் வீட்டில் இருந்த 4பேரும் உறக்கத்திலிருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டது. நாங்கள் யாரும் வெளியே வரவில்லை. சிறிது நேரம் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 20 நிமிடங்களுக்குப் பின்னர், தாக்குதலாளிகள் வீட்டின் முன்னால் இல்லை என்று அயலவர்கள் அலைபேசி ஊடாக அறிவித்த பின்னரே வெளியில் வந்து பார்த்தோம்.

நாங்கள் பந்தல் சேவை நடத்துபவர்கள். வீட்டின் முன்பாக வாடகைக்கு வழங்கும் பிளாஸ்ரிக் கதிரைகள் இருந்தன. அவற்றில் சுமார் 6 கதிரைகளை அடித்து உடைத்துள்ளனர். அத்துடன் தீ வைத்து எரித்துள்ளனர். யன்னல் கண்ணாடிகள், மின்குமிழ்கள், வீட்டின் கேற் சுவரில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள், கேற்றில் இருந்த தகரம், பாத்திரங்கள் வைக்கும் ராக்கை என்பன அடித்து உடைக்கப்பட்டுள்ளன. வந்தவர்களை நாங்கள் பார்க்கவில்லை. உந்துருளிச் சத்தம் மாத்திரம் கேட்டது - என்றார்.

பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. நேற்று அதிகாலை சம்பவ இடத்துக்கு இரண்டு தடவைகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (5,9)

## தமிழ்...

தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஞாயிற்றுக் கிழமை அவர்களைச் சென்று பார்வையிட்டிருந்தார். தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை தொடர்பில் தலைமை அமைச்சருடன் பேச்சு நடத்தவுள்ளார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை தலைமை அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

'தலைமை அமைச்சருக்கு தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை எடுத்துக் கூறப்பட்டது. அவர்கள் ஒவ்வொருவரது நிலமையும் தனித் தனியே சுட்டிக்காட்டப்பட்டது. அரசியல் கைதி ஒருவருக்கு 5 ஆண்டுகளாக வழக்கு தவணையிடப்பட்டு வருகின்றது. அவரது வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் வருவதில்லை. இப்படி ஒவ்வொருவரின் நிலமையும் தலைமை அமைச்சருக்கு சுட்டிக்காட்டப் பட்டது. இது தொடர்பில் சட்டமா அதிபருடன் பேச்சு நடத்தியே முடிவு செய்ய முடியும் என்று தலைமை அமைச்சர் பதிலளித்தார்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (5)

## ஒரே வீட்டின்...

பெற்றோல் குண்டு வீசியும் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவத்தினால் அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலில், வேலன் சின்னத்தம்பி (வயது-68) அவரது மனைவியான சின்னத்தம்பி வசந்தராணி (வயது-59), மகனான சின்னத்தம்பி மதன் (வயது-38), பேரப்பிள்ளைகளான ரவிநாதன் சகிர்தன் (வயது-17), ரவிநாதன் ரஞ்சித் (வயது-19) ஆகியோரே காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. நேற்று அதிகாலை 12.30 மணியளவில் 3 உந்துருளிகளில் 6பேர் கொண்ட கும்பல் வந்துள்ளது. அவர்கள் தங்கள் முகங்களை மூடிக்கட்டியவாறு நுழைந்துள்ளனர். வாள்கள்; பொல்லுகளுடன் வந்த அவர்கள், வீட்டுக் கேற்றை உதைந்து திறந்துள்ளனர். வீட்டின் முன்பக்கத்திலுள்ள கண்ணாடி யன்னல்கள் 7 இனை அடித்து நொருக்கியுள்ளனர். வீட்டிலிருந்தவர்கள் சத்தம் கேட்டு எழுந்துள்ளனர். வீட்டுக் கதவை உடைத்து உள்புகுந்த கும்பல், சின்னத்தம்பி மீதும் அவரது மனைவி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். சின்னத்தம்பி வியாபாரத்துக்காக வைத்திருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். வீட்டிலிருந்த பெறுமதியான தொலைக்காட்சியை உடைத்ததுடன், வீட்டின் வெளியே நின்றிருந்த உந்துருளியையும் தாக்கிச் சேதப்படுத்தினர்.

தாக்குதலாளிகளை எதிர்த்து, சகிர்தன் மற்றும் ரஞ்சித் ஆகியோர் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் கும்பல் தப்பித்து ஓடியுள்ளது. தாக்குதல் நடந்தபோது, சின்னதம்பியின் மகனான மதன் வீட்டில் இருந்திருக்கவில்லை. அவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

நோயாளர் காவு வண்டிச் சேவைக்கும், பொலிஸாருக்கும் சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அதிகாலை 1.30 மணியளவில், பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்தனர். நோயாளர் காவு வண்டியில் காயமடைந்த சின்னத்தம்பியும் அவரது மனைவியும் மருத்துவமனைக்கு ஏற்றி அனுப்பப்பட்டனர். பொலிஸார் விசாரணைகளை முடித்து அங்கிருந்து புறப்பட்டனர்.

அதிகாலை 4.30 மணியளவில் 15 பேருக்கு மேற்பட்ட கும்பல், முகங்களை மூடிக்கட்டியவாறு வாள்களுடன் வீட்டு மதிலால் ஏறிக் குதித்து மீண்டும் நுழைந்துள்ளது. வீட்டிலிருந்த மதன், மற்றும் அவரது மருமகன்களான சகிர்தன், ரஞ்சித் மீதும் தாக்குதல் நடத்தியது. அவர்கள் வீட்டின் பின்பக்கமாக தப்பித்து ஓடியுள்ளனர்.

வீட்டிலிருந்து பிக்கப் வாகனம், மற்றொரு உந்துருளி உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பெற்றோல் குண்டுகளையும் வீட்டின் மீது வீசியுள்ளது. சுமார் 20 நிமிடங்களுக்கு அதிகமான நேரம் வீட்டில் நின்று தாக்குதல் நடத்திவிட்டு கும்பல் தப்பிச் சென்றுள்ளது. ஏ32 வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மற்றும் உந்துருளியில் ஏறி அந்தக் கும்பல் தப்பியது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும் சிறிது நேரத்திலேயே அவர்கள் அங்கு வந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு ஏற்றிச் செல்லப்பட்டனர். வாள்வெட்டுக்கு இலக்கானதில் ஒருவரது கை எலும்பு வரை பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மற்றையவரின் கழுத்தை வாளால் வெட்ட முற்பட்டபோது கையால் குறுக்கே மறித்துள்ளார். கையில் வாள் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது.

நுணாவிலைச் சேர்ந்த ஒருவர் மூன்று தினங்களுக்கு முன்னர் அலைபேசியூடாக மதனை அச்சுறுத்தியிருந்தார் எனவும், அவரே இந்தத் தாக்குதலை நடத்தினார் எனவும், அதிகாலை 4.30 மணிக்கு வந்த கும்பலில் அவரும் நின்றிருந்தார் எனவும் பொலிஸ் வாக்குமூலத்தில் மதன் குறிப்பிட்டுள்ளார். சம்பந்தப்பட்ட சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (5,9,159)

## சுருக்குவலைக்கு...

பணியாளர்களுக்கும் 14 நாள்களுக்குள் இடமாற்றம் வழங்கப்படும். இவ்வாறு மீன்பிடி அமைச்சர் விஜயமுனி சொய்சா உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரின் ஏற்பாட்டில், கொழும்பு மீன்பிடி அமைச்சருடன் முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடி அமைப்புக்கள் நேற்றுச் சந்திப்பு நடத்தின. இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்ததாவது:

மீன்பிடி அமைச்சருக்கு எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் சுருக்குவலைக்கு கடந்த காலங்களில் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இதனைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கை எமது மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. சட்டவிரோத செயற்பாடுகளால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுருக்குவலை, லைலா வலை போன்றவற்றுக்கு தடை விதிக்கக் கோரியே எமது மீனவர்கள் பெரும் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அப்போது நீங்கள் (அமைச்சர்) சுருக்குவலைக்கு தடை விதித்திருந்தீர்கள். மீளவும் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டு ஒரு பகுதி மீனவர்கள் சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். மேலும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட 3 பணியாளர்கள் அங்கிருந்து இடமாற்றப்படவேண்டும். ஒரு பணியாளர் 20 ஆண்டுகளாக அங்கேயே பணிபுரிகின்றார். அவர்களை மாற்றவேண்டும் என்று எமது இரண்டு கோரிக்கைகளையும் அமைச்சரிடம் முன்வைத்தோம்.

அமைச்சர் அதனை ஏற்றுக் கொண்டார். சுருக்குவலைக்கு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதியை உடனேயே நிறுத்துவதாக உறுதியளித்தார். பணியாளர்களின் இடமாற்றத்தை உடனே நடைமுறைப்படுத்த முடியாது. 14 நாள்கள் அவகாசம் வழங்கியே அதனைச் செயற்படுத்த முடியும். அதனைச் செய்வதாக அமைச்சர் உறுதியளித்தார் - என்றார்.

இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமாசத் தலைவர் பே.பேரின்பநாதன் உள்ளிட்ட 10 பேர் பங்கேற்றிருந்தனர். (5,105)

## யாழ்...

ஆவாக் குழு நுழைந்ததாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த தெரிவித்தார்.

மகிந்த அணி ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பு என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொங்கு தமிழ் நினைவுத் தூபி திறந்து வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக உபவேந்தரின் தலைமையில் நடைபெற்றுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பு அழிக்கப்பட்ட பின்னர் ஈழக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்காக, தமிழ் மக்களை அடிப்படைவாதத்திற்கு ஈர்ப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வே பொங்கு தமிழ் நிகழ்வாகும். அதன் தூபி திறப்பு விழா நிகழ்வின்போது பல்கலைக்கழகத்துக்குள் ஆவா குழு நுழைந்ததாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது மக்களுக்கு நிம்மதியாக வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் காலத்தைவிடவும் மோசமான சூழல் தற்போது அங்கு ஏற்பட்டுள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் அங்கு கடமையில் ஈடுபடுவதனைக் காணமுடியாதுள்ளது. வடக்கு மாகாணம் தற்போது பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது - என்றார். (5)

## பேருந்துக்...

இந்த கட்டண அதிகரிப்பு இன்று வியாழக் கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வருகிறது. ஆரம்பக் கட்டணமான 12 ரூபாவில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சீனி மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலைகள் நேற்று முதல் அதிகரித்துள்ளன. பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது. (5)

## குருதிக்...

தெரிவிக்கின்றனர். இந்தத் தகவல் காட்டுத் தீயாகப் பரவியதை அடுத்து பல்லாயி ரக்கணக்கான மக்கள் சாட்டிக்குப் படையெடுத்து அந்தக் காட்சியை கண்டனர். சமூக வலைத் தளங்களிலும் விடயம் வேகமாகப் பரவியது. சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தின் இந்த வருடத்துக்கான திருநாள் திருப்பலி நாளை நடைபெறவுள்ளது. கடந்த சில தினங்களாக அந்த ஆலயம் விழாக்கோலம் பூண்டு நவநாள்களுடன் வெகு சிறப்பாகத் திருநாளுக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் சிந்தாத்திரை அன்னையின் திருச் சொரூபத்தில் இருந்து குருதிக் கண்ணீர் வெளிப்படுவது அவதானிக்கப்பட்டது.

சாட்டி சிந்தாத்திரை பங்குத்தந்தையான அருட் திரு அன்ரனிப்பிள்ளை பிரான்சிஸ் லொசிங்டன் அடிகளாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் சம்பவத்தை உறுதிப்படுத்தினார். கத்தோலிக்கத் திருச்சபையின் இலங்கைக்கான உயர்பீடங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ம-23)

## போராடி வென்றது வீனஸ்

யாழ்ப்பாணம், செப். 20
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வீனஸ் அணி போராடி வெற்றிபெற்றது.
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் வீனஸ் அணி போராடி வெற்றிபெற்றது. (ம23)

## வளர்மதி அணி அரையிறுதியில்


யாழ்ப்பாணம், செப். 20
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஃகைதடி மத்தி வளர்மதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கைதடி நவபுரம் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளையாட்டு கழக ஏ அணி மோதியது. 16:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## பீற்றர்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

### 18 வயதுப்பிரிவு கோலூன்றிப்பாய்தலில்

# வழித்துத்துடைத்தது மகாஜனக் கல்லூரி!



யாழ்ப்பாணம், செப். 20
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 88ஆவது சேர் ஜோன்காபெற் தடகளத் தொடரில் 18 வயதுப் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் வீரர்கள் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று அனைத்துப் பதக்கங்களையும் கைப்பற்றினர்.
இலங்கைப்பாடசாலைகளுக்கு இடையிலான 88ஆவது சேர் ஜோன்காபெற் தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுகிர்தன் 4 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், எஸ்.ஜம்ஷான் 4 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஏ.ஜெனோஜன் 3.60 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)




## பாடும்மீன் விளையாட்டுக் கழகம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 20
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஐயனார் அணி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், செப். 20
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்டப்பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோலெதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
6:5 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் அணி வெற்றிபெற்றது.
(ம-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 20

**சரஸ்வதி சசநி கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைமாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கலைமதி வி.க கால்பந்தாட்டம்**


புத்தூர்கலைமதிவிளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எல்லாளன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**விநாயகர் சசநி தாச்சித் தொடர்**

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையமும் விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும்பிபிரிவினருக்கான ஆட்டத்தில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக் கழக சி அணி மோதவுள்ளது.
(ம-23)

## ஆப்கான் பங்களாதேஷ் இன்று எதிர்த்து மோதல்

ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் - பங்களாதேஷ் அணிகள் இன்று மோதவுள்ளன. நான்கு அணிகள் பங்குபற்றும் சுற்றுக்கு எந்த அணிகள் தகுதிபெறும் என்பது தெளிவாகிவிட்ட நிலையில் சம்பிரதாயபூர்வமானதாவே இன்றைய ஆட்டம் அமையவுள்ளது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் இரண்டும் லீக் சுற்றில் இலங்கையை வீழ்த்திய அணிகள். இதனால் 'பி' பிரிவில் முதலிடத்தைப் பிடிக்கும் அணி எது என்பது தொடர்பில் இன்றைய ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)




### தோல்வி பயம்காட்டியது ஹொங்கொங்

# தப்பியது இந்தியா!

ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தியா - ஹொங்கொங் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பெரும் போராட்டத்தின் மத்தியில் இந்திய அணி வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் ஹொங்கொங்கை இந்திய அணி ஊதித்தள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஹொங்கொங் வெளிப்படுத்திய போராட்டம் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹொங்கொங் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித் மற்றும் தவான் இருவரும் களமிறங்கினர். அணி 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித் சர்மா. தவானுடன் ராயிடு இணைந்து நிலையான ஆட்டத்தை வழங்கினார். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களுக்கும் அதிகமாகப் பகிரப்பட்டது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். அடித்தாடி சதம் கடந்தார் தவான். அணி 161 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராயிடு. தவான் 127 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். டோனி ஓட்டமெதையும் பெறாது அதிர்ச்சிகர வெளியேற்றம் கண்டார். அதன்பின்னர் இந்திய அணியின் சராசரியில் சிறிது பின்னடைவு ஏற்பட்டது. முடிவில் 7 இலக்குகளை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

பந்துவீச்சில் ஷா 3 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய ஹொங்கொங் அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்களான நிஸ்கட் கான், அனுஸ்மன் ராட் இருவரும் சிறந்த ஆரம்பத்தை வழங்கினார்கள். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைக் கடந்தது ஹொங்கொங் அணி. பன்னாட்டு அரங்குக்கு பழக்கப்பட்டவர்களைப் போன்று மிகமிக நேர்த்தியாக இருவரும் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தனர். இலக்குச் சரிவில்லாமல் ஹொங்கொங் 100 ஓட்டங்களைத் தொட்டது. இணைப்பாட்டமாக 174 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராட். அடுத்த சில நிமிடங்களில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார் நிஸ்கட்கான். ஆரம்ப வீரர்கள் வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து இந்திய அணி தனது ஆதிக்கத்தை ஆட்டத்தில் மீண்டும் கொண்டு வந்தது. குல்தீப் யாதவ், சாகல் இருவரும் ஓட்டமற்ற பந்துகளை தொடர்ச்சியாக வீசிக் கொண்டிருந்தனர். மறுமுனையில் இலக்குகளைச் சாய்த்தார் அறிமுக வீரர் கலீல் அகமட். முடிவில் 8 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களை மட்டும் பெற்றது ஹொங்கொங். 26 ஓட்டங்களால் வென்றது இந்தியா. (ம)


## ஆஸ்திரேலியாவுக்கு சிமித் மிகஅவசியம்

*வாஹ் சொல்கிறார்*

ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்ரீவ் சிமித் அவசியம் தேவை என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவரான ஸ்ரீவ் வாஹ்.

ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடியது. இந்தத் தொடரின்போது பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர் இருவருக்கும் தலா ஓர் ஆண்டுத் தடையும் பான்கிறொப்டுக்கு 9 மாதங்கள் தடையும் விதிக்கப்பட்டது. பலரும் சிமித் மீதான தடை நீக்கப்பட்டு அவர் மீண்டும் பன்னாட்டுக் கிரிக்கெட் அரங்குக்குத் திரும்ப வேண்டும் என்று வலியுறுத்திவருகின்றனர். இந்த நிலையில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் வாஹ். சிமித் ஆஸ்திரேலிய அணிக்கு அவசியம் தேவை என்று வலியுறுத்தினார்.

"பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் 3 வீரர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. சிமித் தனது தவறை உணர்ந்து கண்ணீர் மல்க மக்களிடம் மன்னிப்பு கேட்டுவிட்டார். ரசிகர்களும் அவரை மன்னித்து விட்டனர். சிமித் மீது ரசிகர்கள் பேரன்பாக இருக்கிறார்கள். சிமித், தான் செய்த தவறுக்கு அதிகபட்சமான விலையைக் கொடுத்து விட்டார். மீண்டும் ஆஸ்திரேலிய அணிக்குள் சிமித்தை விளையாட அனுமதித்தால், வழக்கம்போல் உத்வேகத்துடனும், ஓட்டங்களைச் சேர்க்கும் ஆசையுடன் விளையாடுவார். சிமித் ஆஸ்திரேலிய அணிக்குள் மீண்டும் வரவேண்டும்" என்று வாஹ் மேலும் தெரிவித்தார். (ம)



## இந்தியாவுக்குச் சாதகமாக அட்டவணை மாற்றியமைப்பு

*அகமட் குற்றச்சாட்டு*

"ஆசியக் கிண்ணத் தொடருக்கான அட்டவணை இந்தியாவுக்குச் சாதகமாக மாற்றியமைக்கப்பட்டது" என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பிராஸ் அகமட் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான ஆட்டம் நேற்று நடைபெற்றது. அந்த ஆட்டம் ஆரம்பமாவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அகமட்.

"ஆசியக் கிண்ணத் தொடருக்கான அட்டவணையை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், இந்தியா 'ஏ' பிரிவு ஆட்டத்தில் தோற்றாலும் கூட, தொடர்ந்து டுபாயில் விளையாட முடியும். அபுதாபிக்கும் டுபாய்க்கும் இடையில் பயணம் செய்யும் பிரச்சினை உள்ளது. 90 நிமிடங்கள் பயணம் செய்து, பின்னர் விளையாட வேண்டும். அதன்பின் ஒருநாள் இடைவெளியில் அடுத்த ஆட்டத்தில் களமிறங்க வேண்டும். இது தவது. அட்டவணை என்பது அனைத்து அணிகளுக்கும் ஒரே மாதிரியாக இருந்திருக்க வேண்டும். ஏன் இவ்வாறான அட்டவணை தயாரிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கையில் எடுக்க வேண்டும்" என்று அகமட் மேலும் தெரிவித்தார்.

ஆசியக் கிண்ணத் தொடரின் லீக் சுற்று அட்டவணையின் படி இந்திய அணி அடுத்தடுத்த நாள்களில் தொடர்ந்து விளையாட வேண்டியிருந்தது. இதன்படி ஹொங்கொங்குக்கு எதிராக நேற்றுமுன்தினமும் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்றும் அந்த அணி களமிறங்கியது. இதனால் லீக் சுற்று அட்டவணை இந்தியாவுக்கு எதிராகத் தயாரிக்கப்பட்டது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்கனவே குற்றச்சாட்டை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புவனேஸ்வர், குல்தீப், சாகல் இருக்கும்போது அனுபவமற்ற பந்துவீச்சு என்ற ரோகித் சர்மா

இந்திய அணிக்கு ஹொங்கொங் தோல்வி பயம்காட்டிய விவகாரத்துக்குக் காரணம், "இந்திய அணியின் பந்துவீச்சு அனுபவ முதிர்ச்சி அற்றதாலேயே" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா.

ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ரோகித்.

"ஆட்டத்தை வெல்வது முக்கியம். அதை நிகழ்த்தி விட்டோம். நிச்சயம் எளிதல்ல என்பதை அறிந்திருந்தோம். எம்மிடம் இருப்பது அனுபவமற்ற பந்து வீச்சு வரிசை. ஆனால் அது ஒரு சாக்கல்ல. இன்னும் கொஞ்சம் அடித்து ஆடியிருக்க வேண்டும். அதுதான் நாம் செய்த தவறு. இது கற்றுக் கொள்ளும் இடம். ஆனால் ஆட்டத்தின் எந்த நிலையிலும் எங்கள் மீது சந்தேகம் ஏற்படவில்லை. ஆனால் ஹொங்கொங் அணியைப் பாராட்டுகிறேன். ஆரம்ப வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள்" என்று ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)





**வேலையாள் தேவை**
கோழி சுத்தம் செய்வதற்கு 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத் தக்கது.
158/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498



தேசியமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தங்கப்பதக்கத்தையும், 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும் வென்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அணியினர் கல்லூரிச் சமூகத்தால் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.
(ம-23,422)

தங்கமான
உறவுகள்

"தங்கத்தைப் போல பெறுமதிமிக்க உங்கள் நெருக்கமான உறவுகளுக்கு பொருத்தமான வகையில், அவசரத் தேவைகளுக்கு நீங்கள் அடகு வைக்கும் தங்க நகைகளுக்கு அதிக பாதுகாப்பையும், சிறந்த பெறுமதியையும் வழங்க நாம் எப்போதும் தயார்"

உங்கள் தங்க நகைகளுக்கு குறைந்த வட்டியில் அதிக பணம்

24K - ரூ. 41,000.00

22K - ரூ. 36,500.00

மாதாந்த வட்டி வீதம் 1.58% மட்டுமே

பொற் கடன் COMMERCIAL BANK

தங்கமான உறவுகளை மதிக்கின்ற கொமர்ஷல் வங்கியின் பொற் கடன் சேவை.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. Fitch Rating - AA (lka) +94 112 353 333 www.combank.lk

நீங்கள் எமக்கு புகழ் தேடித் தந்தீர்கள்!

ஆசிய வலைப்பந்தாட்ட
சம்பியன்ஷிப் 2018 வெற்றிக்கிண்ணத்தைச்
சுவீகரித்த இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணியை
CDB
பாராட்டுகின்றது.



வெற்றி அணியின் அங்கத்தவரான CDBயின் எழிலேந்தினி சேதுகாவலர் குறித்து நாம் மிகவும் பெருமிதம் அடைகிறோம்.

CDB உங்கள் நண்பன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.